# கத்தோலிக்க திருமறை



## தரம் 11

ல்வி வெளியீட்டுத் திணைக்களம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழ் அரிச்சுவடி

| | அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க் | க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| ங் | ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| ச் | ச | சா | சி | சீ | சு | சூ | செ | சே | சை | சொ | சோ | சௌ |
| ஞ் | ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| ட் | ட | டா | டி | டீ | டு | டூ | டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| ண் | ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| த் | த | தா | தி | தீ | து | தூ | தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| ந் | ந | நா | நி | நீ | நு | நூ | நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| ப் | ப | பா | பி | பீ | பு | பூ | பெ | பே | பை | பொ | போ | பௌ |
| ம் | ம | மா | மி | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| ய் | ய | யா | யி | யீ | யு | யூ | யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| ர் | ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| ல் | ல | லா | லி | லீ | லு | லூ | லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| வ் | வ | வா | வி | வீ | வு | வூ | வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| ழ் | ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| ள் | ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
| ற் | ற | றா | றி | றீ | று | றூ | றெ | றே | றை | றொ | றோ | றௌ |
| ன் | ன | னா | னி | னீ | னு | னூ | னெ | னே | னை | னொ | னோ | னௌ |

ஆய்த எழுத்து ஃ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க திருமறை

## தரம்

## 11

**கல்வி வெளியீட்டுத் திணைக்களம்**



சகல பாட நூல்களையும் இலத்தரனியல் ஊடாகப் பெற்றுக் கொள்வதற்கு www.edupub.gov.lk வலைத்தளத்தை நாடுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் பதிப்பு - 2015

பதிப்புரிமையுடையது.

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால்
இல 227/30 நிர்மாண மாவத்தை, நாவல வீதி, நுகேகொடையில்
அமைந்துள்ள நனிலா பப்லிகேஷன் (பிரேவேட்) லிமிட்டட்
அச்சகத்தினால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய கீதம்

சிறீ லங்கா தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நம தலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதேர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல் செறி துணிவருளே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தாய் மக்கள் நாமாவோம்
ஒன்றே நாம் வாழும் இல்லம்
நன்றே உடலில் ஓடும்
ஒன்றே நம் குருதி நிறம்

அதனால் சகோதரர் நாமாவோம்
ஒன்றாய் வாழும் வளரும் நாம்
நன்றாய் இவ் இல்லினிலே
நலமே வாழ்தல் வேண்டுமன்றோ

யாவரும் அன்பு கருணையுடன்
ஒற்றுமை சிறக்க வாழ்ந்திடுதல்
பொன்னும் மணியும் முத்துமல்ல - அதுவே
யான்று மழியாச் செல்வமன்றோ.

ஆனந்த சமரக்கோன்
கவிதையின் பெயர்ப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடநூல் கருப்பொருட் பாடல்

மனதில் பூ பூத்திடும் புதிய புத்தகம்
வாசமே
கண்களில் காட்சி தோன்றும் எமது
உலகமே வெளிச்சமே…//

புத்தகம் அறிவு வரும் முகங்களில்
மகிழ்வு தரும்
புதிய புத்தகம் புதிய பொலிவு பெறும்
தினமுமே.

புத்தகம் கண்கள் தானே அதை
காப்பது போலவே
அறிவைத் தரும் புத்தகங்களை
மகிழ்வுடன் காப்போமே.

மனதில் பூ பூத்திடும் புதிய புத்தகம்…//

பாடலாசிரியர் :- சரத் குமார பெரேரா
இசை :- மகேஷ் தெனிப்பிட்டிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கௌரவ கல்வி அமைச்சரின் செய்தி

உலகில் இலவசக் கல்வி வரப்பிரசாதத்தை வழங்கும் நாடுகள் மத்தியில் இலங்கை முன்னிலையிலுள்ள ஒரு நாடாக இருப்பது பாக்கியமாகும். நீங்களும் அவ்வுரிமையைப் பெற்றுக் கொள்வதற்கான பாக்கியம் பெற்ற ஒரு மாணவனாயிருக்கிறீர்கள். உங்கள் எதிர்காலம் வெற்றிகரமாக அமைந்து நாட்டிற்கும் உலகிற்கும் பயன்மிக்கோராவதைக் காண்பதன் பொருட்டே அரசு இந்நூலை இலவசமாக வழங்குகின்றது. இதற்காக அரசிற்குப் பெரும் செலவு ஏற்படுகின்றது என்பதை நீங்கள் நினைவில் இருத்திக் கொள்ள வேண்டும். இந்தவகையில் உங்கள் பொறுப்பும் கடமையும் யாதெனில், இந்நூலை மிக நன்றாகப் பயன்படுத்தி சரியான அறிவினைப் பெற்றுக் கொள்வதாகும். அதன் மூலம் நாட்டிற்குச் செயற்திறன் மிக்க பிரசையாவதற்குத் தேவையான பலம் மிக்க அத்திபாரமொன்றை இட்டுக் கொள்வதற்கு உங்களுக்கு முடியுமாக இருக்கும்.

இலங்கையும் உலகின் ஏனைய நாடுகளுடன் சேர்ந்து சகல துறைகளிலும் முன்னிலை வகிக்க வேண்டும். அப்பயணத்தில் அறிவில் இற்றைப்படுத்தப்பட்ட உங்களைப் போன்ற மாணவர் பரம்பரையொன்று உருவாகுவது நாட்டின் அபிவிருத்திக்குப் பெரும் பலமாக அமையும்.

**அகில விராஜ் காரியவசம்**
கல்வி அமைச்சர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

ஒவ்வொரு பாடத்தினூடாகவும் அறிவு மேம்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு பாடத்தினதும் பாடத்திட்டம் எட்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை சீர்திருத்தப்படுவது உங்களுக்கு அப்புதிய அறிவை வழங்குவதற்காகவே. திருத்தப்பட்ட புதிய பாடத்திட்டத்திற்கு ஏற்ப பாடநூல்களை ஆக்கும் பொறுப்பு கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தைச் சாரும். புதிய பாடத்திட்டத்திற்கு ஏற்ப புதிதாக ஆக்கப்பட்ட பாட நூல்கள் 6 ஆம் தரம் மற்றும் 10 ஆம் தரங்களுக்கு 2015 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப் பட்டது. அதன் அடுத்து கட்டமாக 2016 ஆம் ஆண்டில் 1 ஆம் தரம் 7 ஆம் தரம் மற்றும் 11 ஆம் தரங்களுக்கு புதிய பாடநூல்கள் அறிமுகப்படுத்தப்படுகின்றன.

உங்களின் எதிர்காலத்தின் நன்மைக்குத் தேவையான அறிவைத் தரும் இலக்குடன் இப் பாடநூல்கள் உங்களுக்கு வழங்கப்படுகிறன. இவற்றை நன்றாகப் பயன்படுத்திப் பாடங்களைக் கற்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இலவசமாக பாடநூல்கள் வழங்குவதன் நோக்கம் நிறைவேறுவது உங்களின் உழைப்பினால் மட்டும் என்பதை நினைவு கூர விரும்புகிறேன்.

இப்பாடநூலை ஆக்குவதில் பங்களிபுச் செய்த எழுத்தாளர் குழுவிற்கும், பதிப்பாசிரியர் குழுவிற்கும், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

திஸ்ஸ ஹேவாவிதான
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
'இசுருபாய'
பத்தரமுல்ல.
2015.07.27



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்காணிப்பும் மேற்பார்வையும்

**திரு. திஸ்ஸ ஹேவாவிதான**

கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## வழிகாட்டல்

**திருமதி. கே.வி. நந்தினி ஸ்ரீயாலதா**

ஆணையாளர் (அபிவிருத்தி)

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## ஆலோசனைகள்

**மேதகு கலாநிதி மக்ஸ்வெல் சில்வா ஆண்டகை**

**மேதகு கலாநிதி ஒக்ஸ்வெல்ட் கோமிஸ் ஆண்டகை**

## இணைப்பாக்கம்

**திரு. சி. காண்டீபன்**

அபிவிருத்தி அலுவலர்

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

**திருமதி.ஆர். டி . விஜய விக்கிரம**

பிரதிக் கல்வி ஆணையாளர் (அபிவிருத்தி)

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## பதிப்பாசிரியர் குழு

**அருட்பணி. அந்திரியாஸ் பெர்ணான்டோ அ.ம.தி**

உதவி விரிவுரையாளர் - சமயப்பிரிவு

தேசிய கல்வி நிறுவகம் - மகரகம.

**அருட்பணி ஏ. ஆர். லொயிட் சாந்திகுமார்**

விரிவுரையாளர்

அக்குவைனாஸ் கல்லூரி

கொழும்பு - 8

**அருட்பணி பியால்.ஜானக பர்னாந்து**

பணிப்பாளர்

தேசிய கத்தோலிக்க மறைக்கல்வி மத்திய நிலையம், கொழும்பு - 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அருட்பணி எம்.ஜி.எல். பர்னாந்து**

உதவக் கல்வி பணிப்பாளர் - சமயப்பிரிவு

கல்வியமைச்சு.

**அருட்பணி. டி.எம்.டீ.ஏ.ஜீட்சி.தஸநாயக்க**

சிரேஷ்ட விரிவுரையாளர்

வயம்ப தேசிய கல்வியிற் கல்லூரி, பிங்கிரிய.

## நூலாக்கக் குழு

**அருட்சகோதரி டபிள்யூ. ஜே. மேரி ஜசிந்தா பெர்னாண்டோ**

ஓய்வு பெற்ற அதிபர்

ராஜகிரிய றோமன் கத்தோலிக்க மகா வித்தியாலயம்.

**செல்வி ஜே. பிலோமின்**

ஆசிரிய ஆலோசகர்

மட்டக்களப்பு வலயம்.

**செல்வி டெய்சி இம்மகுலேற் ஜோசவ்**

ஆசிரிய ஆலோசகர்

கொழும்பு - நீர் கொழும்பு வலயம்.

**திரு.ரி.ஐ. ரங்கநாயகம்**

ஆசிரியர்

புனித அந்தோனியார் மகளிர் மகா வித்தியாலயம், கொழும்பு - 3

**அருட்சகோதரி என்.சி.மேரி இமல்க்கா**

ஆசிரியர்

புனித ஜோசப் ஆண்கள் பாடசாலை, நுகேகொட.

**திரு.எஸ்.ஜி.கே.டீ.எல்.சி.பிரசாத்**

ஆசிரிய ஆலோசகர்

வலயக் கல்வி காரியாலயம் - ஹோமாகம.

**திருமதி.டபிள்யூ.கே.எம்.ஐ.எஸ்.கே.பர்னாந்து**

ஆசிரிய ஆலோசகர் - ஓய்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருமதி. மரினி தம்மிக பெரேரா**

ஆசிரிய ஆலோசகர்

மாளிகாவத்த கோட்டக் கல்விக் காரியாலயம்.

**டெக்லா பியானி பெரேரா**

நீர்கொழும்பு கிறிஸ்து ராஜா தேசிய பாடசாலை

ஜா-எல.

## பதிப்பாசிரியர் - மொழி

**திருமதி. பிறெமினி மகாவலிராஜன்**

கொ/இராமனாதன் இந்து மகளிர் கல்லூரி

கொழும்பு - 4.

## சரவை நோக்கு

**செல்வி நவரட்ணம் தர்ஷினி**

நீதி அமைச்சு

உயர் நீதிமன்ற கட்டடத்தொகுதி

கொழும்பு - 12.

## கணினி வடிவமைப்பு

**திரு.சத்திவேல் சத்தியசீலன்**

கணினி உதவியாளர்

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

**திரு.ந.துஷாந்தன்**

கணினி உதவியாளர்

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## அட்டைப்படம்

**திரு.சத்திவேல் சத்தியசீலன்**

கணினி உதவியாளர்

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

**திரு. சஜித் இஷான் எட்டியாராய்ச்சி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | |
|---|---|
| 1. ஐந்நூல் | 1 |
| 2. இணைத் திருமுறை நூல்கள் | 6 |
| 3. இஸ்ரயேல் இறைவாக்கினர்கள் | 9 |
| 4. நற்செய்தி | 15 |
| 5. படைப்பு | 20 |
| 6. பாவம் | 24 |
| 7. விடுதலைப்பயணம் | 32 |
| 8. சீனாய் உடன்படிக்கை | 39 |
| 9. தூய திருமுழுக்கு யோவான் | 45 |
| 10. இயேசுவின் இறையாட்சிப் பணி | 53 |
| 11. இறை ஆட்சி | 61 |
| 12. திருமுழுக்கும் உறுதிப்பூசுதலும் | 68 |
| 13. குணமளிக்கும் அருளடையாளங்கள் | 76 |
| 14. குருத்துவம் | 84 |
| 15. திருமணம் | 89 |
| 16. துறவற வாழ்வு | 94 |
| 17. பொதுநிலையினர் மறைத்தூதுப் பணி | 99 |
| 18. சூழலைப் பாதுகாத்தல் | 107 |
| 19. சமாதானம் | 111 |
| 20. ஆன்மீக உடல் சார்ந்த இரக்கச் செயல்கள் | 115 |
| 21. திருச்சபையின் சட்டங்கள் | 120 |
| 22. இயேசு கற்பித்த செபம் | 124 |
| 23. மரியன்னை பக்தி | 130 |
| 24. திருப்புகழ்மாலை | 138 |
| 25. தியானம் | 143 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1 ஐந்நூல்

ஆசிரியர் :- பிள்ளைகளே! இன்று நான் உங்களுக்கு முக்கியமான ஒரு பாடம் கற்பிப்பதற்காக ஒரு புத்தகம் கொண்டு வந்திருக்கின்றேன். இது திருவிவிலியத்தின் முதல் ஐந்து நூல்களின் தொகுப்பு. இதில் (உலகத்தின்) ஆரம்பம், மனிதப் படைப்பு, மனிதனின் வீழ்ச்சி, இறைவன் குலமுதுவர்களைத் தெரிவுசெய்தல், இஸ்ரயேல்இனம் அடிமைத்தனத்திற்கு உட்படல் மற்றும் மோசேயின் தலைமைத் துவத்தில் அவர்கள் வாக்களித்த நாட்டை நோக்கிச் செல்லல் போன்ற பல முக்கியமான சம்பவங்கள் அடங்கியுள்ளன. உலகப் படைப்பு, மற்றும் மனிதனின் வீழ்ச்சி என்பன (உவமை) புனைக் கதைகள் அல்லது புராணக் கதைகள் வடிவில் சொல்லப்படுவதால் நாம் அவை பற்றி ஆராய்வதை விடுத்து அவற்றின் மூலம் முன்வைக்கப்படும் இறையியல் செய்திகளைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

மாறி :- ரீச்சர், அவை பற்றி அறிந்துகொள்ள எங்களுக்கு விருப்பமாக இருக்கின்றது.

ஆசிரியர் :- நன்று உங்களது ஐந்து நண்பர்கள் இதைப் பற்றி கூறுவதற்கு ஆயத்தமாக உள்ளார்கள்.

நோயல் :- எனது பெயர் தொடக்க நூல், உலகத்தினதும், மனிதனினதும் ஆரம்பம் பற்றிக் கூறுபவன் நானே. உலகம் படைக்கப்பட்டது எப்படி எனக் கூறுவது எனது நோக்கமல்ல. மாறாக ஆண்டவராகிய கடவுளே இவ்வுலகின் படைப்பாளி என எடுத்துரைப்பதே எனது நோக்கமாகும். எனது செய்தியோ நிலையானது எக்காலத்திற்கும் உரியது.


பீற்றர் :- விடுதலைப்பயணம் என்பது எனது பெயராகும். இறைவனால் தேர்ந் தெடுக்கப்பட்ட இஸ்ரயேல் மக்களை எகிப்திய அடிமைத்தனத்தில் இருந்து மீட்டு, வாக்களிக்கப்பட்ட நாட்டை நோக்கி அழைத்துச் சென்றதைப் பற்றி எடுத்துரைப்பவன் நானே. இது மிகவும் முக்கியமான ஒரு நிகழ்வாகும். எனது அனுபவத்தில் இருந்தே ஐந்நூல் உருவானது.

ஜேம்ஸ் :- எனது பெயர் லேவியர் இஸ்ரயேல் மக்கள் வழிபாட்டின் போது பின்பற்ற வேண்டிய சட்டங்கள், ஒழுங்குகள் பற்றிய விடயங்களை நானே முன்வைத்துள்ளேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெவின் :- எண்ணிக்கை என்பது எனது பெயர். இஸ்ரயேல் மக்களின் பாலைவனப் பயணத்தின் போது மோசேயால் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்புப் பற்றிய விபரங்களை நான் எழுதியுள்ளேன். பாலைவனப் பயணம் மிகவும் கடினமானதாகவும், அதேவேளை இறையனுபவம் நிறைந்ததாகவும் இருந்தது.

கத்தறீன் :- என்னை இணைச்சட்ட நூல் என அழைப்பர். இது மோசேயினால் இஸ்ரயேல் மக்களுக்குக் கொடுக்கப்பட்ட இறுதி அறிவுரைகளின் தொகுப்பாகும். ஆண்டவரில் நம்பிக்கை கொண்டு அவருடைய வார்த்தைகளின் படி வாழ வேண்டும் என்பதையே நான் கூறுகின்றேன். இறைவார்த்தைகளைக்கேட்டு அதன்படி நடந்தால் அனைவருக்கும் இறையாசீர் கிடைக்கும்.



1.1 ஐந்நூல்

ஆசிரியர் :- மிக நல்லது. இந்த அறிமுகத்துடன் நாம் பாடத்தை ஆரம்பிப்போம். திருவிவிலியத்தில் இடம்பெறும் தொடக்கநூல், விடுதலைப்பயணம், லேவியர், எண்ணிக்கை, இணைச்சட்டம் ஆகிய ஐந்து நூல்களுமே ஐந்நூல் அல்லது பஞ்சாகமம் என அழைக்கப்படுகிறது. ஐந்நூல் எபிரேய மொழியில் ''தோரா'' என அழைக்கப்படுகிறது. அதன் பொருள் திருச்சட்டம் அல்லது படிப்பினை என்பதாகும். ''தோரா'' திருச்சட்டநூல், நீதிச்சட்டம், மோசேயின் சட்டம் என்ற பெயர்களாலும் அழைக்கப் படுகின்றன. இஸ்ரயேல் மக்கள் பாரம்பரியமாகக் கொண்டிருந்த இறை நம்பிக்கை, அனுபவங்களின் அடிப்படையிலேயே ஐந்நூல் தோற்றம் பெற்றுள்ளது. ஐந்நூல் உருவாகுவதற்கு யாவே (J), ஏலோகிம் (E), இணைச்சட்டம் (D), குரு (P), ஆகிய பாரம்பரியங்கள் அல்லது மரபுகள் பங்களிப்புச் செய்துள்ளன என்பது விவிலிய வல்லுனர்களின் கருத்தாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாவே பாரம்பரியம் (J மரபு)

இப்பாரம்பரியத்தில் இறைவன் யாவே என்ற பெயரால் அழைக்கப்படுகின்றார். யாவே என்றால் 'ஆண்டவராகிய கடவுள்' என்பது பொருள். இதன் இலக்கிய நடை (மொழிநடை) எளிமையானது, தெளிவானது, பல்தன்மை கொண்டது, கதைப்பாணியிலும், நாடகப்பாணியிலும் அமைந்துள்ளது. கற்பனை பண்ணிப் பார்க்கக் கூடியது. இம்மரபிற்குரிய கதைகளாகப் பின்வருவன காணப்படுகின்றன.

- படைப்புப்பற்றிய இரண்டாம் கதை (தொ.நூ 2:4-25)
- ஆதாம் ஏவாள் கதை (தொ.நூ 3)
- காயின் ஆபேல் கதை (தொ.நூ 4 )

இறைவன் மனிதனுடன் மிக நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார், என்பதை இம்மரபு வலியுறுத்துகின்றது. உதாரணமாகக் கடவுள் மனிதனை அழைத்து நீ எங்கே இருக்கின்றாய்? எனக் கேட்டார் (தொ.நூ 3:9 ).

நாமும் இறைவனை நெருங்கிச் சென்று இறை அன்பைச் சுவைப்போம்.

## ஏலோகிம் பாரம்பரியம் (E மரபு)

இங்கு இறைவன் "ஏலோகிம்" என்னும் பெயரால் அழைக்கப்படுகின்றார். இறைவன் மனிதனைவிட மேன்மையும், மகத்துவமும் மிக்கவராகக் காண்பிக்கப் படுகின்றார். உதாரணம் "இங்கே அணுகி வராதே.......... நீ நின்று கொண்டிருக்கின்ற இந்த இடம் புனிதமான நிலம்" என மோசேக்கு அறிவிக்கப்படுகிறது. (வி.ப 3:5). இங்கு இறைவன் மனிதனுடன் காட்சிகள், கனவுகள் மற்றும் வானதூதர்கள் வழியாகப் பேசுகிறார். இதன் இலக்கிய நடை குறுகியதாக இருப்பதோடு, நேரடியாக விளங்கிக் கொள்ளக் கூடியதாகவும் இருக்கிறது.

இம் மரபுக்குரிய சம்பவங்களாக, பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

- ஈசாக் பலியிடப்படல் (தொ.நூ 22:1-19)
- யாக்கோபு பெத்தலில் கண்ட கனவு (தொ.நூ 28:10-20)

இறைவன் எம் அன்றாட வாழ்க்கை அனுபவங்கள் மூலம் எம்மோடு பேசு வதால் அவரது குரலுக்குச் செவிசாய்க்க நாம் பழகிக் கொள்ள வேண்டும்.

## இணைச்சட்ட பாரம்பரியம் (D மரபு)

இம்மரபு இணைச்சட்ட நூலுக்கு மட்டுமே உரியதாகும். இதன் மொழிநடை அறிவுரைப்பாணி கொண்டது. இப்பாரம்பரியம் இறைவனுடன் செய்துகொண்ட உடன்படிக்கைக்கு உண்மையுள்ளவர்களாக வாழ்ந்து ஒரே இறைவனை மட்டுமே வணங்க வேண்டும் என அறிவுரை கூறுகின்றது. (இ.ச 6:4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாமும் உண்மையான ஒரே இறைவனை மட்டுமே வழிபட்டு அவருக்கே உரிய ஆராதனையையும், மகிமையையும் கொடுப்போம்.

## குருக்கள் பாரம்பரியம் (P மரபு)

இப்பாரம்பரியத்தில் இறைவன் அதிமேன்மை வாய்ந்தவராகக் காட்டப்படுகின்றார். இதில் குருக்களின் படிப்பினைகள் காணப்படுவதால் சமய ரீதியான வழிபாடுகள், சடங்குகள் பற்றி விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இம்மரபுக்குரிய சம்பவங்களாகப் பின்வருனவற்றைக் குறிப்பிடலாம்.

- படைப்புப் பற்றிய முதல் கதை (தொ.நூ 1:1-2:4)
- நோவாவுடனான உடன்படிக்கை (தொ.நூ 9:1-17)

இறைவன் உலகை ஆறு நாட்களில் படைத்து ஏழாம் நாள் ஓய்ந்திருந்ததால் அந்நாளைத் (சபாத்) தூய்மையாகக் கடைப்பிடிப்பது பற்றி கவனம் செலுத்தப்படுகின்றது.

நாமும் இறைவனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஞாயிறு தினத்தைத் தூய்மையாகக் கடைப்பிடிப்போம்.

## ஐந்நூலின் முக்கியத்துவம்

அதிகமான இறையியல் சிந்தனைகளைக்கொண்ட ஐந்நூல், உலகைப் படைத்தவராகிய ஒரே இறைவனை மட்டுமே ஆராதிக்க வேண்டும் என்பதை இஸ்ரயேல் மக்களுக்கு மட்டுமல்லாது, எமக்கும் எடுத்துரைக்கின்றது. இறைவன் அன்பு, இரக்கத்தின் நிமித்தம் உலகின் மீட்புக்காக இஸ்ரயேல் இனத்தைத் தெரிந்து கொண்டார். இறைவன் இஸ்ரயேல் மக்களை எகிப்திய அடிமைத்தனத்தில் இருந்து மீட்டு, வாக்களிக்கப்பட்ட நாட்டிற்கு அழைத்துச் சென்றதனூடாகக் குலமுதுவர்களுக்கு கொடுக்கப்பட்ட வாக்குறுதி நிறைவேற்றப்பட்டது. இறைசட்டத்தின் மூலம், பலவீனமான மனிதர்கள் இறைவனைச் சார்ந்து வாழ்ந்து, அவரது ஆசீரைப் பெற தகுதியுடையவராகின்றனர்.

படைத்தவராகிய இறைவனின் கட்டளைகளையும், சட்டங்களையும் பின்பற்றி இறையாசீருக்கு உரித்துடையவர்கள் தகுதியுடையவராவோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செயற்பாடு**

1. ஐந்நூலில் செல்வாக்குச் செலுத்திய பாரம்பரியங்கள் நான்கைக் குறிப்பிடுக.
2. ஒவ்வொரு பாரம்பரியத்தில் இருந்தும் உமது வாழ்க்கைக்குப் பெற்றுக் கொள்ளக் கூடிய வழிகாட்டல்கள் ஒவ்வொன்று எழுதுக.
3. ஐந்நூலின் முக்கியத்துவம் பற்றி மூன்று வசனங்கள் எழுதுக.
4. ஐந்நூலைப் படிப்பதனால் உமது வாழ்கைக்குக் கிடைக்கும் பயன்கள் ஐந்து எழுதுக.

**வாழ்க்கைக்கு**



- ✝ பிரபஞ்சத்தின் படைப்பாளராகிய ஒரே இறைவனை மட்டுமே ஆராதிப்போம்.
- ✝ எம்மை அன்பு செய்யும் இறைதந்தைக்குப் பிரதியன்பு காட்டுவோம்.
- ✝ இறைதந்தை எமது வாழ்வில் நெருக்கமாக உள்ளார் என்பதை உணர்ந்து கொள்வோம்.
- ✝ ஞாயிறு தினத்தைத் தூய்மையாகக் கடைப்பிடிப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2 இணைத் திருமுறை நூல்கள்

**திருவிவிலிய நூல்களின் எண்ணிக்கை**

| | பழைய ஏற்பாடு | புதிய ஏற்பாடு | மொத்தம் |
|---|---|---|---|
| யூத விவிலியம் | 39 | - | 39 |
| கிறிஸ்தவ விவிலியம் | 39 | 27 | 66 |
| கத்தோலிக்க திருவிவிலியம் | 46 | 27 | 73 |

கத்தோலிக்கத் திருவிவிலியத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட 73 நூல்களும் இறை ஏவுதலால் எழுதப்பட்டவையாகும். பழைய ஏற்பாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நூல்களின் எண்ணிக்கை தொடர்பான பிரச்சினை காணப்படுகின்றது.

யூதர்களும், கத்தோலிக்கம் அல்லாத கிறிஸ்தவ சபையினரும் பழைய ஏற்பாட்டு நூல்களாக 39 நூல்களை மட்டுமே ஏற்றுக்கொண்டுள்ளனர். கத்தோலிக்கர் ஏற்றுக்கொண்ட பழைய ஏற்பாட்டு நூல்களின் எண்ணிக்கை 46 ஆகும். கிரேக்க மொழிபெயர்ப்பாகிய செப்துவாஜிந் பிரதி மூலமாகவே இந்த 46 நூல்களும் பெறப்பட்டன. யூதர்கள் மத்தியில் இருந்தே இப்பிரதிகள் தோன்றின. இங்கு யூதர்களும், கிறிஸ்தவர்களும் பயன்படுத்தியது எபிரேய பிரதியாகும். இது மசோரோடிக் பிரதி எனவும் அழைக்கப்படுகிறது.

இதன்படி கத்தோலிக்கத் திருவிவிலியத்தில் மேலதிகமாக 7 நூல்கள் சேர்க்கப்பட்டுள்ளன. அவை இணைத் திருமுறை நூல்கள் என அழைக்கப்படுகின்றன. அவை தோபித்து, யூதித்து, சாலமோனின் ஞானம், சீராக்கின் ஞானம், பாரூக், மக்கபேயர் முதல் நூல், மக்கபேயர் 2ம் நூல் என்பவையாகும்.

திருமுறை நூல்களுக்கு இணையானவை என்ற வகையில் இரண்டாவதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நூல்களே இவையாகும். ஆயினும் இவை மசோரோடிக் பிரதிகள் தயாராவதற்கு முன்பே செப்துவாஜிந் பிரதிகளில் உள்ளடக்கப்பட்டிருந்தது. ஆரம்பத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நூல்கள், இணைத்திருமுறை நூல்கள் என வேறுபாடு காணப்படவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செப்துவாஜிந் பிரதி

எபிரேய மொழியில் எழுதப்பட்ட பழைய ஏற்பாடு கி.மு 3ஆம் நூற்றாண்டில் கிரேக்க மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது. நிமிதிரியஸ் என்னும் 2ஆம் தொலமி அரசன் 12 கோத்திரங்களிலும் இருந்து 6பேர் வீதம் 72 சட்டவல்லுனர்களைத் தெரிந்தெடுத்து, அவர்களிடம் மொழி பெயர்ப்புப் பணியை ஒப்படைத்தார். அவ்வாறு செய்யப்பட்ட மொழிபெயர்ப்பே செப்துவாஜிந் (LXX எழுபது) என அழைக்கப்படுகின்றது. அவர்கள் அதனைத் தனித்தனியே செய்த போதிலும் அம்மொழி பெயர்ப்புகள் 72ம் ஒரே விதமாக இருந்ததாகக் கூறப்படுகின்றது. செப்துவாஜிந் பிரதியிலுள்ள 46 நூல்களையுமே கத்தோலிக்க திருச்சபை பழைய ஏற்பாடாக ஏற்றுப் பயன்படுத்துகின்றது.

## இணைத்திருமுறை நூல்கள் இறை ஏவுதலால் எழுதப்பட்டன என்பதற்கான சான்றுகள்

1. புதிய ஏற்பாட்டின் எழுத்தாளர்கள் தங்கள் நூல்களை எழுதிய போது கிரேக்கப் பிரதிகளைப் பயன்படுத்தினர். அவர்கள் பயன்படுத்திய 350 மேற்கோள்களில் 300 மேற்கோள்களைக் கிரேக்கப் பிரதியிலிருந்தே தெரிந்தெடுத்தனர். இவற்றில் 18 மேற்கோள்கள் இணைத்திருமுறை நூல்களில் இருந்து எடுக்கப்பட்டுள்ளன. இணைத்திருமுறை நூல்களில் இறை ஏவுதல் பற்றிய சிக்கல் இருந்திருப்பின் அவ்வாறு பயன்படுத்தி இருக்கமாட்டார்கள்.

2. கிரேக்கப் பிரதியின் தொகுப்பும், இணைத்திருமுறையின் நூல்களும் வேறுபடுத்திக் காட்டப்படவில்லை. உதாரணமாக நெகேமியா நூலுக்குப் பின் தோபித்து மற்றும் யூதித்து என்னும் இணைத்திருமுறை நூல்கள் இணைக்கப்பட்டுள்ளதோடு அதற்கடுத்து எஸ்தர் நூல்இணைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் எபிரேய பிரதியில் உள்ள நூல்களும், கிரேக்கப் பிரதியில் உள்ள நூல்களும் ஒரே நிலையைப் பெற்றிருப்பதை அவதானிக்க முடியும்.

3. ஆதிக்கிறிஸ்தவ சமூகத்தில் இணைத்திருமுறை நூல்கள் திருவழிபாட்டில் உபயோகிக்கப்பட்டது என்பதற்குச் சான்றுகள் உண்டு.

மேற்கூறப்பட்ட விடயங்களில் இருந்து கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலம் தொடக்கம் இணைத்திருமுறை நூல்கள் இறை ஏவுதல் பெற்ற இறை வார்த்தைகளாகக் கருதப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டு வந்துள்ளன, என்பது தெளிவாகின்றது. எனவே கத்தோலிக்கராகிய நாம் இணைத்திருமுறை நூல்களில் உள்ளவற்றை இறைவார்த்தைகளாக ஏற்று எமது வாழ்வை ஒளிமயமாக்க முயற்சிக்க வேண்டும். எம் அன்றாட வாழ்வில் இவ் இறைவார்த்தைகளைப் பயன்படுத்துவது எமக்குச் சிறந்த வழிகாட்டியாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செயற்பாடு**

1. இணைத்திருமுறை நூல்கள் ஏழையும் பெயரிடுக.
2. செப்துவாஜிந் பிரதிக் கத்தோலிக்கராகிய எமக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுவதற்கான காரணங்கள் மூன்று தருக.

**வாழ்க்கைக்கு**



✝ இணைத்திருமுறை நூல்களை இறைவார்த்தையாக ஏற்றுக் கொள்வோம்.

✝ இணைத் திருமுறை நூல்களை அன்றாட வாழ்வில் பயன்படுத்துவோம்.

✝ இணைத் திருமறை நூல்களை இறையியல் கண்ணோட்டத்துடன் பயன்படுத்தி வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்கிக் கொள்வோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 இஸ்ரயேல் இறைவாக்கினர்கள்

முதலாம் மாணவன் - நான் உமது எதிர்காலம் பற்றிச் சொல்லுவேன். உமது விதிப்படி தான் எல்லாம் நடக்கும். எவராலும் விதியை மாற்றமுடியாது வாரும் உமது எதிர்காலம் பற்றி நான் சொல்லுகிறேன்.

இரண்டாம் மாணவன் - நான் வாழும் கடவுளின் செய்திகளைக் கொண்டு வந்து அவருக்காகப் பேசுபவன். இறைசித்தத்தை வெளிப் படுத்துவதே எனது குறிக்கோள்.

மூன்றாம் மாணவன் - இந்த இருவருக்கும் இடையே வேறுபாடு உண்டா? வெளித்தோற்றத்தில் வேறுபாடு இல்லை.

நான்காம் மாணவன் - ஏன் இல்லை? முதல் ஆள் (குறி) சொல்லுபவன் இரண்டாம் ஆள் இறைவாக்கினன்.

மூன்றாம் மாணவன் - இருப்பினும், இருவரும் ஒன்றைத் தானே சொல்லுகிறார்கள் எனக்கென்றால் வேறுபாடு தெரியவில்லை.

நான்காம் மாணவன் - ஒரே விடயமாவது எப்படி? ஒருவர் எதிர்காலம் பற்றிச் சொல்கிறார். மற்றவர் இறைவார்த்தையைக் கூறுகிறார். எதிர்காலத்தைப் பற்றிக் கூறும் குறி கூறுபவன் ஒருவருடைய விதியை பற்றிக் கூறுகிறான். கத்தோலிக்கராகிய நாம் குறி பார்க்கவும், அவற்றை நம்பவும் கூடாது. விதி என்று ஒன்று இல்லை. விதி என்று கூறி எமது எதிர்காலத்தைப் பாழாக்குவது பாவம். இறை சித்தத்தின் படியே அனைத்தும் நடக்கும். இறை செய்திக்குச் செவிசாய்க்க வேண்டும்.

இஸ்ரயேலில் இறைவாக்கினர் என அழைக்கப்படுவோர் இறைவனுக்காகப் பேசி, அவரது செய்தியை மக்களுக்கு அறிவித்த குழுவினராவர். அவர்கள் அனைவரும் பதவி, அதிகாரம், தராதரம், பட்டம் மற்றும் தமக்கு கிடைக்கும் பிரதிபலன் ஆகியவற்றைக் கருதாது இறைசெய்தியை எடுத்துரைத்தனர். இறைவாக்கினர்கள் 'நபி' என்னும் எபிரேயச் சொல்லால் அழைக்கப்பட்டனர். அதன் பொருள் 'இறை சித்தத்தை மற்றவருக்கு அறிவிப்பவர்' என்பதாகும். கிரேக்க மொழியில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ப்றோபேரஸ்' என அழைக்கப்பட்டனர். அதன் பொருள் 'ஒருவருக்காகப் பேசுபவர்' என்பதாகும். அதன்படி யாவே இறைவனுக்காகப் பேசுகின்றவர்களே இறைவாக்கினர் ஆவர்.இறைவாக்குரைக்கும் போது மூன்று விதமான சொற்பதங்களை அவர்கள் பயன்படுத்துகின்றனர்.

1. ஆண்டவர் திருவாய் மலர்ந்தருளுகின்றார். (எசா 1:2 ,மீக் 4:6 )
2. என்கிறார் ஆண்டவர். (ஏரே.33:11, எசே 5:15)
3. ஆண்டவரின் வாக்கு எனக்கு அருளப்பட்டது. (எசே 12:1)

இதன் மூலம் தெளிவுபடுத்தப்படுவது இறைவாக்கினர்கள் தமது கருத்துக்களை உரைக்கவில்லை. மாறாக இறைவனின் செய்தியை எடுத்துரைத்தனர் என்பது தெளிவாகின்றது.

## இஸ்ரயேல் இறைவாக்கினரை இருவகைப்படுத்தலாம்

1. எழுத்து வடிவம் பெறாத இறைவாக்கினர்.
2. எழுத்து வடிவம் பெற்ற இறைவாக்கினர்.

எழுத்து வடிவம் பெறாத இறைவாக்கினரின் பெயரில் பழைய ஏற்பாட்டில் நூல்கள் இல்லையெனினும் அவர்களின் போதனைகளும் செயல்களும் பழைய ஏற்பாட்டில் சாமுவேல், அரசர்கள் ஆகிய நூல்களில் காணக்கிடக்கின்றன.
அவ்வாறான இறைவாக்கினர்கள் சிலரின் பெயர்கள்

1. நாத்தான்
2. எலியா
3. எலிசா
4. குல்தா
5. அஹியா
6. மீக்காயா

## எழுத்து வடிவம் பெறாத இறைவாக்கினர்களின் பண்புகள்

1. தியானத்தில் ஆழ்ந்திருப்பர். (1 சாமு 10:5 - 15)
2. குழுவாகப் பணிசெய்வர். (1 சாமு 19:18 -24)
3. தமது தூதுப் பணியை உறுதிப்படுத்த அடையாளங்களைச் செய்வர். (1 அரசர் 17:16 - 24)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுத்து வடிவம் பெற்ற இறைவாக்கினர்

பழைய ஏற்பாட்டில் இவர்களின் பெயரில் நூல்கள் உண்டு. இவர்களை இருவகையாகப் பிரிக்கலாம்.

எழுத்து வடிவம் பெற்ற இறைவாக்கினர்

**பெரிய இறைவாக்கினர்**

1. எசாயா
2. எரேமியா
3. எசேக்கியேல்

**சிறிய இறைவாக்கினர்**

1. ஒசேயா
2. யோவேல்
3. ஆமோஸ்
4. ஒபதியா
5. யோனா
6. மீக்கா
7. நாகூம்
8. அபக்கூக்கு
9. செப்பனியா
10. ஆகாய்
11. செக்கரியா
12. மலாக்கி

இறைவாக்கினர் எழுதிய நூல்களிலுள்ள அதிகாரங்களின் அளவைக் கொண்டு பெரிய, சிறிய இறைவாக்கினர் என வகைப்படுத்தப்படுகின்றனர்.

## இறைவாக்கினர் எசாயாவின் அழைப்பு (எசா 6:1-13)

இறைவாக்கினர் எசாயா ஆலயத்தில் காட்சி ஒன்று கண்டார். தூய்மையான இறைவனைப் போற்றிப்புகழும் சேராபீன்களின் (வானதூதர்) குரலொலியால் ஆலயத்தின் அடித்தளங்கள் அசைந்தன. இவ்வாறு இறை அனுபவத்தைப் பெற்ற எசாயா இறைவாக்கினர் 'ஐயோ நான் அழிந்தேன்; ஏனெனில் தூய்மையற்ற உதடுகள் கொண்ட மக்கள் நடுவில் வாழ்பவன் நான்; படைகளின் ஆண்டவராகிய அரசரை என் கண்கள் கண்டனவே' என்றார். அப்பொழுது சேராபீன்களுள் ஒருவர் பலி பீடத்திலிருந்து நெருப்புப் பொறி ஒன்றைக் குறட்டால் எடுத்து அதைத் தம் கையில்



3.1 எசாயா இறைவாக்கினர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்துக் கொண்டு என்னை நோக்கிப் பறந்து வந்தார். அதனால் என் வாயைத் தொட்டு 'இதோ இந்நெருப்புப் பொறி உன் உதடுகளைத் தொட்டது. உன் குற்றப்பழி உன்னை விட்டு அகன்றது. உன் பாவம் மன்னிக்கப்பட்டது' என்றார். மேலும் 'யாரை நான் அனுப்புவேன்? நமது பணிக்காக யார் போவார்?' என வினவும் என் தலைவரின் குரலை நான் கேட்டேன். அதற்கு 'இதோ நானிருக்கிறேன் அடியேனை அனுப்பும்' என்று பதிலளித்தார். அதனைத் தொடர்ந்து இறைவாக்கினர் எசாயா தமது இறைவாக்குப் பணியினை ஆரம்பித்தார்.

எசாயா கண்டு அனுபவித்த இறைவன் நாம் வழிபடும் ஆலயங்களிலும், பிரசன்னமாக இருக்கிறார். விசேடமாக அவரது மகன் நமது ஆண்டவர் இயேசு நற்கருணை வடிவில் பிரசன்னமாக இருக்கிறார். எனவே இறைவன் வாழும் இல்லமாகிய தேவாலயத்தில் பக்திப்பற்றுதலுடன் நடந்துகொள்ள வேண்டியது எமது கடமையாகும்.

## எரேமியாவின் அழைப்பு (எரே 1:1-19)



3.2 எரேமியா இறைவாக்கினர்.

ஆண்டவர் எரேமியாவுக்கு இவ்வாறு கூறினார். 'தாய் வயிற்றில் உன்னை நான் உருவாக்க முன்பே அறிந்திருந்தேன்; நீ பிறக்கு முன்பே உன்னைத் திருநிலைப்படுத்தினேன். மக்களினங்களுக்கு, இறைவாக்கினனாக உன்னை ஏற்படுத்தினேன்'. நான் 'என் தலைவராகிய ஆண்டவரே எனக்குப் பேசத் தெரியாதே, சிறுபிள்ளை தானே' என்றேன் அதற்கு ஆண்டவர் 'சிறுபிள்ளை நான் என்று சொல்லாதே; யாரிடமெல்லாம் உன்னை அனுப்புகின்றேனோ அவர்களிடம் செல்; எவற்றை எல்லாம் சொல்லக் கட்டளை இடுகின்றேனோ அவற்றைச் சொல். 'இதோ பார்! என் சொற்களை உன் வாயில் வைத்துள்ளேன். பிடுங்கவும், தகர்க்கவும், அழிக்கவும், கவிழ்க்கவும், கட்டவும், நடவும் நான் உன்னை மக்களினங்கள் மேலும் அரசர்கள் மேலும் பொறுப்பாளனாக ஏற்படுத்தியுள்ளேன்' என்றார்.

எரேமியா இறைவாக்கினரைப் போல நாமும் பலவீனங்கள் மத்தியில் இறைவன் எமக்குத் தரும் கடமைகள், பொறுப்புக்களைச் சரியாக நிறைவேற்ற இறைவல்லமையைப் பெறுவோம்.

## எசேக்கியேல் இறைவாக்கினரின் அழைப்பு (எசே 2:1 - 3:5)

இறைவன் எசேக்கியேல் இறைவாக்கினருக்கு அடையாளம் மூலம் தமது செய்தியை வழங்குகின்றார். 'மானிடா நான் உனக்குத் தருகின்ற இச்சுருளேட்டைத் தின்று உன் வயிற்றை நிரப்பு' என்றார். எசேக்கியேல் இறைவாக்கினர் ஏட்டுச் சுருளை உண்டபோது அவரது வாயில் தேன்போல் இனித்தது. ஆண்டவர் அவரிடம் 'மானிடா எனக்கெதிராகக் கிளர்ச்சி செய்யும் இனத்தவராகிய இஸ்ரயேல் மக்களிடம் நான் உன்னை அனுப்புகிறேன் ....' என்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழ்ந்த விசுவாசத்திலும் இறைவல்லமையிலும் ஊன்றிய எசேக்கியேல் பபிலோனிய அடிமைத் தனத்திலிருந்த இஸ்ரயேல் மக்களுக்கு சொந்த நாட்டிற்கு செல்வோம் என்னும் நம்பிக்கையை கொடுக்கும் விதமாக இறைவாக்குரைத்தார்.


கிறிஸ்தவராகிய நாம் திருமுழுக்கின் மூலம் இறை வாக்குப் பணிக்காக அழைக்கப்பட்டுள்ளோம். எனவே, நாம் எமது திருமுழுக்கு அழைப்பை விளங்கிக் கொண்டு இறைவார்த்தையை அறிவிப்பவர்களாகச் செயற்பட வேண்டும். இறைவார்த்தைக்கு மாறாகச் செயற்படுவோருக்கு இறைவார்த்தையின்படி வாழக் கற்றுக் கொடுக்க வேண்டும்.



3.3 ஏசேக்கியேல் இறைவாக்கினார்

**செயற்பாடு**

1. தரப்பட்ட எழுத்துக்களைப் பயன்படுத்தி எழுத்துவடிவம், பெற்ற, பெறாத இறைவாக்கினர்களை இனங்கண்டு நிரப்புக.




2. இறைவார்த்தையை எடுத்துரைக்க உமக்குக் கிடைத்த ஐந்து சந்தர்ப்பங்களை எழுதுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாழ்க்கைக்கு**



- ✝ திருமுழுக்கின் மூலம் பெற்ற இறைவாக்கு அழைப் பிற்கேற்ப வாழ முயல்வோமாக.
- ✝ இறைவார்த்தையின் பணியாளர் ஆவோம்.
- ✝ எப்பொழுதும் உண்மைக்குச் சான்று பகர்வோம்.
- ✝ எமது பலவீனங்களில் இறைவனைக் காண்போம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4 நற்செய்தி



## மாற்கு நற்செய்தி

**ஆசிரியர்** : தூய மாற்கு

**அடையாளம்** : சிங்கம்

திருமுழுக்கு யோவான் பாலைவனத்தில் ஆற்றிய போதனையுடன் தூய மாற்கு நற்செய்தியை ஆரம்பிக்கின்றார். திருமுழுக்கு யோவானின் போதனை சிங்கம் கர்ச்சிப்பது போலாகும். எனவே சிங்கம் இந் நற்செய்திக்கு அடையாளமாக வழங்கப்பட்டுள்ளது.

**காலம்** : கி.பி. 64- 66

**இடம்** : உரோமை நகர்

**வேறு பெயர்** : பாடுகளின் நற்செய்தி

**நோக்கம்** : நீரோ மன்னனின் துன்புறுத்தலுக்கு உள்ளான கிறிஸ்தவர்களை ஊக்கப்படுத்தல்.

தூய மாற்கு தூய பேதுருவின் மொழிபெயர்ப்பாளராவார். நீரோ மன்னனின் துன்புறுத்தலுக்கு உள்ளான கிறிஸ்தவர்களுக்கு பாடுகளின் வழியாகத்தான் உயிர்ப்பின் மகிழ்வில் பங்குகொள்ள முடியும் என்பதை வலியுறுத்துகிறார். கிறிஸ்தவராகிய எமது வழி சிலுவை வழி என்பதை அவர் எமக்கும் எடுத்துரைக்கின்றார்.

இன்று நம்பிக்கைக்கு எதிராகப் பல்வேறு சக்திகள் செயல்படுவதை நாம் அறிவோம். கிறிஸ்தவர்கள் தூற்றுதல்களுக்கும், பழிச்சொற்களுக்கும், உள்ளாக்கப்படுகின்றனர். மேலும், சில நாடுகளில் கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்பட்டு கொலை செய்யப்படுகின்றார்கள். நீரோ மன்னனின் துன்புறுத்தலில் உயிர் கொடுத்த கிறிஸ்தவர்களின் வாழ்க்கையை முன்மாதிரியாகக் கொண்டு நம்பிக்கையுடன் வாழ்வது எமது கடமையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மத்தேயு நற்செய்தி




**ஆசிரியர்** : திருத்தூதரான தூய மத்தேயு

**அடையாளம்** : மனித முகம்

இயேசுவின் தலைமுறை அட்டவணையுடன் இந்நற்செய்தி ஆரம்பிக்கப்படுவதால் இவ் அடையாளம் வழங்கப்பட்டுள்ளது.

**காலம்** : கி.பி 80-90

**இடம்** : பலஸ்தீனா

**வேறுபெயர்** : இறையாட்சியின் நற்செய்தி

**நோக்கம்** : இயேசுவைப் புதிய மோசேயாகவும், மெசியாவாகவும் காட்டுவது

திருத்தூதரான தூய மத்தேயுவின் தந்தை அல்பேயு ஆவார். மத்தேயு இயேசுவால் அழைக்கப்படுவதற்கு முன் வரிதண்டுபவராகக் காணப்பட்டார். இவர் யூதக் கிறிஸ்தவர்களுக்கு நற்செய்தியை எழுதினார். யூதர்கள் எதிர்பார்த்த மெசியா இயேசு கிறிஸ்து ஆவார் என்பதை வலியுறுத்திக் கூறுகிறார்.

பழைய ஏற்பாட்டில் மோசேயைப் போல் புதிய ஏற்பாட்டில் இயேசு சட்டங்களைக் கொடுத்ததாகக் காட்டுகிறார். நாமும் இறையாட்சி மதிப்பீடுகளை அறிந்து அன்பு, மன்னிப்பு நீதி நிறைந்த சமூகத்தை உருவாக்க முன்வருவோம்.

## லூக்கா நற்செய்தி

**ஆசிரியர்** : தூய லூக்கா

**அடையாளம்** : எருது




குருவாகிய செக்கரியா பலி ஒப்புக் கொடுக்கும் சம்பவத்துடன் லூக்கா நற்செய்தி ஆரம்பிக்கப்படுகின்றது. அக்காலத்தில் எருது பலிப் பொருளாகும். அதனால் இந்த அடையாளம் வழங்கப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் : கி.பி 80 - 85

இடம் : சிரியா அந்தியோக்கியா

**வேறு பெயர்கள் :**

- ★ ஏழைகளின் நற்செய்தி
- ★ புற இனத்தவரின் நற்செய்தி
- ★ அன்பின் நற்செய்தி
- ★ செபத்தின் நற்செய்தி
- ★ பெண்களின் நற்செய்தி

நோக்கம் : கிறிஸ்து இயேசு யூதர்களுக்கு மட்டுமல்ல உலகிற்கெல்லாம் மீட்பர் என எடுத்துக்காட்டுவது.

கிறிஸ்து இயேசு உலகிற்கெல்லாம் மீட்பர் எனக்காட்ட புற இனத்தவரான வரலாற்று ஆசிரியர் முயற்சி செய்கிறார். இவர் ஒரு வைத்தியரும், ஓவியக் கலைஞரும் ஆவார். இவர் தமது நற்செய்தியில் பெண்கள், ஏழைகள், மீனவர்கள், சமூகத்தால் ஒதுக்கி வைக்கப்பட்டவர்கள் மீது கிறிஸ்து கொண்டிருந்த அன்பை எடுத்துக்காட்டினார். மேலும், நற்செய்திக்குப் புறம்பாகத் திருத்தூதர் பணி நூலையும், இவர் எழுதியுள்ளார். திருத்தூதர் பணிநூல் லூக்கா நற்செய்தி நூலின் இரண்டாம் பாகமாக கருதப்படுகின்றது.

சமூகத்தில் ஒதுக்கப்பட்டவர்களுக்காக இயேசு செயற்பட்டார் என்பதை இவர் வெளிப்படுத்துகின்றார். எனவே நாமும் ஒதுக்கப்பட்டவர்களுக்கு உதவுவோம். செபத்தின் மூலம் இறைவனை அனுபவிக்க அவர் எம்மை அழைக்கிறார்.

**யோவான் நற்செய்தி**



ஆசிரியர் : திருத்தூதரான தூய யோவான்

**அடையாளம்** : கழுகு மிக ஆழமான இறையியல் கருத்துகள் இந்நற் செய்தியில் உள்ளடக்கப்பட்டுள்ளன. வானத்தில் மிக உயரமாகப் பறக்கும் பறவை கழுகு ஆகும். அதனால் இவ் அடையாளம் வழங்கப்பட்டுள்ளது.

காலம் : கி.பி 90-100

இடம் : எபேசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நோக்கம்** : இயேசு இறைமகனாகிய மெசியா என்னும் நம்பிக்கையை ஏற்படுத்துவது

யோவானும், அவரது சகோதரன் யாக்கோபுவும் இயேசுவால் அழைக்கப்பட்ட முதல் சீடர்களில் அடங்குவர். மீனவர்களான இவர்கள் செபதேயு சலோமையின் புதல்வர்கள் ஆவார். ஏனைய நற்செய்திகளைவிட வேறு பாணியில் தமது நூலை முன்வைக்கும் யோவான் கிறிஸ்து இயேசு இறைமகன் எனவும், அவர் மீது நம்பிக்கை கொள்வதன் மூலம் நிலைவாழ்வை அடையலாம் எனவும் வலியுறுத்துகிறார். இயேசுவின் போதனைகள், வல்ல செயல்களைக் குறிப்பிடுவதைவிட அவரது இறைத்தன்மையை வெளிப்படுத்த முயல்கிறார்.

எனவே, நாமும் கிறிஸ்து இயேசு இறைமகன் என விசுவாசித்து நிலை வாழ்வை பெற்றுக்கொள்ள முயலுவோம்.

நான்கு, நற்செய்தி நூல்களிலும், உள்ளடங்கியுள்ள இயேசுவின் போதனைகளின்படி வாாழ்வதன் மூலம் நாம் நிலைவாழ்வாகிய இறையாட்சியை உரிமையாக்கிக் கொள்ள முடியும். நற்செய்தி நூல்களைப் படிக்கும் நாம் அந்த நற்செய்தியால் இறையாட்சியை அடைவதுடன், எம் வாழ்வையே நற்செய்தியாக மாற்றி மற்றவர்களின் மகிழ்வுக்கும் அமைதிக்கும் ஆறுதல் அளிப்பதற்கும் இறையாட்சி பணியாளர் ஆவோம்.

**செயற்பாடு**

**பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.**

| நற்செய்தி நூல்கள் | அடையாளம் | காலம் | வேறுபெயர் | குறிக்கோள் |
|---|---|---|---|---|
| மாற்கு | | | | |
| மத்தேயு | | | | |
| லூக்கா | | | | |
| யோவான் | | | | |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாழ்க்கைக்கு**

- ✝ சவால்கள் மத்தியில் நம்பிக்கைக்குச் சான்று பகர்வோம்.
- ✝ நற்செய்தியைக் கற்று வாழ்வாக்குவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 படைப்பு

றெபேக்கா : அம்மா எனது ரோசாச் செடியில் பூ ஒன்று பூத்துள்ளது.

அம்மா : பார்ப்போம், எமது தோட்டமே பூக்களால் நிறைந்துள்ளது. பறவைகளின் இனிய ஒலி, அழகழகான வண்ணத்துப் பூச்சிகள் இன்று எத்துணை அழகான நாள்!

றெபேக்கா : அண்ணா! இவ்வளவு அழகான உலகம் உண்மையில் எப்படி உருவானது? இவ்வளவு அழகான ஒழுங்கமைப்பை ஏற்படுத்தியவர் யார்?

றோய் : உலக ஆரம்பம் பற்றிப் பல்வேறு கோட்பாடுகள் உள்ளன.

றெபேக்கா : அவை என்ன அண்ணா?

றோய் : பரிணாம வாதக்கொள்கை, பிக்பான்ட் கொள்ளை, லாப்லாஸ் கொள்கை.

நயோமி : அண்ணா கோட்பாடுகள் எல்லாம் உண்மையானவையா?

றோய் : அவற்றின் உண்மைத் தன்மை பற்றி விஞ்ஞான ரீதியாக இன்னும் நிரூபிக்கப்படவில்லை.

நயோமி : அவை நிரூபிக்கப்பட்டால் திருவிவிலியத்திலுள்ளவை பொய்யாகி விடுமா?

றோய் : ஒருபோதும் இல்லை.

நயோமி : அது ஏன்?

றோய் : அக்கோட்பாடுகளால் சொல்லப்படுவது இவ்வுலகம் உருவாகிய விதம் பற்றியே ஆகும். ஆனால் திருவிலியப் படைப்புக் கதையால் வெளிப்படுத்தப்படுவது உலகம் படைக்கப்பட்ட விதம் பற்றியல்ல, மாறாக, இறைவனே உலகைப் படைத்தார் என்பது பற்றியே ஆகும். மனிதன் தனது அறிவைப் பயன்படுத்தி ஆராய்ச்சிகளில் ஈடுபடுகின்றான். விஞ்ஞானம் அதற்கு உதவுகின்றது. எனினும், உலகப் படைப்பின் அதிபதி இறைவனே எனத் திருவிவிலியக் கதைகள் எடுத்துரைக்கின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



5.1 சூழல்

## வரலாற்றுக்கு முற்பட்ட காலம் (தொடக்கநூல் 1 - 11)

தொடக்கநூலில் முதலாம் அதிகாரம் தொடக்கம், பதினோராம் அதிகாரம் வரை வரலாற்றுக்கு முற்பட்ட காலம் என அழைக்கப்படுகின்றது. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தைக் கற்கும்போது வரலாற்று ரீதியான விடயங்களை ஆராய முடியாது.

திருவிவிலிய ஆசிரியர் புராணக் கதைகள் வழியாக, இவ்வுலகின் ஆரம்பமும், மனிதனின் ஆரம்பமும் இறைவனால் ஆனது என்பதை முன்வைக்கிறார். இக்கதைகள் வழியாக ஒரு செய்தியை முன்வைப்பதே அவரது நோக்கம். மாறாக இவ்வுலகமும், மனிதனும் உருவான விதம் பற்றிக் கற்பிப்பதல்ல. இப்பகுதியில் உள்ள கதைகள் மூலம் கற்பிப்பது மறை உண்மைகள் பற்றிய செய்திகளே அன்றி விஞ்ஞான அல்லது வரலாற்று செய்திகள் அல்ல. இறைவனே உலகின் படைப்பாளர் என்பதே அவர் முன்வைக்கும் பிரதான செய்தியாகும்.

**தொடக்க நூலில் படைப்பு பற்றிய இரண்டு கதைகள் உள்ளன.**

1. படைப்புப் பற்றிய முதல் கதை (தொநூ 1:1-2:4 a)
2. படைப்புப் பற்றிய இரண்டாம் கதை (தொநூ 2:4 b -25)

## படைப்புப் பற்றிய முதல் கதை

இக்கதை குருமரபின் ஆக்கமாகும். இறைவழிபாட்டு அமைப்பினுள் இறையியல் அர்த்தத்தில் படைப்பை ஏழு நாட்களுக்குள் வரையறைப்படுத்தியுள்ளார். இதில்ஆசிரியரின்நோக்கம் ''சபாத்'' நாளின்முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுவதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது இறைவன் ஆறு நாட்களில் உலகைப் படைத்து ஏழாம் நாள் ஓய்ந்திருந்தார். எனவே நாமும் அந்நாளை இறைவனுக்காகத் தூய்மையாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதே, இதன் மூலம் வெளிப்படுத்தப்படும் இறை செய்தியாகும். இறைவன் தமது உருவிலும், சாயலிலும் மனிதனைப் படைத்துள்ளார். வேறு எந்தப் படைப்பையும் அவ்வாறு படைக்கவில்லை. எனவே மற்ற எல்லாப் படைப்பையும் விட மனிதன் மேன்மையானவன். அந்த மேன்மை பின்வரும் மூன்று பண்புகள் மூலம் பிரதிபலிக்கப்படுகின்றது.

1. புத்தி
2. சுயாதீனம் (சுதந்திரம்)
3. அழியாத ஆன்மா

மனிதன் ஏனைய படைப்புக்களைவிட மேன்மையானவன் என்பதால் அவன் தனது புத்தி, சுதந்திரம் என்பவற்றை நன்மை செய்வதற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். அதனால் அழியாத ஆன்மாவைக்கொண்ட மனிதன் முடிவில்லா வாழ்விற்குள் நுழைய முடியும்.

## படைப்புப் பற்றிய இரண்டாம் கதை

இக்கதை யாவே மரபைச் சேர்ந்த ஆக்கமாகும். படைப்புக்களுள் உயர்ந்த படைப்பு மனிதனாவான். மனிதனுக்கு ஆண்டவராகிய கடவுளின் உயிர்மூச்சு வழங்கப்பட்டுள்ளது.இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையிலான நெருங்கிய தொடர்பு இதன் மூலம் காண்பிக்கப்படுகின்றது.

மனிதனின் விலா எலும்பிலிருந்து பெண் படைக்கப்பட்டாள், இதயத்திற்கு நெருக்கமான விலா எலும்பிலிருந்தது படைக்கப்பட்டதால் பெண் ஆணின் அடிமையோ அல்லது அவனைவிட உயர்ந்தவளோ அல்ல. அவனுக்குத் துணை யானவள். அவர்களின் உறவு, அன்பை அடிப்படையாகக்கொண்டது. மேலும், பெண் ஆணிடமிருந்து எடுக்கப்பட்டதால் அவள் இன்றி, அவனும், அவன் இன்றி அவளும் முழுமையடைவதில்லை. இந்த முழுமையின் கணவனும் மனைவியும் ஒருவரையொருவர் மதித்து அன்பு செய்து திருமணவாழ்வை வாழ உறுதி பூண வேண்டும். மேலும், படைப்புக்களில் மேலான படைப்பு மனிதன் என்பதால் மனித மாண்பைப்பேணி ஆண், பெண் வேறுபாட்டுக்கு மதிப்பளித்து மரியாதையுடன் வாழ இதன் மூலம் அழைக்கப்படுகின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செயற்பாடு**

1. படைப்பின் முதல் கதை மூலம் மனிதனின் மேன்மையினை வெளிகாட்டும் **பண்பு** ஒன்றை தருக.

2. அப் **பண்பு** வெளிப்படுத்தும் **விடயங்கள்** மூன்று தருக.

3. படைப்பின் இரண்டாம் கதை மூலம் மனித மாண்பை வெளிப்படுத்தும் விடயங்கள் எவை?

4. மனித மாண்பைப் பேண அவன் மேற்கொள்ளவேண்டிய செயற்பாடுகள் ஐந்து எழுதுக.

**வாழ்க்கைக்கு**




✝ இறைவன் உலகின் படைப்பாளன் என ஏற்றுக் கொள்வோம்.

✝ இறைசாயலில் படைக்கப்பட்ட நாம் மனித மாண்பைப் பேணி வாழ்வோம்.

✝ ஆண், பெண் வேறுபாடுகளுக்கு மதிப்பளித்து ஒத்துழைப்புடன் வாழ்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6 பாவம்



6.1 இனிப்புப் பண்டங்களும் மாமிச உணவுகளும்

மேலே படங்களில் காண்பிக்கப்பட்டிருக்கும் உணவுகளைப் பாருங்கள். அவற்றை இனம் கண்டு கொள்ளுங்கள். கேக், ஐஸ்கிறீம், சொக்கலட், மாமிசவகை அவற்றின் மத்தியில் உண்டு. அவ்வுணவுகள் மிகவும் சுவையானவை, சத்தானவை ஆயினும் கேக், ஐஸ்கிறீம் ஆகிய இனிப்புப் பண்டங்கள் நீரிழிவு நோயாளிக்குக் கேடானது. மாட்டிறைச்சி, பன்றி இறைச்சி, சொசேஜஸ் ஆகிய உணவுகளும் இருதய நோயாளிக்கு வருத்தத்தினை ஏற்படுத்தும். அந்நோயாளிகள் அவ்வகை உணவுகளை உண்பதால், மேலும் நோயின் விளைவுகள் அதிகரிக்கும். அதனால் வெகுவிரைவில் மரணத்தைச் சந்திக்க வேண்டிய நிலை உருவாகும்.

இந்த உணவுகளைக் காணும் போது நம் எல்லோருக்கும் ஆசை ஏற்படுவதுண்டு. ஆசையை அடிப்படையாக வைத்து நாம் எடுக்கும் தீர்மானத்தின் விளைவு நல்லதாகவோ கெட்டதாகவோ அமைந்துவிடுகிறது. மேற்குறிப்பிட்ட நோயாளிகள் ஆசையின்படி செயற்பட்டால் அவர்களின் நோய்நிலைமை மேலும் ஆபத்தாகும்.

பாம்பு பெண்ணின் ஆசையை எவ்வாறு தூண்டுகிறது என்பதை தொ.நூ 3 : 1 - 6 இல் உள்ள இறைவார்த்தைகள் எடுத்துக் காட்டுகின்றன.

பாம்பு : கடவுள் உங்களிடம் தோட்டத்திலுள்ள எல்லா மரங்களிலிருந்தும் உண்ணக்கூடாது என்றது உண்மையா?

பெண் - "தோட்டத்தில் இருக்கும் மரங்களின் பழங்களை நாங்கள் உண்ணலாம். ஆனால், தோட்டத்தின் நடுவில் உள்ள மரத்தின் கனியை மட்டும் நீங்கள் உண்ணக்கூடாது; அதைத் தொடவும் கூடாது மீறினால் நீங்கள் சாவீர்கள்; என்று கடவுள் சொன்னார்." (தொ. நூ 3 : 2- 3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாம்பு - நீங்கள் சாகமாட்டீர்கள். ஏனெனில் அதிலிருந்து உண்ணும் நாளில் உங்கள் கண்கள் திறக்கப்படும். நீங்கள் கடவுளைப் போல நன்மை, தீமை அறிவீர்கள் என்பது கடவுளுக்குத் தெரியும்.

அந்தமரம் உண்பதற்குச் சுவையானதாகவும், கண்களுக்குக் களிப்பூட்டுவதாகவும், அறிவு பெறுவதற்கு விரும்பத்தக்கதாகவும் இருந்ததைக் கண்டு, பெண் அதன் பழத்தைப் பறித்து உண்டாள். அதைத் தன்னுடனிருந்த தன் கணவனுக்கும் கொடுத்தாள். அவனும் உண்டான்.

(தொ. நூ 3 : 6)

மேலேயுள்ள திருவிவிலியப் பகுதியில், பெண்ணிடமிருந்த '**ஆசை**' பேசிய முறையை பின்வரும் விடயங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

- ★ இந்த மரம் உண்பதற்குச் சுவையானது.
- ★ கண்களுக்கு களிப்பூட்டுவது.
- ★ அறிவு பெறுவதற்கு விரும்பத்தக்கது.

பெண் நன்மை, தீமை பற்றி விளங்கிக்கொள்ளும் மரத்தின் கனியைப் பறித்து உண்பதற்கு முன்னரே, பழத்தின் சுவையையும் அது அறிவைப் பெறுவதற்குச் சிறந்தது எனவும் முடிவு செய்து கொண்டாள். ஆசைக்கு அடிமைப்பட்டு அவள் தவறான தீர்மானம் எடுத்தாள் இதன் மூலம் நமக்கும் பல செய்திகள் கிடைக்கின்றன.

- ★ ஆசைக்கு அடிமைப்பட்டுப் பிழையான தீர்மானம் எடுப்பது தவறானது.
- ★ நாம் தீர்மானம் எடுக்கும்போது மனச்சான்றுக்குச் செவிசாய்த்து அதற்குக் கீழ்ப்படிய வேண்டும்.

இறைவன் அன்பான தந்தையாவர். எனவே அவர் தமது பிள்ளைகள் நல்வழியில் செல்ல அறிவு புகட்டுகின்றார். ஆதாம் ஏவாளுக்குக் கூறிய அறிவுரை அதற்கு உதாரணமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் நன்மை, தீமை அறிவதற்கு ஏதுவான மரத்திலிருந்து மட்டும் உண்ணாதே; ஏனெனில் அதிலிருந்து நீ உண்ணும் நாளில் சாகவே சாவாய்;

(தொ.நூ. 2:17)

காயினுக்குக் கொடுத்த அறிவுரைகள் இது தொடர்பான இன்னுமொரு உதாரணமாகும்.

ஆகவே ஆண்டவர் காயினிடம் '' நீ ஏன் சினமுற்றிருக்கிறாய்? உன் முகம் வாடியிருப்பது ஏன்?
நீ நல்லது செய்தால் உயர்வடைவாய் அல்லவா? நீ நல்லது செய்யாவிட்டால், பாவம் உன்மேல் வேட்கை கொண்டு உன் வாயிலில் படுத்திருக்கும். நீ அதை அடக்கி ஆள வேண்டும்.''

(தொ.நூ. 4: 6 - 7)

ஆதாம் ஏவாள் ஆசைக்கு அடிமைப்பட்டு நன்மை தீமை அறியும் மரமாகிய விலக்கப்பட்ட மரத்தின் கனியை உண்டனர். காயின் பொறாமையால் தனது சகோதரனைக் கொன்றான். பாவத்தில் விழுந்த ஆதிப்பெற்றோரிடமும், காயீனிடமும் கடவுள் பின்வருமாறு வினவினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| (தொ.நூ. 3:11-19) | (தொ.நூ. 4:9) |
|---|---|
| **ஆதாமிடம் வினவுதல்**<br>"நீ ஆடையின்றி இருக்கின்றாய் என்று உனக்குச் சொன்னது யார்? நீ உண்ணக்கூடாது என்று நான் விலக்கிய மரத்திலிருந்து நீ உண்டாயோ?"<br><br>**பெண்ணிடம் வினவுதல்**<br>"நீ ஏன் இவ்வாறு செய்தாய்?"<br><br>பெண் - " பாம்பு என்னை ஏமாற்றியது நானும் உண்டேன்." | **காயினிடம் வினவுதல்**<br>" உன் சகோதரன் ஆபேல் எங்கே?"<br><br>காயின் - "எனக்குத் தெரியாது. நான் என்ன என் சகோதரனுக்குக் காவலாளியோ?" |

பாவத்தில் விழுந்த மனிதனுக்குக் கடவுள் தண்டனை வழங்கினார்.

**ஏவாளுக்கு** — தொ.நூ. 3:16

- ✦ உன் மகப்பேற்றின் வேதனையை மிகுதியாக்குவேன்.
- ✦ வேதனையில் நீ குழந்தைகளைப் பெறுவாய்.
- ✦ உன் கணவன்மேல் நீ வேட்கை கொள்வாய் அவனோ உன்னை ஆள்வான்.

**ஆதாமுக்கு** — தொ.நூ. 3:17-19

- ✦ உன் பொருட்டு நிலம் சபிக்கப்பட்டுள்ளது.
- ✦ உன் வாழ் நாளெல்லாம் வருந்தி அதன் பயனை உழைத்து உண்பாய்.
- ✦ முட்செடியையும், முட்புதரையும் உனக்கு அது முளைப்பிக்கும்.
- ✦ வயல் வெளிப் பயிர்களை நீ உண்பாய்.
- ✦ நீ மண்ணிலிருந்து உருவாக்கப்பட்டதால் அதற்குத் திரும்புவாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| காயினுக்கு | தொ.நூ. 4:11-12 | ✦ நீ சபிக்கப்பட்டிருக்கின்றாய்.<br>✦ நீ மண்ணில் பயிரிடும் பொழுது அது இனிமேல் உனக்குப் பலன் தராது.<br>✦ மண்ணுலகில் நீ நாடோடியாக அலைந்து திரிவாய். |

இறைவன் ஆதிப்பெற்றோருக்கும், காயினுக்கும் தண்டனை கொடுத்தது, கோபத்தினால் அல்ல, மாறாக அன்பினால் ஆகும். இச்செயற்பாடு பிள்ளைகள் குற்றம் செய்யும் போது அவர்களைத் தண்டிக்கும் பெற்றோரைப் போன்றதாகும். பெற்றோர் நாம் செய்யும் பிழைக்குத் தண்டனை வழங்கினாலும், அவர்கள் எம்மை அன்பு செய்கிறார்கள். எம்மை மன்னிக்கிறார்கள். அவ்வாறே, இறைவனுடைய அன்பும், இரக்கமும் இருக்கும் என்பதைப் பின்வரும் வாக்குறுதிகள் எடுத்துக் காட்டுகின்றன.

'உனக்கும், பெண்ணுக்கும் உண் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன். அவள் வித்து உன் தலையைக் காயப்படுத்தும். நீ அதன் குதிங்காலைக் காயப்படுத்துவாய்'

(தொ.நூ. 3:15)

இந்த வாக்குறுதி மூலம் இறைவன் ஆதாமுக்கும், ஏவாளுக்கும் மீட்புப் பற்றிய எதிர்பார்ப்பைக் கொடுக்கிறார். ஒரு மீட்பரை அனுப்புவதற்கும் வாக்குப் பண்ணுகிறார்.

ஆண்டவராகிய கடவுள் மனிதனுக்கும், அவன் மனைவிக்கும் தோல் ஆடைகள் செய்து அவர்கள் அணியச் செய்தார்.

(தொ.நூ. 3:21)

அத்தி இலைகளைக் கொண்டு ஆடை தைத்து அணிந்திருந்த மனிதனுக்கு தோல் ஆடைகளைத் தயாரித்துக் கொடுத்ததன் மூலம் இறைவனின் இரக்கமும் அன்பும் வெளிக் காட்டப்படுகிறது. இச்செயற்பாடு இறைவனின் பராமரிப்பும் பாதுகாப்பும் மனிதனுக்கு உண்டு என்பதை விளக்குகிறது, பாவம் செய்த காயினுக்கும் இறைவன் அவ்வாறே இரக்கம் காட்டினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்படியன்று காயினைக் கொல்லுகிற எவனும் ஏழுமடங்கு பழிவாங்கப்படுவான்" என்று சொல்லி, காயினைக் கண்டு பிடிக்கும் எவனும் அவனைக் கொல்லாமல் இருக்க ஆண்டவர் அவன்மேல் ஓர் அடையாளம் இட்டார்.

(தொ.நூ. 4:15)

குற்றவாளி ஒருவரின் வாழ்வின் உரிமையும் இறைவனுக்கே உரியது என்பது நமக்கு நினைவூட்டப்படுகிறது. நாம் நேரிய வழியில் நடப்பதற்கு எமக்கு அறிவுரை வழங்கி, உதவப் பல வழிகள் உண்டு. அவற்றில் சில,

★ மனச்சான்று
★ ஆசிரியர்கள்
★ பெற்றோர், பெரியோர்
★ சமயத் தலைவர்கள்

நீரும், உமக்கு நேரிய வழிகாட்டி அறிவுரை கூறுபவர்களுக்குச் செவிமடுத்து, கீழ்படிந்து இறையாசீரைப் பெற்றுக் கொள்ள மனதில் உறுதி பூண வேண்டும்.

**நோவா**

ஆதிப்பெற்றோர் காலம் தொடக்கம் இவ்வுலகில் பாவம் வளர்ந்தது. நோவாவின் காலம் நெருங்கும் போது அது உச்சக் கட்டத்தை அடைந்திருந்தது. அது தொடர்பாக திருவிவிலிய ஆசிரியர் இவ்வாறு கூறுகிறார்.

மண்ணுலகில் மனிதர் செய்யும் தீமைகள் பெருகுவதையும் அவர்களின் இதயச் சிந்தனைகள் எல்லாம் நாள் முழுவதும் தீமையையே உருவாக்குவதையும் ஆண்டவர் கண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மண்ணுலகில் மனிதர் செய்யும் தீமை பெருகுவதையும் அவர்களின் இதயச் சிந்தனைகளெல்லாம் நாள் முழுதும் தீமையையே உருவாக்குவதையும் ஆண்டவர் கண்டார். மண்ணுலகில் மனிதரை உருவாக்கியதற்காக ஆண்டவர் மனம் வருந்தினார். அவரது உள்ளம் துயரம் அடைந்தது. அப்பொழுது ஆண்டவர் ''நான் படைத்த மனிதரை மண்ணிலிருந்து அழித்தொழிப்பேன். மனிதர் முதல் கால் நடைகள், ஊர்வன, வானத்தப் பறவைகள் வரை அனைத்தையும் அழிப்பேன். ஏனெனில் இவற்றை உருவாக்கியதற்காக நான் மனம் வருந்துகிறேன்''.

''வானுலகின் கீழ் உயிருள்ள எல்லாவற்றையும் அழிப்பதற்காக மண்ணுலகின் மேல் வெள்ளப்பெருக்கு வரச்செய்வேன். மண்ணுலகில் உள்ளவையெல்லாம் மடிந்துபோம்''.என்கிறார்.

(தொ.நூ. 6:5-7, 6:17)

இவ்வுலகில் பாவம் வளர்ந்ததால் இறைவனே மனிதனை இப்பூமியிலிருந்து அழித்துவிடத் தீர்மானித்ததாகத் திருவிவிலிய ஆசிரியர் கூறுகிறார். எவ்வாறாயினும் இவ்விடத்தில் திருவிவலிய ஆசிரியர் எடுத்துக் காட்ட முற்படுவது, பெருவெள்ளம் ஒன்றால் மனிதனை அழிக்கவன்று, மனிதன் மூலம் இவ்வுலகில் வளர்ச்சியடைந்த பாவத்தை அகற்றி புதுயுகம் ஒன்றை உருவாக்குவதற்கேயாகும். அப்புதுப்படைப்பின் ஆரம்ப கர்த்தா நோவா ஆவார். அவர் இவ் அழைப்பைப் பெற்றுக் கொள்ள ஏதுவான முக்கியமான காரணத்தை இவ்வாறு எடுத்துக் காட்டலாம். (தொ.நூ. 6:9)

- அவர் நீதிமான்
- அவரின் பரம்பரையில் அவரே குற்றமற்றவர்
- அவர் இறைவனோடு நல்லுறவை வளர்த்திருந்தார்

நோவா நீதிமானாகக் காணப்பட்டதால் அவரின் குடும்பத்தினர் அனைவருமே பெரியதொரு அழிவிலிருந்து மீட்கப்பட்டனர்.

உங்கள் ஒவ்வொருவரின் நேர்மையும், உண்மைத்தன்மையும்

- தனிப்பட்ட முறையில் உமக்கும்
- உமது குடும்பத்தினருக்கும்
- நமது நாட்டிற்கும்

நன்மையை ஏற்படுத்தும் என்பதை மனதில் கொள்க.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செயற்பாடு**

1. ஆசையினால் தவறான பாதையில் சென்ற உமது நண்பர் ஒருவருக்கு நீர் காட்டும் நல்வழிமுறைகள் ஐந்து தருக.

2. கட்டிளமைப்பருவத்தில் இருக்கும் நீர் ஆசைப்படுபவை சில கீழே தரப்பட்டுள்ளன. அவற்றால் உமக்கு ஏற்படும் நன்மை தீமைகளை எழுதுக.

| ஆசைகள் | நன்மை | தீமை |
|---|---|---|
| 1. கணினி | | |
| 2. இணையம் | | |
| 3. கையடக்கத் தொலைபேசி | | |
| 4. முகப்புத்தகம் (Face Book) | | |
| 5. அலங்காரம் | | |

3. நோவாவைப் போன்று நீதிமானாக வாழ, உமது வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய பண்புகள் ஐந்து எழுதுக.

4. இன்றைய சமுதாயத்தில் பாவம் படிப்படியாக வளர்கிறது என்பதற்கு உதாரணங்கள் ஐந்து எழுதி, அவற்றை நீக்க நீர் கூறும் ஆலோசனைகள் ஐந்து எழுதுக.

**வாழ்க்கைக்கு**



- ✝ ஆசைகளுக்கு அடிமையாகாதிருப்போம்.
- ✝ மனச்சான்றின் குரலொலிக்கு விழிப்போடு இருப்போம்.
- ✝ பெற்றோர், பெரியோரின் அறிவுரைகளுக்குக் கீழ்ப்படிவோம்.
- ✝ நோவாவைப் போன்று நேர்மையாளராக வாழ்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7 விடுதலைப் பயணம்

ஆபிரகாம்

↓

ஈசாக்

↓

யாக்கோபு

↓

றூபன் லேவி யூதா
சிமியோன் யோசேப்பு
இசக்கார் செபுலோன் பென்ஜமின்
நப்தலி
தாண் காத் ஆசேர்

இறைவன் ஆபிரகாமை அழைத்த சந்தர்ப்பத்தில் ''உன்னை நான் பெரிய இனமாக்குவேன்; உனக்கு ஆசி வழங்குவேன். உன் பெயரை நான் சிறப்புறச் செய்வேன்; நீயே ஆசியாக விளங்குவாய்'' (தொ.நூ. 12:2) என்று வாக்குப் பண்ணினார். அந்த வாக்குறுதியை நிறைவேற்றி, ஆபிரகாமின் குடும்பத்தை ஓர் பெரிய இனமாக வளரச் செய்தார். அவ்வாறு வளர்ச்சியடைந்த பெரிய இனமாக எகிப்தில் வாழ்ந்து வந்தார்கள். ''அவ்வாறு ஆண்டவர், அவருக்கும் அவரது மக்களுக்கும் ஒரு நாட்டை வாக்குப் பண்ணினார். உன் வழிமரபினருக்கு இந்நாட்டைக் கொடுப்பேன்'' (தொ. நூ 12:7)

யாக்கோபின் வழிவந்த இவர்கள் அனைவரும் மொத்தம் எழுபது பேர். யோசேப்பு ஏற்கனவே எகிப்தில் இருந்தார். பின்னர் யோசேப்பும் அவருடைய எல்லாச் சகோதரரும் அந்தத் தலைமுறையினர் அனைவருமே இறந்து போயினர்.
(வி. ப 1:5-6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு ஆபிரகாமின் பரம்பரை எகிப்தில் எகிப்திய பார்வோன்களின் அனுமதியுடன் வளர்ச்சியடைந்தது. ஆயினும், பிற்காலத்தில் இவ்வாறு நடைபெற்றது.

இவ்வாறிருக்க யோசேப்பை முன்பின் அறிந்திராத புதிய மன்னன் ஒருவன் எகிப்தில் தோன்றினான்.

(வி.ப. 1:8)

யோசேப்பைப் பற்றியும், அவரது மாபெரும் சேவையைப் பற்றியும் அறியாத புதிய அரசன் ஆட்சிக்கு வந்தபோது இஸ்ரயேல் இனத்தின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதற்கு மூன்று செயற்பாடுகளை மேற்கொண்டான்.

1. கடும் வேலையால் அவர்களை ஒடுக்குவதற்காக அடிமை வேலை வாங்கும் அதிகாரிகள் அவர்கள் மேல் நியமிக்கப்பட்டனர். பார்வோனுக்காக அவர்கள் பித்தோம், இராம்சேசு ஆகிய களஞ்சிய நகர்களைக் கட்டியெழுப்பினர்.

(வி.ப. 1:11)

2. பிறக்கும் போதே ஆண்குழந்தைகளைக் கொன்று விடுதல். (எபிரேய தாதியரான சிப்ரா, பூவா என்பவர்களுக்கு மன்னன் கூறியது) ''எபிரேயப் பெண்களின் ஆண்மகவு என்றால் அதைக் கொன்று விடுங்கள். பெண்மகவு என்றால் வாழட்டும்''

(வி.ப. 1:15,16)

3. ஆண் குழந்தைகளை நைல்நதியில் எறிந்துவிடக் கட்டளை. பின்னர் பார்வோன் தன் குடிமக்கள் அனைவருக்கும் ஆணை விடுவித்து ''பிறக்கும் எபிரேய ஆண்மகவு அனைத்தையும் நைல் நதியில் எறிந்துவிடுங்கள்...... ''

(வி.ப. 1:22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இந்தப் பின்னணியில் தான் மோசே என்ற விடுதலை வீரன் பிறந்தார்.**

.......... அவள் கருவுற்று ஓர் ஆண்மகவை ஈன்றெடுத்தாள்; அது அழகாயிருந்தது என்று கண்டாள்; மூன்று மாதங்களாக அதனை மறைத்து வைத்திருந்தாள். இதற்கு மேல் அதனை மறைத்து வைக்க இயலாததால், அதனுக்காகக் கோரைப் புல்லால் பேழை ஒன்று செய்து அதன் மீது நிலக்கீல், கீல் இவற்றைப் பூசினாள்; குழந்தையை அதனுள் வைத்து நைல் நதிக் கரையினுள்ள நாணல்களுக்கிடையில் விட்டு வைத்தாள். .......... அப்போது பார்வோனின் மகள் நாணலிடையே பேழையைக் கண்டு தன் தோழி ஒருத்தியை அனுப்பி அதை எடுத்தாள்; அதைத் திறந்த போது ஓர் ஆண் குழந்தையைக் கண்டாள்; ................ " இது எபிரேயக் குழந்தைகளுள் ஒன்று" என்றாள் அவள் ..........

(விப. 2:1 - 10)

இவ்வாறு அரச மாளிகைக்குள் செல்ல மோசேக்கு வழிவகுத்துக் கொடுத்த இறைவன், அரசிளங்குமரன் ஒருவன் பெறக்கூடிய எல்லா சலுகைகளையும் கொடுத்து, போர்க்கலைகளைக் கற்பதற்கும், தலைவனாகச் செயற்படத் தேவையான பயிற்சி களையும் பெற்றுக் கொடுத்தார். இவ்வாறு அவரை ஆயத்தம் செய்த இறைவன் எரியும் முட்செடியின் நடுவே காட்சிகொடுத்து மோசேக்குத் தான் யாரென்பதை அறிமுகம் செய்து வைத்தார்.

மேலும் அவர், "உங்கள் மூதாதையரின் கடவுள், ஆபிரகாமின் கடவுள், ஈசாக்கின் கடவுள், யாக்கோபின் கடவுள் நானே" என்றுரைத்தார். மோசே கடவுளை உற்று நோக்க அஞ்சியதால் தம் முகத்தை மூடிக் கொண்டார்.

(வி.ப. 3:6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



7.2 மோசேயின் அழைப்பு

இஸ்ரயேல் மக்களை எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து வாக்களிக்கப்பட்ட பூமிக்கு வழிநடத்திச் செல்வதே இறைவன் மோசேக்குக் கொடுத்த அழைப்பாகும்.


எனவே எகிப்தியரின் பிடியிலிருந்து அவர்களை விடுவிக்கவும், அந்நாட்டிலிருந்து பாலும், தேனும் பொழியும் நல்ல பரந்ததோர் நாட்டிற்கு அதாவது கானானியர், இத்தியர், எமோரியர், பெரிசியர் இவ்வியர், எபூசியர் வாழும் நாட்டிற்கு அவர்களை வழிநடத்திச் செல்லவும் இறங்கிவந்துள்ளேன்.
(வி.ப. 3:8)

பல்வேறு தடைகள், சவால்கள் மத்தியிலும் மோசே இறைவனின் அழைப்பை ஏற்றுக் கொண்டார். பார்வோன் மன்னனிடம் சென்று மக்களை விடுதலை செய்யுமாறு கேட்டுக் கொண்டார். பார்வோன் இறை செய்தியை ஏற்றுக்கொள்ளாது இறைவனை ஏமாற்றி தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி மறுப்புத் தெரிவித்தான். ஆயினும், இறைவன் மோசேயை அழைத்து அவரைத் தைரியப்படுத்தி, அவருக்குத் துணையாக ஆரோனையும் கொடுத்து உதவினார். இவ்வாறு தாம் கொடுத்த வாக்குறுதியை தாம் கூறியவாறே நிறைவு செய்தார்.

"நான் உன்னோடு இருப்பேன்..."
(வி.ப. 3:12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பார்வோன் இறைவனை ஏமாற்றி, இறைவல்லமையை ஏற்றுக் கொள்ளாமல் மனதைக் கடினப்படுத்திக் கொண்டு செயற்பட்டதன் விளைவாக அவனும், முழு எகிப்திய இனமும் 10 தண்டனைகளுக்கு/துன்பங்களுக்கு முகம் கொடுக்கநேரிட்டது.




துன்பங்கள் படிப்படியாக வளர்ந்து தலைமகன் 'சாவு' நேரிடும்வரை பல துன்பங்களுக்கு முகங்கொடுக்க நேரிட்டதைப் பின்வரும் விவிலியப் பகுதியிலிருந்து விளங்கிக் கொள்ளலாம்.

தலைமகன் சாவின் பின்னர் பார்வோன் மன்னன் இஸ்ரயேலரைப் போக அனுமதித்தான். ஆயினும், மீண்டும் தன் மனதைக் கடினப்படுத்திக் கொண்டு இஸ்ரயேல் மக்களைப் பின் தொடர்ந்து வந்ததால் இறைவனுடைய வல்லமை அளப்பரியது என்பதை இஸ்ரயேல் மக்களால் அனுபவ ரீதியாக அறியமுடிந்தது. அவர்கள் பெற்ற அனுபவத்தை இவ்வாறு எடுத்துக் காட்டலாம். இயற்கையின் அதிபதி இறைவனாவார். முழு உலகமும் அவருடைய படைப்பாகும். மனிதனுக்கு தனது அன்பையும், பாதுகாப்பையும் வெளிப்படுத்த இறைவன் இயற்கையை பயன்படுத்திக்கொள்கிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அன்று இறைமக்களை அடிமைத்தனத்திலிருந்து மீட்டு வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குக் கூட்டிச் செல்லும் பொறுப்பை மோசேயிடம் ஒப்படைத்த இறைவன் திருமுழுக்கின் வழியாக இறை பிள்ளைகளான எங்களையும், பலவித அடிமைத்தனங்களினின்று விடுவித்து இறையாட்சி என்னும் வாக்களிக்கப்பட்ட நாட்டுக்கு அழைத்துச் செல்லும் பொறுப்பைத் திருச்சபையிடம் ஒப்படைத்துள்ளார்.

எனவே, நாம் ஒவ்வொருவரும் கட்டுண்டிருக்கும் அடிமைத்தனங்களிலிருந்து விடுபடுவதோடு, நமது சகோதர, சகோதரிகளையும் அந்நிலையிலிருந்து விடுவித்து விண்ணகமாகிய வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குப் பயணிப்போம். இது இறைபிள்ளைகளாகிய எமது கடமையாகும்.
இஸ்ரயேல் மக்களைப் பாதுகாத்து வழிநடத்திய இறைவன், எமது வாழ்க்கைப் பயணத்திலும் எம்மைப் பாதுகாக்கிறார். எமது தேவைகளைப் பூர்த்தி செய்கின்றார் என்ற உறுதியான நம்பிக்கை எமக்கிருக்க வேண்டும். அது ஓர் செயலூக்கமுள்ள நம்பிக்கையாக அமைய வேண்டும். செயலூக்கமற்ற நம்பிக்கை பற்றித் தூய யாக்கோபு தமது திருமுகத்தில் பின்வருமாறு எழுதியிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தம்மிடம் நம்பிக்கை உண்டு எனச் சொல்லும் ஒருவர் அதைச் செயல்களிலே காட்டாவிட்டால் அதனால் பயன் என்ன? அந்த நம்பிக்கை அவரை மீட்க முடியுமா?
'நம்பிக்கையும், செயல்வடிவம் பெறாவிட்டால் தன்னிலே உயிரற்றதாயிருக்கும்.

(யாக்கோபு 2:14 , 17)

**செயற்பாடு**

1. இன்றைய சமுதாயத்தில் வாழும் இளவயதினருக்குள்ள அடிமைத்தனங்கள் ஐந்து எழுதி, அவற்றிலிருந்து மீள்வதற்கான வழிமுறைகளையும் தருக.
2. மோசே பெற்ற அழைத்தலில் அவர் முகங்கொடுத்த சவால்கள் ஐந்து தருக.
3. உமது நம்பிக்கை செயலூக்கமுள்ள நம்பிக்கையாக அமைய நீர் வாழவேண்டிய முறையை, மூன்று உ தாரணங்களுடன் விளக்குக.

**வாழ்க்கைக்கு**



✝ விண்ணரசுக்குச் செல்லும் பாதை ஒடுக்கமானது, கரடுமுரடானது, தடைகள் நிறைந்தது.

✝ இறைவனுடன் ஒத்துழைத்தே அப்பயணத்தில் வெற்றி பெற உழைக்க வேண்டும்.

✝ வெற்றி நிச்சயம், நிச்சயமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8 சீனாய் உடன்படிக்கை



8.1 - மோசே பத்துக் கட்டளைகளுடன்

ஒரு விடயத்தை முன்னிட்டு, இருசாரார் நிபந்தனையோடு ஏற்படுத்திக் கொள்ளும் ஒப்பந்தமே உடன்படிக்கை ஆகும். இத்தகைய உடன்படிக்கைகள் பல உண்டு.அரசியல் உடன்படிக்கை, பொருளாதார உடன்படிக்கை, சமாதான உடன்படிக்கை திருமண உடன்படிக்கை எனச் சில உதாரணங்களைக் கூறுலாம்.

திருவிவிலியத்திலும் பல உடன்படிக்கைகள் காணப்படுகின்றன. அந்த உடன்படிக்கைள், பொதுவாகச் சமுதாயத்தில் காணப்படும் உடன்படிக்கைகளைவிட முற்றிலும் வேறுபட்டதாகும். அத்தகைய வேறுபாடுகள் சில பின்வருமாறு,

1. உடன்படிக்கைக்கு முன்வருபவர் இறைவன்.
2. இறைவனுக்கும், மனிதனுக்குமிடையில் எல்லையற்ற இடைவெளி இருக்கிறது.
3. இறைவன் வாக்குறுதிகளுக்கு நம்பிக்கைக்குரியவராக இருந்த போதும், மனிதன் அந்த வாக்குறுதியை மீறுகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தகைய உடன்படிக்கைகளுக்கு சில உதாரணங்கள்.

### 1. இறைவன் - ஆதிபெற்றோர்

உனக்கும் பெண்ணுக்கும் உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன். அவள் வித்து உன் தலையைக் காயப்படுத்தும். நீ அதன் குதிங்காலைக் காயப்படுத்துவாய்' என்றார்.

(தொ.நூ. 3:15)

ஆதிப் பெற்றோர் இறைவனுக்குக் கீழ்ப்படியாமல், அவரது கட்டளையை மீறி இறையுறவை இழந்தமையால் இறைவன் அவர்களுடன் உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்திக் கொண்டார். அந்த இழந்த இறை உறவை மீண்டும் கட்டியெழுப்ப மீட்பர் ஒருவரை அனுப்புவதாக இறைவன் ஆதிப்பெற்றோருக்கு வாக்களிக்கிறார். அவ் வாக்குறுதி கிறிஸ்துவில் நிறைவேறியது.

### 2. இறைவன் - நோவா

ஆதிப்பெற்றோரின் கீழ்ப்படியாமையினால் பாவத்திற்குட்பட்ட மனிதனின் பாவநிலை படிப்படியாக வளர்ந்தது. எனவே, இறைவன் பாவத்தையும், அதற் குட்பட்டவர்களையும் வெள்ளப்பெருக்கின் வழியாக இவ்வுலகிலிருந்து அழிக்கச் சித்தம் கொண்டார். மீண்டும் வெள்ளப்பெருக்கினால் உலகை அழிக்கப்போவதில்லை என இறைவன் உடன்படிக்கை ஒன்றின் மூலம் வாக்குப் பண்ணினார்.

''........உங்களோடு என் உடன்படிக்கையை நிறுவுகிறேன்; சதையுள்ள எந்த உயிரும் வெள்ளப்பெருக்கால் மீண்டும் அழிக்கப்படாது. மண்ணுலகை அழிக்க இனி வெள்ளப்பெருக்கு வரவே வராது.''

(தொ.நூ. 9:11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இவ் உடன்படிக்கையின் வெளியடையாளம் வானவில் ஆகும்.

> என் வில்லை மேகத்தின் மேல் வைக்கிறேன். எனக்கும், மண்ணுலகுக்கும் இடையே உடன்படிக்கையின் அடையாளமாக இது இருக்கட்டும்.
>
> (தொ.நூ. 9:13)

## 3. இறைவன் - ஆபிரகாம்

இறைவன் ஆபிரகாமோடும் உடன்படிக்கை ஒன்றை செய்து கொண்டார். அந்த உடன்படிக்கை இரு மரபுகளில் இருந்து எடுக்கப்பட்டு இரண்டு விதமாக முன்வைக்கப்பட்டுள்ளது.

| தொ.நூ. 15:1-21 (J மரபு) | தொ.நூ. 17:1-14 (P மரபு) |
|---|---|
| 1. அப்பொழுது ஆண்டவர் ஆபிராமை வெளியே அழைத்து வந்து,'' வானத்தை நிமிர்ந்து பார். முடியுமானால் விண் மீன்களை எண்ணிப்பார். இவற்றைப் போலவே உன் வழிமரபினரும் இருப்பர்.'' (தொ.நூ. 15:5) | ''.....மிகப்பெருமளவில் உன்னைப் பலுகச் செய்வேன்; உன்னிடமிருந்து நாடுகளை உருவாக்குவேன், உன்னிடமிருந்து அரசர்கள் தோன்றுவர். (தொ.நூ. 17:6) |
| 2. ''....... எமோரியர், கானானியர், கிர்காசியர், எபூசியர் ஆகியோர் வாழும் இந்நாட்டை உன் வழிமரபினர்க்கு வழங்குவேன்.'' (தொ.நூ. 15:21) | ''......நீ தங்கியிருக்கும் நாட்டையும் கானான் நாடு முழுவதையும் என்றுமுள்ள உரிமைச் சொத்தாக உனக்கும் உனக்குப் பின் உன் வழி மரபினருக்கும் வழங்குவேன். நான் அவர்களுக்குக் கடவுளாக இருப்பேன்'' (தொ.நூ. 17:8) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்உடன்படிக்கையில் இரண்டு பிரதான விடயங்கள் அடங்குகின்றன.

1. பெரியதொரு சந்ததியைப் பெற்றுக்கொடுத்தல்

2. எக்காலத்திற்கும் உரிமையான ஓர் நாட்டைப் பெற்றுக்கொடுத்தல்.

இறைவன் ஆபிரகாமோடு செய்துகொண்ட உடன்படிக்கையின் வெளி அடையாளம் விருத்த சேதனமாகும்.

நீங்கள் கடைப்பிடிக்குமாறு உன்னோடும் உனக்குப்பின் வரும் உன் வழிமரபினரோடும் நான் செய்துகொள்ளும் உடன்படிக்கை இதுவே; உங்களுள் ஒவ்வொரு ஆணும் விருத்த சேதனம் செய்துகொள்ள வேண்டும்.

(தொ.நூ. 17:10)

இந்த வெளிச்சடங்கினை நிறைவேற்றுவதன் மூலம் இஸ்ரயேல் மக்கள் இறைவனோடு உடன்படிக்கை உறவொன்றுக்கு உட்படுத்தப்பட்டனர்.

4. **சீனாய் உடன்படிக்கை** இடையருக்குரிய வாழ்க்கை நடாத்திய இஸ்ரயேல் மக்கள் சீனாய் உடன்படிக்கை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட இறைமக்களாக மாறினர். இந்த உடன்படிக்கைக்கு ஏற்ப வாழ்வதற்கு இறையன்பின் விசேட அடையாளமாகப் பத்துக் கட்டளை அவர்களுக்கு வழங்கப்பட்டது. நாம் இறைவனோடும், அயலவரோடும் தொடர்புகொள்ள வேண்டிய முறை இதன்மூலம் எமக்கு விளக்கப்படுகிறது. இந்த உடன்படிக்கையின் மூலம் எமக்கும் இறைவனுக்கும், அயலவருக்குமிடையில் நெருங்கிய உறவு ஏற்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலைப்பயணம் 20:1-17

**இறைவன் மட்டில் நமது கடமைகள்**

1. நானே உன் கடவுளாகிய ஆண்டவர்;...... என்னைத்தவிர வேறு தெய்வங்கள் உனக்கிருத்தல் ஆகாது.

2. 'உன் கடவுளாகிய ஆண்டவரின் பெயரை வீணாகப் பயன்படுத்தாதே'

3. ஓய்வு நாளைத் தூயதாகக் கடைப் பிடிப்பதில் கருத்தாயிரு.

**அயலவர் மீது நமது கடமைகள்**

4. உன் தந்தையையும் உன் தாயையும் மதித்து நட.

5. கொலை செய்யாதே.

6. விபசாரம் செய்யாதே.

7. களவு செய்யாதே.

8. பிறருக்கு எதிராகப் பொய்ச்சான்று சொல்லாதே.

9. பிறர் வீட்டைக் கவர்ந்திட விரும்பாதே.

10. பிறருக்குரியது எதையும் கவர்ந்திட விரும்பாதே.

இஸ்ரயேலின் எல்லாத் தலைமுறையினரும், அதைப் பின்பற்றி இறையுறவைக் கட்டி எழுப்பியுள்ளனர். நாமும் அதைப் பின்பற்றி ஒழுக்கவிழுமியங்களைக் கொண்ட வாழ்க்கையை வாழ்ந்து இறையாட்சிக்குள் நுழையும் தகுதியைப் பெற்றுக் கொள்வோம்.

சீனாய் உடன்படிக்கை வழியாக இஸ்ரயேலர் இறைமக்களானது போல, திருமுழுக்கின் மூலம் இறைவன் எம்மோடு செய்யும் உடன்படிக்கை வழியாக நாமும் இறைபிள்ளைகளாகின்றோம்.

இறைவனில் நம்பிக்கை வைப்போம்.

திருமுழுக்கு வார்த்தைப்பாடு.

இந்த வாக்குறுதியை நிறைவேற்றி இறைவனின் பிள்ளைக்குரிய தன்மையைப் பாதுகாப்போம்.

சாத்தானையும், அதன் செயல்களையும் விட்டுவிடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது விண்ணகத் தந்தை வாக்குறுதிகளுக்குப் பிரமாணிக்கமாக இருப்பது போல அவருடைய பிள்ளைகளாகிய நாமும் அவருக்குக் கொடுக்கும் வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும். நாம் இறைவனுக்குக் கொடுத்த வாக்குறுதியை மட்டுமல்ல, அயலவருடன் செய்துகொள்ளும் வாக்குறுதிகளையும் நிறைவேற்றிப் பிரமாணிக்கம் உள்ளவர்களாக வாழவேண்டும். அதன்மூலம் நாமும் நமது விண்ணகத் தந்தையை மகிமைப்படுத்துவோம்.

**செயற்பாடு**

1. பின்வரும் அட்டவணையை நிரப்புக.

| தொடர் இலக்கம் | உடன்படிக்கை | உடன்படிக்கை செய்து கொள்ளக் காரணம் | உடன்படிக்கையின் வாக்குறுதி |
|---|---|---|---|
| 1 | | | |
| 2 | | | |
| 3 | | | |
| 4 | | | |

2. 'பத்துக்கட்டளைகள் எல்லாக் காலத்திற்கும் உரியது' இக்கூற்றை 75 சொற்கள் அளவில் விபரிக்குக.

3. நீர், உமது திருமுழுக்கு வார்த்தைப்பாட்டை எவ்வாறு பிரமாணிக்கமாக நிறைவேற்றுகிறீர் என்பதனை எடுத்துக்காட்ட ஐந்து உதாரணங்கள் தருக.


**வாழ்க்கைக்கு**



- ✝ திருமுழுக்கு வாக்குறுதிகளுக்கு ஏற்ப வாழுவோம்.
- ✝ பத்துக் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவோம்.
- ✝ ஒழுக்க விழுமியங்களுக்கேற்ப வாழுவோம்.
- ✝ வாக்குறுதிகளை நிறைவேற்றுவோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9 தூய திருமுழுக்கு யோவான்



9.1 திருமுழுக்கு யோவான்

பழைய ஏற்பாடு

"இதோ! நான் என் தூதனை அனுப்புகிறேன்.
அவர் எனக்கு முன் வழியை ஆயத்தம் செய்வார்;......"
(மலாக்கி 3:1)

புதிய ஏற்பாடு

அவர், இஸ்ரயேல் மக்களுள் பலரைத் தம் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பிவரச் செய்வார்.
*(லூக்கா 1 16)*

பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்படுவதன்படி இயேசுவின் வருகைக்கு முன்னோடியாக அவருடைய செய்தியை ஏற்றுக்கொள்ள மக்களை ஆயத்தம் செய்வதே திருமுழுக்கு யோவானின் பணியாக இருந்தது. திருமுழுக்கு யோவானின் பிறப்பு வானதூதர் மூலம் அவரது தந்தை செக்கரியாவிற்கு அறிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருத்துவப் பணி மரபுக்கு ஏற்ப, ஆண்டவரின் திருக்கோவிலுக்குள் சென்று தூபம் காட்டுவது, யாரென்று அறியச் சீட்டுக் குலுக்கிப் போட்ட போது அது செக்கரியா பெயருக்கு விழுந்தது. அவர் தூபம் காட்டுகிறவேளையில் மக்கள் கூட்டத்தினர் அனைவரும் வெளியே இறைவனிடம் வேண்டிக்கொண்டிருந்தனர். அப்பொழுது ஆண்டவருடைய தூதர் ஒருவர் தூப பீடத்தின் வலப்பக்கத்தில் நின்றவாறு அவருக்குத் தோன்றினார். அவரைக் கண்டு செக்கரியா அச்சமுற்றுக் கலங்கினார். வானதூதர் அவரை நோக்கி ''செக்கரியா அஞ்சாதீர், உமது மன்றாட்டு கேட்கப்பட்டது. உம் மனைவி எலிச பெத்து உமக்கொரு மகனைப் பெற்றெடுப்பார், அவருக்கு யோவான் எனப் பெயரிடுவீர்;................''

(லூக்கா 1:9 -13)

அந்த இறை செய்தியை நம்ப முடியாதவராகச் செக்கரியா வானதூதரிடம் இவ்வாறு வினவினார்.

''இது நடைபெறும் என எனக்கு எப்படித் தெரியும்? நான் வயதானவன் அதுபோல் என் மனைவியும் வயது முதிர்ந்தவராயிற்றே''

(லூக்கா 1:18)

இறை செய்தியை நம்பாததால் செக்கரியா தண்டிக்கப்பட்டார்.

''......இதோ பாரும், உரிய காலத்தில் நிறைவேற இருக்கும் என்னுடைய வார்த்தைகளை நீர் நம்பவில்லை, ஆதலால் அவை நிறைவேறும் வரை நீர் பேச்சற்றவராய் இருப்பீர்; உம்மால் பேசவே இயலாது '' என்றார்

(லூக்கா 1:20)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செக்கரியாவும், எலிசபெத்தும் வயதானவர்களாக இருந்த போது, அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட குழந்தை இயேசுவின் முன்னோடியான தூய திருமுழுக்கு யோவானே ஆவார். அப்பிறப்பினால் எடுத்துக் காட்டப்படுவது, இறைவனால் ஆகாதது ஒன்றுமில்லை என்பதாகும். அது கபிரியேல் தேவதூதன் மரியாவுக்குக் கூறிய வார்த்தைகளின் மூலம் உறுதிப்படுத்தப்படுகிறது.

''......உம் உறவினராகிய எலிசபெத்தும் தம் முதிர்ந்த வயதில் ஒரு மகனைக் கருத்தரித்திருக்கிறார். கருவுற இயலாதவர் என்று சொல்லப்பட்ட அவருக்கு இது ஆறாம் மாதம். ஏனெனில் கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை '' என்றார்.

(லூக்கா 1:36 - 37)

கபிரியேல் வானதூதர் செக்கரியாவிற்கு, திருமுழுக்கு யோவானின் பிறப்புப் பற்றி அறிவித்த வேளை அவரைப் பற்றி பல விடயங்களை வெளிப்படுத்தினார்.

அவர் ஆண்டவர் பார்வையில் பெரியவராய் இருப்பார்; திராட்சை மதுவோ வேறு எந்த மதுவோ அருந்தமாட்டார்; தாய் வயிற்றில் இருக்கும் போதே தூய ஆவியால் முற்றிலும் ஆட்கொள்ளப்படுவார்''

(லூக்கா 1:15)

சகோதர அன்பால் நிறைந்த மரியா தனது உறவினரான எலிசபெத்தைச் சந்திக் கச்சென்று அவரை வாழ்த்தினார்.

மரியாவின் வாழ்த்தை எலிசபெத்து கேட்டபொழுது அவர் வயிற்றிலிருந்த குழந்தை மகிழ்ச்சியால் துள்ளிற்று. எலிசபெத்து தூய ஆவியால் முற்றிலும் ஆட்கொள்ளப்பட்டார்.

(லூக்கா 1:41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சந்தர்ப்பத்தில் திருமுழுக்கு யோவான் சென்ம பாவத்திலிருந்து நீக்கப்பட்டார் என்பது திருச்சபையின் படிப்பினையாகும்.

திருமுழுக்கு யோவானின் பிறப்பின் எட்டாம் நாள் விருத்தசேதனச் சடங்கை நிறைவேற்றவும், குழந்தைக்குப் பெயரிடவும் ஆயத்தமான சந்தர்ப்பத்தில் செக்கரியா, வானதூதர் கூறிய பெயரை வெளிப்படுத்தியதன் பின்பு அவரது வாய் திறந்தது. நா கட்டவிழந்தது.

அதற்கு அவர் எழுது பலகை ஒன்றைக் கேட்டு வாங்கி, "இக் குழந்தையின் பெயர் யோவான்" என்று எழுதினார். அப்பொழுதே அவரது வாய் திறந்தது, நா கட்டவிழ்ந்தது; அவர் கடவுளைப் போற்றிப் புகழ்ந்தார்.

(லூக்கா 1:63-64)

இவ்வாறு சிறப்பு வாய்ந்த ஒரு பிறப்பின் மூலம் அழைப்புப் பெற்ற திருமுழுக்கு யோவானுக்குக் கொடுக்கப்பட்ட இறைபணி, மெசியாவின் வருகைக்கு மக்களை ஆயத்தம் செய்தலாகும். அவர் தமது தூதுரைப் பணியை யோர்தான் ஆற்றை அடுத்துள்ள பகுதிகளில் ஆரம்பித்தார்.

" பாவ மன்னிப்பு அடைய மனம்மாறித் திருமுழுக்குப் பெறுங்கள்" என்று யோர்தான் ஆற்றை அடுத்துள்ள பகுதிகள் அனைத்துக்கும் சென்று அவர் பறைசாற்றி வந்தார்.

(லூக்கா 3:3)

இவ்வாறு தமது பணியை ஆரம்பித்த திருமுழுக்கு யோவான் தம்மிடம் வந்த மக்கள் கூட்டத்தை நோக்கி பின்வருமாறு சவால் விடுத்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''விரியன் பாம்பு குட்டிகளே வரப்போகும் சினத்திலிருந்து தப்பிக்க இயலும் என உங்களிடம் சொன்னவர் யார்? மனம் மாறியவர்கள் என்பதை அதற்கேற்ற செயல்களால்த் காட்டுங்கள். ஆபிரகாம் எங்களுக்குத் தந்தை என உள்ளத்தில் சொல்லத் தொடங்காதீர்கள். இக்கற்களிலிருந்தும் ஆபிரகாமுக்குப் பிள்ளைகளைத் தோன்றச் செய்ய கடவுள் வல்லவர் என உங்களுக்குச் சொல்லுகிறேன்......''

(லூக்கா 3 : 7 - 8)

இவ்வாறு அவர் கூறியதிலிருந்து எடுத்துக்காட்டப்படுவது. ஆபிரகாமின் வழித்தோன்றல்கள் என்பதால் மீட்புக் கிடைக்கப்போவதில்லை. அதற்காக மனம் வருந்துதலும், மனமாற்றமும் அவசியம் என்பதாகும். அவ்வாறே நாமும் திருமுழுக்குப் பெற்றதால் மட்டும் மீட்பு அடைய முடியாது. நமது பாவங்களுக்காக மனம் வருந்தி, உண்மையான மனமாற்றத்துடன் நல்ல முறையில் வாழவேண்டும்.

திருமுழுக்கு யோவானின் போதனைகளுக்குச் செவிமடுத்த மக்கள் கூட்டத்தினர். நாங்கள் என்ன செய்ய வேண்டும்? என்று வினவினர். (லூக்கா 3 :10) அவ்வாறு கேட்ட மக்கள் கூட்டத்தினருக்கும், வரிதண்டுபவர்களுக்கும், படை வீரர்களுக்கும் திருமுழுக்கு யோவான் கூறிய அறிவுரையானது; இன்று நமது சமுதாயத்தில் பலவிதத் துறைகளில் பலவித சேவைகளில் ஈடுபட்டிருப்போருக்கு மட்டுமல்ல, எதிர்காலத்தில் நாட்டின் அபிவிருத்திக்காக கல்வியின் வழியாக ஆயத்தம் செய்யும் இளைஞர், யுவதிகளான உங்களுக்கும் பொருந்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | அன்று | இன்று |
|---|---|---|
| மக்களுக்கு லூக்கா 3 :11 → | ✦ "இரண்டு அங்கிகளை உடையவர் இல்லாதவரோடு பகிர்ந்து கொள்ளட்டும்;<br>✦ உணவை உடையவரும் அவ்வாறே செய்யட்டும்" → | ✦ எமது தேவைக்குரியதைக் கூடப் பகிர்ந்து கொள்ள அழைப்பு |
| வரிதண்டுபவர்களுக்கு லூக்கா 3 :13 → | ✦ "உங்களுக்குக் குறிக்கப்பட்ட தொகைக்கு அதிகமாக எதையும் தண்டாதீர்கள்' → | ✦ நீதிநியாயமான தொழிலில் ஈடுபட அழைப்பு<br>✦ நாட்டு மக்களின் நலன் கருதி நேர்மையான முறையில் கடமைகளை நிறை வேற்றுதல். |
| படைவீரருக்கு லூக்கா 3 :14 → | ✦ நீங்கள் எவரையும் அச்சுறுத்திப் பணம் பறிக்காதீர்கள். யார் மீதும் குற்றம் சுமத்தாதீர்கள்;<br>✦ உங்கள் ஊதியமே போதுமென்றிருங்கள். → | ✦ ஊதியத்திற்கு ஏற்ற சேவை செய்தல் மனித நேயம், பொது நன்மை என்பவற்றைக் கருத்தில் கொண்டு நாட்டின் நன்மைக்காக நீதியோடு உழைக்க அழைப்பு. |

அன்று திருமுழுக்கு யோவான் முன்வைத்த புதிய சமூகக்கோட்பாட்டில் நீதியும், சமத்துவமும், ஒற்றுமையும் ஒருமைப்பாடும், அன்பும், இரக்கமும் அடங்கி உள்ளன.

மீட்பவரின் வருகைக்கு மக்களை ஆயத்தம் செய்ய அழைக்கப்பட்ட திருமுழுக்கு யோவானைப் போன்று, இயேசுவின் இரண்டாம் வருகைக்கு மக்களை ஆயத்தம் செய்யும் பொறுப்பு தாய்த் திருச்சபையால் தனிப்பட்ட முறையில் உமக்கும் தரப்படுகின்றது.

தாய்த் திருச்சபை திருவழிபாட்டு ஆண்டின் பிரதான இரு காலங்களான திருவகைக்காலத்தையும், தபக்காலத்தையும் மனமாற்றத்தின் காலங்களாகத் தந்துள்ளது. இவ்விரு காலங்களில் மட்டுமன்றி புதியதொரு சமூகத்தைக் கட்டியெழுப்ப எப்போதும் எல்லாச் சந்தர்ப்பத்திலும் செயற்பட வேண்டும். அவ்வாறே கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு நாம் ஆயத்தமாக வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருமுழுக்கு யோவானின் மரணம் (மத்தேயு 14 : 1-12)**

ஏரோதின் பிறந்த நாளில் ஏரோதியாளின் மகள் அவையினர் நடுவில் நடனம் ஆடி ஏரோதை அகமகிழச் செய்தாள். அதனால் அவர் எதைக் கேட்டாலும், அளிப்பதாக அவன் ஒரு வாக்குறுதியை ஆணையிட்டு அறிவித்தான். அவள் தன் தாய் சொல்லிக் கொடுத்தப்படியே '' திருமுழுக்கு யோவானின் தலையை ஒரு தட்டில் வைத்து இங்கேயே எனக்கு கொடும்'' என்று கேட்டாள். இதைக் கேட்ட அரசன் வருந்தினான்.; ஆனாலும், தன் விருந்தினர் முன் ஆணையிட்டதால் அதை அவளுக்குக் கொடுக்கக் கட்டளையிட்டான். ஆள் அனுப்பிச் சிறையில் இருந்த யோவானின் தலையை வெட்டச் செய்தான்.

(மத்தேயு 14 :6 - 10)

அவருடைய மரணத்திற்குப் பிரதான காரணம் அன்று கலிலேயாவின் குறுநில மன்னன் ஏரோது தனது சகோதரனின் மனைவியைத் தன்னோடு வைத்திருந்ததை பகிரங்கமாகச் சுட்டிக் காட்டிக் கடிந்து கொண்டதாகும்.

ஏரோது தன் சகோதரனான பிலிப்பின் மனைவியாகிய ஏரோதியாவின் பொருட்டு யோவானைப் பிடித்துக் கட்டிச்சிறையில் அடைத்திருந்தான். ஏனெனில் யோவான் அவனிடம்'' நீர் அவளை வைத்திருப்பது முறையல்ல'' ஏரோது அவரைக் கொலை செய்ய விரும்பினான்; ஆயினும் மக்கள் கூட்டத்தினர் அவரை ஓர் இறைவாக்கினர் எனக் கருதியதால் அவர்களுக்கு அஞ்சினான்.

(மத்தேயு 14 : 3 -5)

திருமுழுக்கு யோவானைப் போன்று இன்றும் நீதி சமத்துவம் பற்றிப் பேசுவோர் இவ்விதம் சாவை சந்திக்கும் சந்தர்ப்பங்களை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது.

உ+ம் - அருட்பணி மைக்கல் றொட்றிகோ அடிகளார். அருட்பணி மேரி பஸ்ரியன் அடிகளார்

திருமுழுக்குப் பெற்ற நீரும் ஓர் இறைவாக்கினர் ஆவீர். உமக்கு இன்றைய சமுதாயத்தில் நடைபெறும் அநீதி, அநியாயம், பொய்மை என்பவற்றுக்கு எதிராகக் குரல் கொடுக்க முடியுமா? அவ்வாறு அஞ்சாது இறைவாக்குப் பணியில் ஈடுபடும்போது உமக்குப் பல இழப்புகள் ஏற்படலாம். உமக்கு எவ்வித இழப்புக்கள் ஏற்பட்ட போதும், அப்பணியை விட்டு விலகிச் செல்ல உம்மால் முடியாது. அது உமது கிறிஸ்தவ கடமையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### செயற்பாடு

1. திருமுழுக்கு யோவான் மக்கள் கூட்டத்தினருக்குக் கொடுத்த செய்தியை செயற்படுத்த, நீர் மேற்கொள்ளும் செயல்கள் மூன்றைக் குறிப்பிடுக.
2. நீர் ஓர் இறைவாக்கினராகச் செயற்பட்ட ஒரு சந்தர்ப்பத்தை எழுதுக.

### வாழ்க்கைக்கு



நேர்மையாளராக வாழ்வோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 இயேசுவின் இறையாட்சிப் பணி



10.1 இயேசுவின் திருமுழுக்கு

திருமுழுக்கின் பொழுது மூவொரு கடவுளின் வெளிப்பாடு இடம் பெற்றது. அச் சந்தர்ப்பத்தில் தந்தை, இயேசு இறைமகன் என்பதை வெளிப்படுத்தினார். இதனைத் தூய லூக்கா பின்வருமாறு கூறுகிறார்.

மக்களெல்லாரும் திருமுழுக்குப் பெறும் வேளையில் இயேசுவும் திருமுழுக்குப் பெற்று, இறைவனிடம் வேண்டிக் கொண்டிருந்த போது வானம் திறந்தது. தூய ஆவி புறா வடிவில் தோன்றி அவர் மீது இறங்கியது. அப்பொழுது ''என் அன்பார்ந்த மகன் நீயே உன் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்'' என்று வானத்திலிருந்து ஒரு குரல் ஒலித்தது.

(லூக்கா 3:21-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோர்தான் ஆற்றில் இடம் பெற்ற அந்தச் சிறப்பான அனுபவத்தின் பின் இறை தந்தையுடன் ஆழ்ந்த உரையாடலில் ஈடுபட இயேசு பாலை நிலத்திற்குச் சென்றார். அதன் மூலம் மறைப்பணிக்கு தம்மை ஆயத்தம் செய்வதே அவரது நோக்கமாகும்.

> இயேசு தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு யோர்தான் ஆற்றை விட்டுத் திரும்பினார். பின்னர் அவர் அதே ஆவியால் பாலை நிலத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். அவர் நாற்பது நாள் அலகையினால் சோதிக்கப்பட்டார். அந்நாளில் அவர் ஒன்றும் சாப்பிடவில்லை. அதன்பின் அவர் பசியுற்றார்.
>
> (லூக்கா 4:1-2 )

மனித அவதாரம் கொண்ட இயேசு தமது பணியின் ஆரம்பத்தில் அலகையின் மூன்று சோதனைகளுக்கு முகம் கொடுத்தார்.

| | இயேசு முகம் கொடுத்த சோதனை | வெற்றிகொண்ட முறை | கிடைக்கும் செய்தி |
|---|---|---|---|
| சோதனை - 1 லுக்கா 4:3-4 | ''நீர் இறைமகன் என்றால் இந்தக் கல் அப்பமாகும் படி கட்டளையிடும்'' | ''மனிதர் அப்பத்தினால் மட்டும் வாழ்வதில்லை'' | தமக்குள்ள அதிகாரத்தையும், ஆற்றல்களையும், தன்னலம் இன்றிச் சமுதாய நலனுக்காகப் பயன்படுத்த வேண்டும். உணவினால் ஊட்டம் பெறும் உடல்சார் வாழ்க்கைக்கு மேலாக இறைவார்த்தையினால் ஊட்டம் பெறும் ஆன்மீக வாழ்வு மேலானதாகும். |
| சோதனை - 2 லூக்கா 4:7-8 | ''நீர் என்னை வணங்கினால் அனைத்தும் உம்முடைய வையாகும்.'' | ''உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி அவர் ஒருவருக்கே பணி செய்வாயாக'' | எமது வாழ்வில் இறைவனுக்குரிய இடத்தை, உலக சொத்துக்கும் அதிகாரத்திற்கும் கொடுக்கக்கூடாது. |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| சோதனை-3 லூக்கா 4:9-12 | பின்னர் அது அவரை எருசலேமுக்கு அழைத்துச் சென்று கோயிலின் உயர்ந்த பகுதியில் அவரை நிறுத்தி "நீர் இறைமகன் என்றால் இங்கிருந்து கீழே குதியும் உம்மைப் பாதுகாக்கும் படி கடவுள் தம் தூதருக்கு உம்மைக் குறித்துக் கட்டளை யிடுவார் என்றும், உமது கால் கல்லில் மோதாதபடி அவர்கள் தங்கள் கைகளால் உம்மைத் தாங்கிக் கொள்வார்கள் என்றும் மறை நூலில் எழுதியுள்ளது. | "உன் கடவுளாகிய ஆண்டவரை சோதிக்க வேண்டாம் என்று சொல்லி யுள்ளதே." | புகழை விரும்பிச் செயற்படக்கூடாது. |

இயேசு தமது சோதனைகளை வென்று தான் வளர்ந்த ஊராகிய நாசரேத்துக்கு வந்தார். தமது வழக்கத்தின் படி ஓய்வு நாளில் தொழுகைக் கூடத்திற்குச் சென்று வாசிக்க எழுந்தார். இறைவாக்கினர் எசாயாவின் சுருளேடு அவரிடம் கொடுக்கப்பட்டது. அதை அவர் திறந்தபோது பின்வரும் பகுதியைக் கண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" ஆண்டவருடைய ஆவி என்மேல் உள்ளது; ஏனெனில் அவர் எனக்கு அருள் பொழிவு செய்துள்ளார். ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும், சிறைப்பட்டோர் விடுதலை அடைவர். பார்வையற்றோர் பார்வைபெறுவர் என முழக்கமிடவும் ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும் ஆண்டவர் அருள் தரும் ஆண்டினை முழக்கமிட்டு அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பியுள்ளார்."

(லூக்கா 4:18-19)

மேற்கூறப்பட்ட நற்செய்திப் பகுதியில் காட்டப்பட்டுள்ளபடி ஏழைகள், அடிமைகள், துன்புறுவோர், பார்வையற்றோர் அனைவருக்கும் நல்வாழ்வைப் பெற்றுக் கொடுப்பதே அவருடைய பணியின் நோக்கமாகும்.

**புதுமைகள்**

சாத்தானின் வல்லமையைத் தோற்கடித்து இறையாட்சி வந்து விட்டது என்பதை உறுதிப்படுத்த இயேசு புதுமைகளைச் செய்தார். இயற்கைக்கு மாறாக இடம் பெறும் நிகழ்வு புதுமை என தூய அகுஸ்தினார் கூறுகிறார். உதாரணம்: பொதுவாக தண்ணீர் திராட்சை இரசமாவதில்லை. ஆயினும் இயேசு தண்ணீரைத் திராட்சை இரசமாக மாற்றினார்.

**இயேசு செய்த புதுமைகளை நான்கு வகையாகப் பிரிக்கலாம்.**

1. நோயாளிகளைக் குணமாக்குதல். (HEALINGS)கைசூம்பியவர் ஓய்வு நாளில் நலமடைதல். (மத்தேயு 12:9-14)

2. அசுத்த ஆவிகளை விரட்டுதல். (EXORCISMS) கெரசேனர் பகுதியில் பேய் பிடித்தவரை நலமாக்குதல். (மாற்கு 5:1-20)

3. இயற்கையோடு தொடர்பான புதுமைகள் (NATURE MIRACLES) கடல் மீது நடத்தல். மத்தேய (14:22-31)

4. இறந்தோரை உயிர்ப்பித்தல். (RAISING THE DEAD) இலாசர் உயிர்பெறுதல். (யோவான் 11:38-14)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




10.1 இயேசு செய்த புதுமைகள் நான்கு
வகைக்கும் உதாரணம்.

**இயேசு செய்த புதுமைகளின் ஊடாக**

- இறைவன் மனிதனுக்குக் காண்பிக்கும் அளவற்ற அன்பு விளங்குகிறது.
- இறைவன் மனிதனுக்கு வெளிப்படுகிறார்.
- இறை மகிமையும், வல்லமையும் வெளிப்படுகின்றன.
- இயேசு இறை மகன் என்று உறுதிப்படுத்தப்படுகிறது.
- இயேசுவின் மறைத்தூதுப்பணி உறுதிப்படுத்தப்படுகிறது.
- இறையாட்சியின் அடையாளம் மிளிர்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறையாட்சி வந்து விட்டது என்பதைப் புதுமைகளின் மூலம் உறுதிப்படுத்திய இயேசு, அதற்காகத் தமது வார்த்தையாலும் எவ்வாறு சான்று பகர்ந்தார் என்பது பின்வரும் நற்செய்திப் பகுதியின் மூலம் வெளிப்படுகிறது.

> நான் கடவுளின் ஆற்றலால் பேய்களை ஓட்டுகிறேன் என்றால் இறை ஆட்சி உங்களிடம் வந்துள்ளது அல்லவா!
>
> (லூக்கா 11:20)

புதுமைகள் இடம் பெறுவதற்கு நம்பிக்கை அவசியமாகும்.

1. இயேசு எரிக்கோவில் பார்வையற்று இருந்தவருக்கு இவ்வாறு கூறினார்: ''பார்வை பெறும்; உமது நம்பிக்கை உம்மை நலமாக்கிற்று.''

   (லூக்கா 18/42)

2. இரத்தப்போக்குடைய பெண்ணுக்கு இயேசு இவ்வாறு கூறினார். ''மகளே துணிவோடிரு உனது நம்பிக்கை உன்னைக் குணமாக்கிற்று''

   (மத்தேயு 9 : 22)

எல்லாப் பிரச்சினைகளிலும், சவால்களிலும் இறைவனிடத்தில் நம்பிக்கை வைத்து வாழ்வதன் மூலம் புதுமைகளை அனுபவிக்கலாம். அந்த அனுபவம் ஆழமாகும் போது நமது நம்பிக்கையும் ஆழமாகும்.

## 72 பேரின் மறைத்தூதுரைப் பணி (லூக்கா 10/1-12)

எழுபத்திரண்டு பேரின் மறைத்தூதுப் பணி பற்றிக் குறிப்பிடுபவர் தூய லூக்கா மட்டுமே ஆவார். அக்காலத்தில் உலகில் எழுபது மக்கள் இனங்கள் வாழ்ந்தார்கள் என திருவிவிலிய வல்லுனர்கள் கூறுகின்றனர். நற்செய்தியை அறியாத அம்மக்களுக்கு நற்செய்தியை எடுத்துச் செல்ல 72 பேரை அனுப்பியது அதனை அடையாளப்ப டுத்துகின்றது.

இயேசு இறையாட்சியை மனித உள்ளங்களில் விதைப்பதற்கு ஒரு குழுமத்தைத் தேர்ந்து கொண்டார். அவர்களுக்கு அந்த மறைத்தூதுரைப் பணியின் முக்கியத்துவத்தையும், அப்பணியில் முகம் கொடுக்க நேரிடும் சவால்களையும் விளக்கிக் கூறினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைத்தூதுரைப் பயணத்தில் அவர்கள் பின்பற்றவேண்டியவைகளையும் கற்றுக் கொடுத்தார். இறைபராமரிப்பில் நம்பிக்கை வைத்து பணப்பையோ வேறு பையோ மிதியடிகளோ எடுத்துச் செல்ல வேண்டாம் என அறிவுரை கூறி, அவர்களை அனுப்பினார்.

''அறுவடையோ மிகுதி; வேலையாள்களோ குறைவு. ஆகையால் தமது அறுவடைக்குத் தேவையான வேலையாள்களை அனுப்பும் படி அறுவடையின் உரிமையாளரிடம் மன்றாடுங்கள். புறப்பட்டுப் போங்கள்; ஓநாய்களிடையே ஆட்டுக்குட்டிகளை அனுப்புவது போல் உங்களை நான் அனுப்புகிறேன். பணப்பையோ வேறுபையோ மிதியடிகளோ எதுவும் நீங்கள் எடுத்துச் செல்ல வேண்டாம்; வழியில் எவருக்கும் வணக்கம் செலுத்த வேண்டாம். நீங்கள் எந்த வீட்டுக்குச் சென்றாலும், 'இந்த வீட்டுக்கு அமைதி உண்டாகுக!' என முதலில் கூறுங்கள். ........................... இறையாட்சி அவர்களை நெருங்கி வந்து விட்டது எனச் சொல்லுங்கள்.''

(லூக்கா 10:1-9)

உலகம் முடிவுவரை இறையாட்சியைப் பரப்பும் பணி திருச்சபைத் தாயிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. திருச்சபைத் தாயின் பிள்ளைகளாகிய நமக்கும் அப்பொறுப்பு திருமுழுக்கின் மூலமாகத் தரப்படுகிறது. அப்பொறுப்பானது கிறிஸ்தவ மதிப்பீடுகளை எமக்குள் உள்வாங்கி வாழ்வதோடு, ஆழமாக்கிக் கொள்ளுவதும் அந்த மதிப்பீடுகளைச் சமுதாயத்திற்கு எடுத்துச் செல்லவும் வேண்டும்.

அதுமட்டுமன்றி மறையை அளித்தல் மறையைக் கற்பித்தல் மூலம் மறையைப் பற்றிப் பேசுதல், கற்றுக் கொடுத்தல் மற்றும் வாழ்ந்து காட்டுவதன் மூலம் நற்செய்தியை உலகிற்கு எடுத்துச் செல்ல முடியும். இதற்குரிய விளைநிலமாகப் பங்குகளிலுள்ள பொது நிலையினரின் அப்போஸ்தலிக்க சபைகள் காணப்படுகின்றன. நற்செய்தியைப் பரப்புவது நம் அனைவரதும் கடமையாகும். அது கிறிஸ்துவின் பணியை முன் எடுத்துச் செல்வதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடு

1. நம்பிக்கையின் ஒளியில் நீர் உயிருள்ள கிறிஸ்துவை அனுபவித்த சந்தர்ப்பம் ஒன்று எழுதுக.

2. கிறிஸ்தவ மாணவரான நீர் எல்லா இனத்தாருக்கும் நற்செய்தியை எடுத்துச் செல்லும் பொறுப்பை எவ்வாறு நிறைவேற்றுவீர் என்பதற்கு ஐந்து உதாரணங்கள் தருக.

3. நமது வாழ்வில் புதுமைகள் நடைபெற, நாம் செய்ய வேண்டிய செயல்கள் மூன்று எழுதுக.

4. உமது வாழ்க்கையில் நீர் அனுபவித்த புதுமை ஒன்றினை எழுதுக.

**வாழ்க்கைக்கு**



- ✝ நம்பிக்கையில் உயிருள்ள இயேசுவை அனுபவிப்போம்.
- ✝ மறைத்தூதுப்பணி எமது கடமையாகும்.
- ✝ இயேசுவைப் போல் நாமும் நலிவுற்றோரிடம் இரக்கம் காட்டுவோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11 இறை ஆட்சி



11.1 அன்பும் நட்பும் எங்குள்ளதோ அங்கே இறைவன் இருக்கின்றார்

அரசு என்பது ஒரு நாட்டின் வரையறைக்குள், ஒரு கொள்கை அல்லது சட்ட விதிகளுக்குள் ஆள்வோருக்கும், ஆளப்படுவோருக்கும் இடையில் கூட்டாக இடம்பெறும் ஆட்சி முறையாகும். இறை ஆட்சி உலகு சார்ந்த அரசல்ல, இறை ஆட்சிக்கு நாட்டு வரையறை இல்லை. அப்படியாயின் இறைவனின் அரசு

மேலே வானத்திலா?
கீழே பூமியிலா?
உமக்குள்ளேயா?
எனக்குள்ளேயா?
அன்றேல் இன்னும் வரவில்லையா?

இறை ஆட்சி என்பது,

இறை விருப்பத்திற்குப் பணிவது ஆகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணகத்தில் இருப்பது என்பது ''கிறிஸ்துவோடு இருப்பது ஆகும்''. தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் கிறிஸ்துவிலே வாழ்கின்றார்கள். ஆனால் தங்கள் சுய அடையாளம், பெயர் என்பனவற்றைப் பேணுகின்றார்கள். தூய அம்புறோஸ் கூறுவதன்படி வாழ்வதென்பது கிறிஸ்துவோடு இருப்பது ஆகும். கிறிஸ்து எங்கு இருக்கிறாரோ அங்கு வாழ்வும் இறை ஆட்சியம் இருக்கின்றன.

(க.தி.ம.1025)

இயேசு இறை ஆட்சி மதிப்பீடுகளை உவமைகளின் மூலம் கற்பித்தார்.

உதாரணம் :

| | |
|---|---|
| 1.விதைப்பவன் உவமை. | (மத்தேயு 13:1-23) |
| 2.வயலில் தோன்றிய களைகள் உவமை. | (மத்தேயு 13:24-30) |
| 3.கடுகுவிதை, புளிப்பு மாவு உவமை. | (மத்தேயு 13:31-43) |
| 4.புதையல், முத்து, வலை உவமை. | (மத்தேயு 13:44-53) |

## விதைப்பவன் உவமை



11.2 விதைப்பவன் உவமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| விதைகள் விழுந்த நிலம் | விதைகளுக்கு நடந்தவை | உவமையின் விளக்கம் |
|---|---|---|
| வழியோரம் விழுந்த விதைகள் | பறவைகள் வந்து அவற்றை விழுங்கி விட்டன | உள்ளத்தில் விதைக்கப்பட்ட விதைகளைத் தீயோன் கைப்பற்றிச் செல்வான் |
| மண் இல்லாப் பாறைப் பகுதிகளில் விழுந்த விதைகள் | அங்கே மண் ஆழமாக இல்லாததால் அவை விரைவில் முளைத்தன. எனினும் கதிரவன் மேலே எழ அது காய்ந்து வேரில்லாமல் போனது | இறை வார்த்தையைக் கேட்டவுடன் அதை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்வார்கள். ஆனால் அவர்கள் வேரற்றவர்கள் எனவே அவர்கள் சிறிதுகாலமே நிலைத்திருப்பார்கள். இறைவார்த்தையின் பொருட்டு வேதனையோ,இன்னலோ நேர்ந்த உடனே தடுமாற்றம் அடைவார்கள் |
| முட்செடிகளின் இடையே விழுந்த விதைகள் | முட்செடிகள் வளர்ந்து அவற்றை நெருக்கி விட்டன | இறைவார்த்தையைக் கேட்டும் உலகக் கவலையும், செல்வப் பற்றும் உள்ளவர்கள் அவ்வார்த்தையை நெருக்குவதால் பயன் அளிக்க மாட்டார்கள். |
| நல்ல நிலத்தில் விழுந்த விதைகள் | சில நூறு மடங்காகவும், சில அறுபது மடங்காகவும், சில முப்பது மடங்காகவும் விளைச்சலைக் கொடுத்தன | இறை வார்த்தையைக் கேட்டுப் புரிந்து கொள்வார்கள். இவர்களுள் சிலர் நூறுமடங்காகவும், சிலர் அறுபது மடங்காகவும், சிலர் முப்பது மடங்காகவும் பயன் அளிப்பர் |

இயேசு தம் போதனை மூலம் இறை ஆட்சி பற்றி மக்களுக்கு விளக்கினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறையாட்சி எப்போது வரும் என்று பரிசேயர் இயேசுவிடம் கேட்டனர். அவர் மறுமொழியாக, " இறையாட்சி கண்களுக்குப் புலப்படும் முறையில் வராது. இதோ, இங்கே! அல்லது அதோ, அங்கே எனச் சொல்ல முடியாது. ஏனெனில் இறையாட்சி உங்கள் நடுவேயே செயற்படுகிறது" என்றார்.

(லூக்கா 17:20-21)

ஆகையால் அவருடைய அரசைத்தேடி அலைந்து திரிய அவசியமில்லை. அவருடைய அரசு எங்களுக்குள்ளேயே உள்ளது, எங்கள் நடுவே உள்ளது. நாம் வாழும் எல்லா இடத்தையும், இறை ஆட்சிக்குள் கொண்டுவர எம்மை அர்ப்பணிப்போம். அதை நிறைவேற்றிக் கொள்வதற்காக நாம் அனைவரும் அர்ப்பணிப்புடன் இயேசு போதித்த மலைப் பொழிவைத் தினமும் வாசித்து, அப்போதனைகளின் படி வாழ்வோம்.

**மலைப் பொழிவு கற்பிக்கும் இறை ஆட்சி மதிப்பீடுகள்.**



மத்தேயு 5,6,7ம் அதிகாரங்களில் அடங்கியுள்ள மலைப்பொழிவில் இடம் பெற்ற படிப்பினைகள் சில பின்வருமாறு;

| | |
|---|---|
| எட்டுப் பேறுகள் | (மத்தேயு 5: 1-12) |
| உப்பும், ஒளியும் | (மத்தேயு 5: 13-16) |
| பழிவாங்குதல் | (மத்தேயு 5: 38-42) |
| பகைவரிடம் அன்பாயிருத்தல் | (மத்தேயு 5: 43-48) |
| அறச் செயல்கள் | (மத்தேயு 6: 1-4) |
| நோன்பு இருத்தல் | (மத்தேயு 6: 16-18) |
| உண்மைச் செல்வம் | (மத்தேயு 6: 19-21) |
| கவலை வேண்டாம் | (மத்தேயு 6: 25-34) |
| பொன் விதி | (மத்தேயு 7: 12) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடுக்கமான வாயில் (மத்தேயு 7: 13-14)
சொல்லும், செயலும் (மத்தேயு 7: 21-23)
இருவகை அடித்தளங்கள் (மத்தேயு 7: 24-29)

எட்டுப் பேறுகள் மூலம் இறை அரசின் மதிப்பீடுகள்

ஏழையரின் உள்ளத்தோர் பேறுபெற்றோர்; ஏனெனில் விண்ணரசு அவர்களுக்கு உரியது. (மத் 5:3)

துயருறுவோர் பேறுபெற்றோர், ஏனெனில் அவர்கள் ஆறுதல் பெறுவர். (மத் 5:4)

கனிவுடையோர் பேறுபெற்றோர்; ஏனெனில் அவர்கள் நாட்டை உரிமைச் சொத்தாக்கிக் கொள்வர். (மத் 5:5)

நீதிநிலைநாட்டும் வேட்கை கொண்டோர் பேறுபெற்றோர்; ஏனெனில் அவர்கள் நிறைவு பெறுவர். (மத் 5:6)

இரக்கமுடையோர் பேறுபெற்றோர்; ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர். (மத் 5:7)

தூய்மையான உள்ளத்தோர் பேறு பெற்றோர்; ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர். (மத் 5:8)

அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர்; ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவர். (மத் 5:9)

நீதியின் பொருட்டுத் துன்புறுத்தப்படுவோர் பேறுபெற்றோர்; ஏனெனில் விண்ணரசு அவர்களுக்குரியது. (மத் 5:10)

இயேசு எட்டுப் பேறுகள் மூலம் இறை ஆட்சியின் மதிப்பீடுகளை எடுத்துக் காட்டுகிறார். எமக்குள்ளும், எம்மத்தியிலும் இறை ஆட்சியைக் கட்டியெழுப்ப இந்த எட்டுப்பேறுகளையும், பின்பற்றி அமைதியும், மகிழ்ச்சியும், அன்பும் நிறைந்த ஓர் உலகை உருவாக்குவோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையின் ஒழுக்க விழுமியங்களில் பிரதிபலிக்கும் இறை ஆட்சி மதிப்பீடுகள்

இறை ஆட்சியின் மதிப்பீடுகளை வளர்க்க இயேசு எம்மை அழைக்கிறார். இலங்கையில் பின்பற்றப்படும் ஒழுக்க விழுமியங்கள் மூலம் இறை ஆட்சியின் மதிப்பீடுகளை வளர்க்க முற்படுவோம். அவ்வொழுக்க விழுமியங்களுள் சில பின்வருமாறு,

- கரங்களைக் குவித்து ''கடவுளுக்குத் தோத்திரம்'' எனக் கூறுதல்.
- வீட்டிலிருந்து வெளிப்பயணங்கள் செல்லும் முன்னே, மற்றும் ஒரு முக்கிய செயலை, அல்லது வேலையை ஆரம்பிக்கும் முன்னர் செபித்தல், சிலுவை அடையாளம் வரைதல்.
- பெற்றோர், பெரியோர், ஆசிரியர்களின் பாதம் பணிந்து வணங்குதல்.
- மற்றவர்களுடைய தனிப்பட்ட விடயங்களுக்கு மதிப்பளித்து, ஒதுங்கியிருத்தல்.
- பெரியோரை மதித்தல், உரிய கௌரவமளித்தல்.
- மூத்தோர், பெரியோர் முன்னிலையில் எழுந்து நிற்றல், அவர்களை விட மேல் ஆசனங்களில் அமராதிருத்தல்.

இவற்றுடன், இன்னும் பல ஒழுக்க விழுமியப் பண்புகள் உள்ளன. அவற்றைப் பாதுகாத்துப் பின்பற்றி வாழ்வதன் மூலம், நாம் இறை ஆட்சியை நோக்கி மக்களை வழிநடத்துபவர்களாக இருப்போம்.

இறை ஆட்சியை உரிமையாக்கிக்கொள்ள இறைவன் நம் எல்லோரையும் அழைக்கிறார், என்பதைப் புரிந்து நாம் அனைவரும் இயன்ற அளவில் அதற்காக அர்ப்பணிப்புடன் உழைக்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடு

1.பின்வரும் அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| உவமை | உவமை சுருக்கம் | படிப்பினை |
|---|---|---|
| 1. வயலில் தோன்றிய களைகள் | | |
| 2. கடுகுவிதை | | |
| 3. புளிப்புமா | | |
| 4. புதையல் | | |
| 5. முத்து | | |
| 6. வலை | | |

2. மலைப்பொழிவின் உதவியுடன் பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| போதனை | உமக்குக் கிட்டும் செய்தி |
|---|---|
| 1. பழிவாங்குதல் தொடர்பான போதனை | ........................................................ |
| 2. அறச் செயல்கள் தொடர்பான போதனை | ........................................................ |
| 3. நோன்பிருத்தல் தொடர்பான போதனை | ........................................................ |

**வாழ்க்கைக்கு**



எட்டுப்பேறுகளையும், அனுசரிப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12 திருமுழுக்கும் உறுதிப்பூசுதலும்




12.1 இயேசுவின் திருமுழுக்கு — ஓர் குழந்தையின் திருமுழுக்கு

## திருமுழுக்கு

இறையாட்சிக்கு உட்படத் திருமுழுக்குப் பெற வேண்டும் என்று இயேசு நிக்கதேம் என்பவருக்குக் கூறியதிலிருந்து உறுதிப்படுத்தப்படுகிறது.

> ''ஒருவர் தண்ணீராலும் தூய ஆவியாலும் பிறந்தாலன்றி இறையாட்சிக்கு உட்பட இயலாது என்று மிக உறுதியாக உமக்குச் சொல்லுகிறேன்.''
>
> (யோவான் 3.5)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு கற்பித்த இயேசு விண்ணேற்பு அடையும் முன் தமது திருத் தூதர்களுக்குக் கட்டளையிட்டுக் கூறியது: எல்லா இனத்தாரையும் சீடராக்கி அவர்களுக்கு திருமுழுக்குக் கொடுக்கும் படியாகும்.

"நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்; தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள். நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்களும் கடைப்பிடிக்கும்படி கற்பியுங்கள். இதோ! உலக முடிவுவரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன் "

(மத்தேயு 28.19-20)

**திருமுழுக்கு அருள் அடையாளம் வழங்கும் இறை அருள்**

- சென்ம பாவத்திலிருந்து கழுவப்படுதல் கன்ம பாவத்திலிருந்து விடுவிக்கப்படுதல்.
- இறைவனின் பிள்ளையாதல்.
- மூவொரு கடவுள் வாழும் இல்லமாதல்.
- ஆன்மாவில் அழியாத முத்திரை ஒன்று பதிக்கப்படல்.
- இறை அரசின் உரிமையாளராதல்.
- மற்றைய அருளடையாளங்களைப் பெறுவதற்கான தகுதி பெறுதல்.
- குருத்துவ மேய்ப்பு இறைவாக்குப் பணியில் ஈடுபடல்.
- கிறிஸ்துவின் மறை உடலின் உறுப்புக்களாதல்.
- திருச்சபையில் அங்கத்தவராதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுழுக்கின் மூலமாக நீங்கள் தூய ஆவியின் ஆலயங்கள் ஆனீர்கள். கனமான பாவம் புரிந்து அந்த மாபெரும் உத்தமரை உங்கள் ஆன்மாவிலிருந்து அகற்றி விடாதீர்கள்.

(தூய திருத்தந்தை பெரிய லியோ)

## ஞானப் பெற்றோராவதற்கு இருக்க வேண்டிய தகுதிகள்

- புகுமுக அருளடையாளங்களைப் பெற்றிருத்தல் (திருமுழுக்கு, உறுதிப் பூசுதல், நற்கருணை)
- 16 வயதைப் பூர்த்தி செய்தவராக இருத்தல்.
- தனது கிறிஸ்தவ நம்பிக்கையில் வாழுபவராகவும், தனது கிறிஸ்தவ கடமைகளையும் பொறுப்புக்களையும் பற்றிய அறிவு உடையவராகவும் இருத்தல்.
- திருச்சபையின் சட்டத்திட்டங்களினால் விலக்கிவைக்கப்படாதவராய் இருத்தல்.
- குழந்தையின் பெற்றோரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களாயிருத்தல்.
- அவர்களுக்குரிய கடமைகளைப் பொறுப்புக்களை நிறைவேற்ற விருப்புடையோரா யிருத்தல், அதற்கான ஆற்றல் உடையவர்களாயிருத்தல்.
- பிள்ளையின் பெற்றோர் அல்லாது இருத்தல்.

## திருமுழுக்கில் பயன்படுத்தப்படும் அடையாளங்களும் அவற்றின் அர்த்தங்களும்

தண்ணீர் : ''தண்ணீர் திருமுழுக்கில் முக்கியமானதும், கட்டாயமானதுமான அடையாளமாகும். பாவங்களைக் கழுவுவதன் அடையாளமாக தண்ணீர் பயன்படுத்தப்படுகிறது.

உலகைப் படைக்கும் போது தண்ணீர் பங்கு கொள்ளுகிறது. உலக ஆரம்பத்தில் நீர்த்திரளின் மேல் கடவுளின் ஆவி அசைந்தாடிக் கொண்டிருந்தது'' (தொ.நூ 1:2). இயேசு திருமுழுக்குப் பெற்றபோது அவர் மீது பரிசுத்த ஆவி இறங்கி வந்தது. (மாற் 1:10,யோவா 3:5).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்ணிற ஆடை : வெள்ளை நிறம் தூய்மையின் அடையாளமாகும். வெள்ளை ஆடையைக் குழந்தையின் மேல் வைத்தலால் அல்லது அணிதலால் குழந்தை பெறும் ஆன்மீகத் தூய்மை அடையாளப்படுத்தப்படுகிறது. பாவம் புரியுமுன் அருள் வாழ்வில் இருந்த மனிதன் பாவத்திற்குப் பின் இறை அருள் வாழ்வை இழந்து விட்டான். திருமுழுக்கின்போது அணியப்படும் வெள்ளை ஆடையின் மூலம், மீண்டும் அருள் வாழ்விற்கு உயர்த்தப்படுவது அடையாளப்படுத்தப்படுகிறது. இயேசு தோற்றம் மாறிய போது அவர் அணிந்திருந்த வெண்மையான ஆடையையும் இது அடையாளப்படுத்துகிறது. உயிர்த்த கிறஸ்துவின் ஆடையினதும், அடையாளமாகவும் இது இருக்கின்றது. திருமுழுக்கின் மூலம் நாம் உயிர்த்த கிறிஸ்துவின் மகிமையில் பங்கு பெறுகிறோம். (மாத் 28:2)

திருத்தைலம் பூசுதல் : ''கிறிஸ்மா'' (Chrism) என்பது கிறிஸ்துவின் பெயரால் அர்ச்சிக்கப்பட்ட கிறிஸ்மா தைலம் ஆகும். இத்திருத்தைலம் திருமுழுக்கின் போது பூசப்படுகிறது.

திருத்தைலம் பூசுதல் திடப்படுத்தலின் அடையாளமாகும். திருமுழுக்கின் மூலம் ஒரு கிறிஸ்தவனாகத் திடப்படுத்தப்படுவது,

- தனது நம்பிக்கைக்கு ஏற்ப வாழுவதற்கும்,
- தனது நம்பிக்கைக்கு எதிராக எழும் சவால்களை எதிர்த்துப் போராடுவதற்கும் ஆகும்.

திருமுழுக்குப் பெற்ற கிறிஸ்தவன் அரச, குருத்துவ, இறைவாக்குப் பணிகள் வழியாக இறைவனுக்கும், மனிதருக்கும் பணிசெய்வதற்காக அருள் பொழிவு செய்யப்படுகிறான்.

பாஸ்காத்திரி : பாஸ்காத்திரி உயிர்த்த கிறிஸ்துவின் அடையாளமாகும். திருமுழுக்குச் சடங்கின்போது ஏற்றப்படும் பாஸ்கா திரியின் ஒளியானது குழந்தையின் ஆன்மாவிற்குக் கிடைக்கும் உயிர்த்த கிறிஸ்துவின் ஒளியின் அடையாளமாக உள்ளது. கிறிஸ்துவைப் பின் செல்லும் எவரும் இருளில் நடப்பதில்லை என்பதையும், குழந்தை ஒளியின் பிள்ளை என்பதையும், ஒளியில் எப்போதும் வாழ வேண்டும் என்பதையும் அடையாளப்படுத்துகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உறுதிப்பூசுதல்




12.2 ஆயர் உறுதிப்பூசுதல் வழங்குதல்

## மீட்பின் வரலாற்றில் உறுதிப்பூசுதல்

இயேசுவின் வாழ்விலிருந்து தூய ஆவியின் செயற்பாட்டைப் பிரிக்க முடியாது. அவர் தூய ஆவியினாலேயே கருவானார்.

''யோசேப்பே, தாவீதின் மகனே, உம் மனைவி மரியாவை ஏற்றுக்கொள்ள அஞ்ச வேண்டாம். ஏனெனில் அவர் கருவுற்றிருப்பது தூய ஆவியால் தான். ''

(மத் 1:20)

வானதூதர் மரியாளுக்கு இவ்வாறு கூறினார்.

''தூய ஆவி உம்மீது வரும். உன்னத கடவுளின் வல்லமை உம்மேல் நிழலிடும். ஆதலால் உம்மிடம் பிறக்கப் போகும் குழந்தை தூயது. அக்குழந்தை இறைமகன் எனப்படும்......''

லூக் 1:35

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசு திருமுழுக்கு யோவானிடம் யோர்தான் ஆற்றங்கரையில் திருமுழுக்குப் பெற்ற போது தூய ஆவி புறா வடிவில் அவர் மீது இறங்கி வந்தார். அவர் தமது பகிரங்க வாழ்க்கையை ஆரம்பிக்கும்போது இவ்வாறு கூறினார்.

''ஆண்டவருடைய ஆவி என்மேல் உளது. ஏனெனில் அவர் எனக்கு அருள்பொழிவு செய்துள்ளார். .......... ''

லூக்கா 4:18

தூய ஆவி திருத்தூதர்கள் மேல் வரும்போது அவர்கள் எவ்வாறு செயற்படுவர் என இயேசு, அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தார்.

''ஆனால் தூய ஆவி உங்களிடம் வரும்போது நீங்கள் கடவுளது வல்லமையைப் பெற்று எருசலேமிலும், யூதேயா, சமாரியா, முழுதிலும் உலகின் கடைசி எல்லை வரைக்கும் எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள் ''

(திப. 1: 8)

## உறுதிப்பூசுதல் பெறத் தேவையான தகுதிகள்

- திருமுழுக்குப் பெற்றிருத்தல்.
- குறிப்பிட்ட வயது (வயது *14* ) நிறைவடைந்திருத்தல்.
- அருள் நிலையில் வாழுதல், ( அருள் நிலையில் உறுதிப்பூசுதல் பெற ஒப்புரவு அருளடையாளத்தைப் பெற வேண்டும்)
- முறையான மறை அறிவைப் பெற்றிருத்தல்.
- உறுதிப்பூசுதல் பெற முழு விருப்பம்.
- கிறிஸ்துவின் படைவீரனாக ஆயத்தம் செய்தல்.
- நம்பிக்கையை வெளிப்படுத்தல் (திருமுழுக்கு வார்த்தைப் பாட்டைப் புதுப்பித்தல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* **உறுதிப்பூசுதல் வழியாகக் கிடைக்கும் கொடைகள்**
* உறுதிப்பூசுதல் வழியாக, திருமுழுக்கின் போது நாம் பெற்ற இறை அருள் ஆழமாக்கப்படுகிறது. வளர்ச்சியடைகிறது.
* திருச்சபையில் முழுமையான அங்கத்தவம் கிடைக்கின்றது.
* இறை பிள்ளைக்குரிய மனப்பான்மையோடு 'அப்பா தந்தாய்' என அழைக்கும் உரிமையை பெறுகிறோம்.
* கிறிஸ்து இயேசுவோடு இணைக்கப்படுகிறோம்.
* நம்மில் தூய ஆவியின் கொடைகள் மேலும் வளர்ச்சி அடைகிறது.
* திருச்சபையோடு உள்ள தொடர்பு, மேலும் நிறை வாழ்விற்கு இட்டுச் செல்கின்றது.
* முதிர்ச்சி அடைந்த ஒரு கிறிஸ்தவனாக, கிறிஸ்துவின் சாட்சியாக சொல்லாலும், செயலாலும் நம்பிக்கையைப் பரப்ப தூய ஆவியின் விசேட சக்தி கிடைக்கிறது.
* கிறிஸ்துவின் பெயரை அச்சமின்றி வெளிப்படுத்தவும், ஒரு போதும் சிலுவையைப் பற்றி வெட்கத்திற்குள்ளாகாதிருக்கவும் சக்தி கிடைக்கிறது.
* சமுதாயத்தில் நிலவும் சீர்கெட்ட அனைத்து நடவடிக்கைகளிலிருந்தும் பாது காத்துக் கொள்ளவும், வாழ்க்கையில் எதிர் கொள்ளும் சவால்களின் மத்தியில் உறதியாக இருக்கவும், அச்சவால்களுக்கு அஞ்சாது முகம் கொடுக்கவும் சக்தியும் பலமும் கிடைக்கிறது.

**உறுதிப் பூசுதலை வழங்குபவர்**

உறுதிப் பூசுதலை வழங்கும் தகுதி பெற்ற பணியாளனாக செயற்பட வேண்டியவர் மறை ஆயராவர். வளர்ந்தோருக்கான திருமுழுக்கின் போது குருவானவரால் அச் சடங்கின் போதே உறுதிப் பூசுதலும் வழங்கப்படுகிறது. மரணத்தருவாயில் இருக்கும் கிறிஸ்தவனாக இருப்பின், எந்த ஒரு கத்தோலிக்க குருவானவருக்கும் இந்த அருளடையாளத்தை வழங்க அனுமதி உண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செயற்பாடு**

1. பின்வரும் சந்தர்ப்பங்களில் உறுதிப்பூசுதல் பெற்ற நீர் எவ்வாறு செயற்படுவீர் என எழுதுக.

| சந்தர்ப்பம் | பிரதிபதில் |
|---|---|
| 1. நம்பிக்கைக்கு எதிராக பகிரங்க எதிர்ப்புக்கள் ஏற்படும் போது | ............................................... |
| 2. தகாத செயல்களுக்குத் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள முயலும் போது | ............................................... |
| 3. உண்மை பேச வேண்டிய சந்தர்ப்பத்தில் | ............................................... |

2. திருமுழுக்கின்போது பயன்படுத்தப்படும் அடையாளங்களையும் அவற்றின் அர்த்தங்களையும் அட்டவணைப்படுத்துக.

3. உறுதிப் பூசதல் மூலம் கிடைத்த அருட்கொடைகளை வளர்த்துக்கொள்ள நீர் செய்த செயல்கள் மூன்று எழுதுக.

**வாழ்க்கைக்கு**



எனது நம்பிக்கைக்கும், தூய்மைக்கும் எதிராக சவால்கள் வரும் போது, கிறிஸ்துவின் போர் வீரனாக அவற்றை எதிர்த்துப் போர்புரிவேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# 13 குணமளிக்கும் அருளடையாளங்கள்

குணமளிக்கும் அருளடையாளங்கள் இரண்டு ஆகும்.

1. ஒப்புரவு அருளடையாளம்.
2. நோயில் பூசுதல் அருளடையாளம்.

இவ்விரு அருளடையாளங்கள் வழியாக அதைப் பெறுபவருக்கு ஆன்ம, உடல் நலம் கிடைப்பதால் குணமளிக்கும் அருளடையாளங்கள் என அழைக்கப்படும். இந்த ஆன்ம, உடல் நலம் நித்திய வாழ்விற்கு வழிவகுக்கிறது.

## ஒப்புரவு அருளடையாளம்




13.1 ஒப்பரவு பெறும் சந்தர்ப்பங்கள்

## ஒப்புரவு அருளடையாளத்தைக் குறிக்கும் வேறு பெயர்கள்

### 1. மனமாற்றத்தின் அருளடையாளம்

தனது பாவ நிலையை ஏற்று, அதற்காக மன்னிப்புப் பெற்று, இறைவனிடம் மீண்டும் திரும்பி வருதல் இடம் பெறுவதால், இப்பெயரால் அழைக்கப்படுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2. பாவக் கழுவாய் அருளடையாளம்**

நமது பாவங்களுக்காக மனம்வருந்துவதன் முக்கியத்துவமும், பாவங்களுக்காகப் பரிகாரம் செய்வதன் முக்கித்துவமும் இவ் அருளடையாளத்தின் மூலம் உணர்த்தப்படுவதால் இப்பெயரால் அழைக்கப்படுகிறது.

**3.பாவசங்கீர்த்தனம்**

ஒவ்வொருவரும் தம்பாவங்களை அறிக்கையிட்டு அவற்றிற்கு மன்னிப்பு வேண்டுவதால் இப்பெயர் வழங்கப்படுகிறது.

**4.மன்னிப்பின் அருளடையாளம்**

இவ் அருளடையாளத்தின் முக்கிய பிரதிபலன் பாவமன்னிப்பாகும். அதனால் மன அமைதி கிடைக்கிறது.

## உள்ளார்ந்த மனம் வருந்துதல்

உள்ளார்ந்த மனம் வருந்துதல் என்பது கடவுளின் இரக்கமுள்ள அன்பிற்குப் பதில் கூற இறையருளால் ஈர்க்கப்படுகின்ற நொருங்கிய உள்ளத்தின் (திபா 51:17) இயக்க நிலையாகும். இது செயல்வழிப் பாவங்களுக்கான மனத்துயரத்தையும், அவற்றை வெறுத்து ஒதுக்குவதையும், எதிர்காலத்தில் மீண்டும் பாவம் செய்யாமலிருக்கும் உறுதிப்பாட்டையும், கடவுளின் உதவியில் நம்பிக்கை வைப்பதையும் உள்ளடக்கியது ஆகும். இது கடவுளின் இரக்கத்தில் நாம் கொள்ளும் எதிர் நோக்கினால் ஊட்டம் பெறுகிறது.

**உள்ளார்ந்த மன வருந்தலுக்கு ஒருவர் செய்யவேண்டியது**

முதலில் நம்பாவங்களுக்காக மனம் வருந்த வேண்டும். உள்ளத்தில் உருவாகும் துயரும், செய்த குற்றத்தையும் வெறுப்பதும், மீண்டும் பாவம் செய்வதில்லை என உறுதியான தீர்மானம் எடுப்பதும் ஆகும்.

மனம் வருந்துதல் இருவகைப்படும்

உண்மையாக மனம் வருந்துதல் | பயத்தினால் மனம் வருந்துதல்

உண்மையாக மனம் வருந்துதல் என்பது அனைத்திற்கும் மேலாக இறைவனை அன்பு செய்வதை அடிப்படையாக வைத்து அன்பின் காரணமாக ஏற்படும் மனம் வருந்தலாகும். இது அன்பின் மனம் வருந்தல் எனவும் அழைக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையான மனம் வருந்துதல் மூலம் செய்த பாவத்திற்கு மன்னிப்புப் பெறலாம். ஆயினும், சாவான பாவம் செய்தபோது உண்மையான மனத்துயர் மட்டும் போதாது. விரைவில் பாவசங்கீர்த்தனம் செய்யும் தீர்மானத்துடன் செய்த சாவான பாவத்திற்காக உண்மையாக மனம் துயர்படும் போது அப்பாவத்திற்கு மன்னிப்புக் கிடைக்கிறது.

விண்ணக வாழ்வை அல்லது இறை அரசை இழந்து நரகத்தின் வேதனைகளுக்கு உள்ளாக நேரிடும் என்னும் பயத்தினால் ஒருவர் மனவருந்துதல் பயத்தினால் மனம் வருந்துதல் எனப்படும். பயத்தினால் மனம் வருந்துதல் தூய ஆவியின் தூண்டுதலால் கிடைக்கும் இறை கொடையாகும். எனினும், பயத்தினால் மனம் வருந்துவதால் பாவங்களுக்கு மன்னிப்புக் கிடைப்பதில்லை. பயத்தினால் மனம் வருந்தினாலும் ஒப்புரவு அருளடையாளத்தின் மூலம் பாவ மன்னிப்புப் பெறலாம்.

**ஒப்புரவு என்னும் அருளடையாளத்தைப் பெற விரும்பும் ஒருவர் பின்வரும் படிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.**

1. ஆன்ம சோதனையில் ஈடுபடுதல்.

2. செய்த பாவங்களுக்காக மனம் வருந்துதல்.

3. மீண்டும் அப்பாவங்களைச் செய்வதில்லை என உறுதியான தீர்மானம் எடுத்தல்.

4. தனது பாவங்களைக் குருவானவரிடத்தில் வெளிப்படுத்தி ஒப்புரவு என்னும் அருளடையாளத்தைப் பெற்றுக்கொள்ளுதல்.

5. குருவானவர் வழங்கும் பரிகாரத்தை நிறைவேற்றுதல்.

உண்மையாகவே மனம் வருந்தி, மனம் மாறியவாராக ஒப்புரவு அருளடையாளத்தைப் பெறுபவர் செய்ய வேண்டியவை.

உடையை அல்ல உள்ளத்தைக் கிழித்துக்கொள்ளுதல் (யோவே.2:3). என்பது செய்த குற்றத்தைச் சீர்செய்து கொள்வதாகும். உதாரணம்: களவெடுத்த பொருளை மீண்டும் உரியவருக்குத் திருப்பிக் கொடுப்பதாகும். மேலும் ஏழை எளியவர்களுக்கு உதவுவதும் முக்கியமாகும். இதற்காகப் பின்வரும் தவச் செயல்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனம் வருந்துவதற்கான வழிகள் (தவச் செயல்கள்)

1. செபம்
2. நோன்பு
3. தர்மம்
4. துன்ப துயரங்கள், ஏமாற்றங்களைப் பொறுமையோடு சகித்தல்.
5. எவ்வளவு துன்பமாக இருப்பினும், தமக்குத் தரப்படும் பொறுப்புக்களை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுதல்.


### ஒப்புரவு அருளடையாளத்தின் விளைவு

இந்த அருளடையாளத்தின் மூலம், நாம் மீண்டும் இறைவனுடைய அருள் வாழ்வைப் பெறுகிறோம். அவரோடு மிக நெருங்கிய நட்புறவில் இணைகிறோம். இறைவனோடும், அயலாரோடும் ஒப்புரவாகுவதற்கு இறைவனுடைய முழு வல்லமையைப் பெறுகின்றோம்.

பாவங்களுக்காக மனம் வருந்துதலோடும், ஆன்மீக ஆயத்தத்தோடும் இந்த அருளடையாளத்தைப் பெற்றுக்கொள்ளும் போது ஏற்படும் ஒப்புரவானது, மாபெரும் ஆன்மீக ஆசீருடன்கூடிய முழுமையான அமைதியையும் சமாதானத்தையும் உள்ளத்தில் ஏற்படுத்தும்.

### ஒப்புரவு என்னும் அருளடையாளத்தின் மூலம்

- ✦ உண்மையான ஆன்மீக புதுப்பித்தல்.
- ✦ இழந்த மனித மாண்பினை மீண்டும் பெறுதல்.
- ✦ இறைவனின் பிள்ளையாகவும், ஆசீரைப் பெறல் ஆகிய விளைவுகள் ஏற்படுகின்றன.
- ✦ இவை அனைத்திற்கும் இறைவனோடு ஏற்படும் நட்புறவே முக்கியமாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவிவிலியத்திலிருந்து,


அதுபோலவே மனம் மாறத் தேவையில்லாத் தொண்ணூற்றொன்பது நேர்மையாளர்களைக் குறித்து உண்டாகும் மகிழ்ச்சியை விட, மனம் மாறிய ஒரு பாவியைக் குறித்து விண்ணுலகில் மிகுதியான மகிழ்ச்சி உண்டாகும் என நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

(லூக்கா 15:7)

ஆண்டவர் திரும்பி, பேதுருவைக் கூர்ந்து நோக்கினார்; "இன்று சேவல் கூவு முன் நீ என்னை மும்முறை மறுதலிப்பாய்" என்று ஆண்டவர் தமக்குக் கூறியதைப் பேதுரு நினைவு கூர்ந்து, வெளியே சென்று மனம் நொந்து அழுதார்.

(லூக்கா 22:61-62)

## நோயில் பூசுதல் அருளடையாளம்




13:1 பூசுதல் அருளடையாளம்
நோயில் வழங்கப்படல்

இயேசுவின் பணிகளில் நோயாளரைக் குணமாக்குதல் முக்கிய இடம் பெற்றதைக் காண்கிறோம். முடக்குவாதமுற்றவரைக் குணப்படுத்துதல். (மத்தேயு 9:2-7) கை சூம்பியவர் ஓய்வு நாளில் நலமடைதல் (மத்தேயு 12:10-13) ஆகியவை உதாரணங்களாகும். இக்குணப்படுத்தல் சந்தர்ப்பங்களில் நோயாளியின் நம்பிக்கை மிகவும் முக்கியமானதாக விளங்கியது. அதனால் இயேசுவின் மேலுடையைத் தொட்ட பெண்ணுக்கு இயேசு இவ்வாறு கூறினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மகளே, உனது நம்பிக்கை உன்னைக் குணமாக்கிற்று அமைதியுடன் போ. நீ நோய் நீங்கி நலமாயிரு"
(மாற் 5:34)

இயேசு தமது திருத்தூதர்களை மறைத்தூதுரைப் பணிக்காக அனுப்பியபோது அவர்களும் நோயாளரைக் குணமாக்கினர்.

பல பேய்களை ஓட்டினார்கள்; உடல் நலமற்றோர் பலரை எண்ணெய் பூசிக் குணப்படுத்தினார்கள்.
(மாற் 6:13)

அது மட்டுமன்றித் தூய யாக்கோபு இவ்வாறு கற்பிக்கிறார்.

உங்களுள் யாரேனும் நோயுற்றிருந்தால், திருச்சபையின் மூப்பர்களை அழைத்து வாருங்கள். அவர்கள் ஆண்டவரது பெயரால் அவர் மீது எண்ணெய் பூசி இறைவனிடம் வேண்டுவார்கள். நம்பிக்கையோடு இறைவனிடம் வேண்டும்போது நோயுற்றவர் குணமாவார், ஆண்டவர் அவரை எழுப்பி விடுவார். அவர் பாவம் செய்திருந்தால் மன்னிப்புப் பெறுவார்.
(யாக் 5:14-15)

தொடக்கத் திருச்சபையில் நோயில் பூசுதல் அருளடையாளம் இருந்து வந்துள்ளது என்பதை மேற்குறித்த கருத்துக்கள் எடுத்துக்காட்டுகின்றன. கடுமையாக நோய்வாய்ப்பட்டிருக்கும், அல்லது வயோதிப நிலைக்குட்பட்டிருக்கும் போது ஒருவருக்கு ஆன்மீக வல்லமையையும், மன அமைதியையும், உடல் நலனையும் பெற்றுக்கொடுக்கும் அருளடையாளமாக இது விளங்குகிறது.

## அருளடையாளம் தொடர்பான திருச்சபையின் படிப்பினை

ஏழு அருளடையாளங்களிலும் ஒரு அருளடையாளம் விசேட விதமாக நோயாளரைத் திடப்படுத்துவதற்காக வழங்கப்படுகின்றது. ஆரம்பத்திலிருந்தே கிழக்கு, மேற்கு சபைகளின் இறைவழிபாட்டு மரபுகளில் நோயாளரைத் தைலத்தால் பூசும் வழக்கம் இடம் பெற்றதற்கான சான்றுகள் காணப்படுகின்றன. காலப் போக்கில் பூசுதல் அருளடையாளம் மரணப்படுக்கையில் உள்ளவர்களுக்கு மட்டும் வழங்கப்படலாயிற்று. இக்காரணத்தால் இது படிப்படியாக "அவஸ்தைப் பூசுதல்" என்று அறிமுகப்படுத்தப்பட்டது. இப்பெயரால் அழைக்கப்பட்டபோது, அது நோயாளியின் மீட்புக்கு உதவுவதற்காக அவருக்கு மீண்டும் குணமளிக்கும் படி இறைவனிடம் வேண்டப்படுகின்றது. இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் படிப்பினைகளைக் கவனத்திற்கொண்டு திருத்தந்தை தூய 6 ஆம் சின்னப்பர் அவர்களின் "நோயாளரின் தூய பூசுதல்" என்னும் அப்போஸ்தலிக்கப் படிப்பினை இவ்வாறு கற்பிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடுமையாக நோய்வாய்ப்பட்ட ஒருவருக்கு ஒலிவ் அல்லது வேறொரு மூலிகையிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டு முறையாக ஆசீர்வதிக்கப்பட்ட தைலத்தால் அவரது நெற்றியில், கைகளில் பூசி பின்வரும் வார்த்தைகளை ஒருமுறைமட்டும் உச்சரித்து நோயில் பூசுதல் அருளடையாளம் என வழங்கப்படுகிறது;

இத்தூய பூசுதலாலும், தமது இரக்கத்தினாலும், இறைவன் தூய ஆவியின் வரம் தந்து, உமக்கு உதவுவாராக! ஆமென்! உமது பாவங்களிலிருந்து மீட்டு, மீட்பளித்து அவரது இரக்கத்தினால் உம்மைத் தேற்றுவாராக! ஆமென்!

## நோயில் பூசுதல் சடங்கு

- ஆரம்பச் சடங்கு.
- பாவ மன்னிப்புச் சடங்கு.
- இறை வார்த்தைச் சடங்கு.
- நம்பிக்கையாளர் மன்றாட்டு.
- தலை மீது கரங்களை வைத்தல்.
- நோயாளி மீது தைலத்தால் பூசுதல்.
- நற்கருணை வழங்குதல்.
- ஆசீர் வழங்குதல்.

## நோயில் பூசுதல் அருளடையாளத்தின் மூலம் கிடைக்கும் இறையருள்

- தனிப்பட்ட முறையில் தமதும், முழுத்திருச்சபையினதும் நன்மைக்காக நோயாளியைக் கிறிஸ்துவின் பாடுகளுடன் இணைத்தல்.

- நோயினால் அல்லது வயோதிபத்தால் ஏற்படும் வேதனைகளைக் கிறிஸ்தவ பண்புடன் ஏற்றுக்கொள்ளத் தேவையான சக்தி, அமைதி, திடம் கிடைத்தல்.

- நோயாளி தனது பாவங்களுக்கு, ஒப்புரவு அருளடையாளத்தின் மூலம் பாவ மன்னிப்புப் பெறும் சந்தர்ப்பம் இருக்கவில்லையெனில், அப்பாவங்களுக்கான மன்னிப்பை இவ்வருளடையாளத்தின் மூலம் பெறுதல்.

- அவருடைய/ அவளுடைய ஆன்ம ஈடேற்றத்திற்கு நன்மை விளையுமாயின் உடல் நலமடைதல்.

- நித்திய வாழ்வை நோக்கிக் கடந்து செல்ல ஆயத்தம் செய்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✦ நோயாளியின் நம்பிக்கைக்கும் எதிர்நோக்குக்கும் ஊட்டமளித்து வாழ்க்கையில் முன்நோக்கிச் செல்ல உதவுதல்.

**செயற்பாடு**

1. ஒப்புரவு அருளடையாளத்தைப் பெற விரும்புபவர் பின்பற்ற வேண்டிய படிமுறைகள் ஐந்தையும் எழுதுக.

2. உண்மையான மனம் வருந்துதலுக்கும், பயத்தினால் ஏற்படும் மனம் வருந்துதலுக்கும் இடையிலுள்ள வேறுபாடுகளை விளக்குக.

3. நோயில் பூசுதல் வழியாகக் கிடைக்கும் இறையருள் மூன்று எழுதுக.

**வாழ்க்கைக்கு**



✝ இராச் செபத்தின் போது அன்றைய தினத்தில் செய்த தவறுகளை நினைத்து ஆன்ம சோதனை செய்து இறை அன்பை அடிப்படையாக வைத்துப் பாவங்களுக்காக உண்மையாக மனம் வருந்தவும்.

✝ விபூதிப் புதனன்று குருவானவர் நெற்றியில் விபூதி பூசும் போது கூறும் வார்த்தைகளை எப்பொழுதும் நினைவில் கொண்டுவருக. ''நீர் மண்ணாயிருக்கிறீர் மண்ணுக்கே திரும்புவாய்'' '' மனந்திரும்பி நற்செய்தியை நம்புங்கள்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14 குருத்துவம்

சமூகப் பணிக்காக ஏற்படுத்தப்பட்ட அருளடையாளங்கள் 2 ஆகும்.

1. குருத்துவம்
2. திருமணம்

சமூகப் பணிக்காக ஏற்படுத்தப்பட்ட அருளடையாளங்கள் இரண்டும் மற்றைய அருளடையாளங்களிலிருந்து வேறுபட்டுக் காணப்படுகிறது. ஏனெனில் இந்த அருளடையாளங்கள் இரண்டினாலும்,


1. மறைத் தூதுரைப்பணியை ஆற்றுவதற்கும்,
2. இறை மக்கள் சமூகத்தைக் கட்டியெழுப்பவும்,
3. தமதும், பிறரதும் மீட்புக்காகச் செயற்பட அழைப்பும், பொறுப்பும் தரப்படுகிறது.

உதாரணமாக,

குடும்பத்தில் பிறக்கும் குழந்தைகளை இறைநம்பிக்கையில் பயிற்றுவிக்கும் பொறுப்பு திருமணத்தின் மூலம் பெற்றோருக்கு அளிக்கப்படுகிறது. அதன்படி பெற்றோர்கள் பிள்ளைகளைக் குடும்பத்தில் மறை அடிப்படையில் வளர்த்து அருளடையாளங்களைப் பெற்றுக்கொள்ள வழிகாட்டுகின்றனர். இது குருக்களினதும், பெற்றோரதும் கடமையாகும். மேலும், குடும்பத்தில் பிள்ளைகள் பிறப்பினால் உலகம் அணி செய்யப்படுகின்றது. இது பெற்றோரால் நிறைவேற்றப்படுகிறது. திருமுழுக்கினால் திருச்சபையை வளர்ச்சி பெறச் செய்வது குருக்களின் பணியாகும்.

## குருத்துவம்

கிறிஸ்து திருத்தூதர்களுக்குக் கொடுத்த மறைத்தூதுரைப் பணி அவருடைய இரண்டாம் வருகை வரை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும். அச்செயலானது குருத்துவம் என்னும் அருளடையாளத்தின் மூலம் செயற்படுத்தப்படுகிறது. இவ்வருளடையாளத்தின் நிலைகள் மூன்றாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருத்துவத்தின் முழு நிறைவு ஆயர் நிலையாகும். அவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள இறைமக்களின் கண்காணும் தலைவர் அவரே. திருத்தூதர்களின் பிரதி நிதியாகவும், ஆயர்கள் மன்றத்தின் உறுப்பினராகவும், அதிகாரத்துடன் திருச்சபையின் தூதுரைப் பணியில் அவர் பங்கு கொள்ளுகிறார்.

குருக்கள் தமது மேய்ப்புப் பணியை செய்வதற்கு ஆயர்களில் தங்கியிருக்கின்றனர். ஆயர்களிடமிருந்து பெறும் நியமனத்தின் படி, பங்குச் சமூகம் ஒன்றுக்குப் பொறுப்பாக இருந்து பணிபுரிகின்றனர்.

இறைவார்த்தைப் பணி, இறை வழிபாடு, மேய்ப்புப் பணி, இரக்கப் பணி ஆகியவற்றில் ஆயரின் மேய்ப்புக் கண்காணிப்பின் கீழ் திருத்தொண்டர்கள் செயற்படு கின்றனர்.

குருக்கள்

மறைமாவட்ட குருக்கள்

மறைமாவட்டக் குருக்கள் ஆயரின் தலமைத்துவத்தின் கீழ் பொது நிலையினர் மத்தியில் வாழ்ந்து அவர்களுக்குப் பணி புரிந்து, அவர்கள் இறை அரசை நோக்கிப் பயணிக்க வழிகாட்டுபவர்கள்.

துறவறச் சபைக் குருக்கள்

துறவறச் சபையின் தலைவராக விளங்கும் ஒரு குருவானவரின் கீழ் குறிப்பிட்ட சபையின் சட்ட ஒழுங்குகளைப் பின்பற்றி, விண்ணக வாழ்வை இவ்வுலகில் அனுபவித்து, வாழ்வோர்.

**மறைமாவட்டக் குருக்களின் வார்த்தைப்பாடுகள் இரண்டாகும்**

1. கீழ்ப்படிதல் (கீழ்ப்படிதல் வாழ்வுக்கு நுழைதல்)
2. குருத்துவத் தூய்மை (மணத் துறவு வாழ்க்கை முறை)

1. **கீழ்ப்படிதல்** :- மறைமாவட்ட ஆயருக்கும் அவருக்குப் பின் வருபவர்களுக்கும் கீழ்ப்படிதல் ஆகும். இந்த வாக்குறுதியைக் குருக்கள் குருத்துவம் பெறும் நாளில் ஆயர் முன்னிலையில் கொடுப்பர்.

2. **குருத்துவ மணத் துறவு :-** திருமணமாகாது தமது முழு வாழ்க்கையையும் இறை அரசுக்காக அர்ப்பணித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருக்களின் கடமைகள்

1. மறை உரை வழங்குதல்.

2. மக்களுக்கு உண்மையான ஆயன் ஆதல் - மக்களுக்கு செவிமடுத்தல். அவர்களுடைய ஆன்மீகத் தேவைகளைத் தேடிப் பார்த்தல், பொதுநிலையினருக்குத் தேவையான தலைமைத்துவத்தை வழங்குதலும், அவர்களுடைய ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ளுவதும்.

3. இறை வழிபாடுகளை நடாத்துதல்- திருவழிபாடு கிறிஸ்தவ மக்களின் நம்பிக்கை வாழ்விற்குத் துணையாகும். செபத்தின் ஊடாக கிறிஸ்தவ மக்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்துவதன் மூலம், அவர்களிடத்தில் ஆன்மீக மகிழ்ச்சியை உருவாக்குதல்.

4. தமது மறைமாவட்ட ஆயரோடு, இணைந்து பணியாற்றுதல்.

5. இறைமக்களின் ஆன்மீகத் தேவைகளை நிறைவு செய்தல்.

## திருத்தொண்டர்களின் கடமைகள்

1. திருப்பலியிலும், திருவழிபாட்டு நிகழ்வுகளிலும் இறைவார்த்தையைப் போதித்தல்.

2. திருப்பலியிலும் வேறு திருவழிபாட்டு நிகழ்வுகளிலும் ஆயருக்கும், குருக்களுக்கும் உதவுதல்.

3. திருமுழுக்கு வழங்குதல்.

4. மரணச் சடங்குகளை நடாத்துதல்.

5. திவ்விய நற்கருணை ஆசீர் வழங்குதல்.

6. திருமணச் சடங்கை நிறைவேற்ற உதவுதல்.

## திருநிலையினர் மட்டில் பொதுநிலையினரின் கடமைகள்

1. அவர்களுக்காகச் செபித்தலும், அவர்களை மதித்தலும்.
2. பங்குச் சபையின் பணிகளில் உதவுதல்.
3. இறை அரசைப் பரப்பும் பணிகளில் உதவுதல்.
4. மறைக்கல்விப் பணிகளில் ஈடுபட்டு உதவுதல்.
5. திருவழிபாட்டுச் செயல்களில் உதவுதல்.
6. பொதுப் பணிகளில் உதவுதல்.
7. அவர்களைப் பராமரித்தலும், பாதுகாத்தலும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருத்துவத்தை வழங்குதல்

குருவாக ஒருவரைத் திருநிலைப்படுத்த ஆயர்களுக்கு மட்டுமே அதிகாரம் உண்டு. ஆயர் திருநிலைப்படுத்தப்படுபவரின் தலைமீது கைகளை வைத்துச் செபிப்பதன் மூலமும், அருள் பொழிவு வார்த்தைகளை உச்சரிப்பதன் மூலமும் இந்த அருளடையாளத்தை வழங்குவார்.

## குருத்துவத்தைப் பெறத் தகுதி வாய்ந்தவர்கள்

- ✦ திருமுழுக்கும், உறுதிப்பூசுதலும் பெற்றிருத்தல்.
- ✦ திருமணமாகாது, வாழ்நாள் முழுவதும் அவ்வாறு வாழத் தீர்மானம் எடுத்த ஆண்கள் (இறையரசுக்காகப் பிரமச்சாரியாக வாழ்வது)
- ✦ இறை அழைப்பைப் பெற்றிருத்தல்.
- ✦ பெற்றோர் திருமண அருளடையாளத்தைப் பெற்றிருத்தல்.
- ✦ அவர் நல்ல பண்புகளை உடையவராயிருத்தல்.
- ✦ நலமான உடல் நிலையை உடையவராயிருத்தல்.
- ✦ தேவையான பயிற்சிக்காலத்தை நிறைவு செய்தவராயிருத்தல்.
- ✦ சுயமாக விரும்பிச் செல்லல்.

குருத்துவத்தின் நிறைவு ஆயத்துவம். திருத்தூதர்களின் நிலைக்குத் தேர்ந்தெடுக்கப்படும் அவர்கள் குருத்துவதற்குரிய அனைத்து அதிகாரங்களையும் பெற்றவர்களாவர். ஆயர்களை நியமிப்பது திருத்தந்தை ஆவார். அவருடன் குழுவாக அவர்கள் மறையையும், விழுமியங்களையும் பற்றிப் போதிக்கும்போது வழுவா வரம் உடையோராகின்றனர்.

**செயற்பாடு**

1. பங்குத் தந்தையின் மூலம் நிறைவேற்றப்படும் பணிகள் ஐந்து எழுதுக.
2. பணிக் குருத்துவத்தின் நிலைகள் மூன்றையும் எழுதுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கைக்கு



✝ செபத்திலும், பரிகாரம் செலுத்துதலிலும், துறவறத்தார் தமது சொந்த வாழ்வில் நோயாளர்களுக்காகவும், மறைத்தூதுப் பணிக்காகவும் எத்துணை மாபெரும் பரித்தியாகங்களைச் செய்கிறார்கள். நீங்கள் அதனைப் பாராட்டுங்கள், நீங்கள் அவர்களின் பணிகளுக்கு உதவுங்கள்.

✝ உங்களுக்கும் அவ்வித தேவ அழைத்தல் உண்டா எனச் சிந்தித்துப் பார்த்ததுண்டா?

✝ தேவ அழைத்தல் அதிகரிக்க வேண்டும் என இறைவனிடம் மன்றாடுங்கள், தேவ அழைத்தலைப் பெற்றிருப்போரின் வாழ்க்கையில் வரும் சோதனைகளை வெற்றிகொள் சக்தியையும், அவர்களுடைய பணி வெற்றி பெற இறை அருளையும் பொழியும்படி செபியுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15 திருமணம்



15.1 மெய்விவாகச் சடங்கு

> கடவுள் இணைத்ததை மனிதர் பிரிக்காதிருக்கட்டும்.
>
> மாற்கு 10:9

திருமணம் என்பது கணவனும், மனைவியும் மனம் ஒருமித்து ஒருவருக்கு ஒருவர் தம்மை அர்ப்பணிக்கும் முறிவுபடாத பிரிக்க முடியாத உடன்படிக்கையாகும். (மத்19:6) ஒரு பெண்ணும், ஒரு ஆணும் சுதந்திரமாகச் சுயவிருப்பத்துடன் மேற்கொள்ளும் இவ்வுடன்படிக்கை வாழ்நாள் முழுவதற்குமான ஓர் உடன்படிக்கையாகும். அதனால் ஒரு சாரார் அல்லது இருவருமே ஒரு சந்தர்ப்பத்தில் அவ்விருப்பத்தை கைவிட்டாலும் திருமண உடன்படிக்கை நிலைத்திருக்கும்.

## கத்தோலிக்க திருமணத்தின் பண்புகள்

**ஒருமை**

ஒரு ஆண், ஒரு பெண்ணை ஒரு பெண் ஒரு ஆணை மட்டுமே திருமணம் செய்து கொள்ளலாம் என்பதாகும்.

**கட்டவிழாமை**

கட்டவிழாமை என்றால் விவாகரத்துச் செய்ய முடியாது என்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கத்தோலிக்க திருமணத்தின் நோக்கம்

**அன்னியோன்னிய அன்பால் முழுமையடைதல்**

வாழ்நாள் முழுவதும் நடாத்திச் செல்லும் தொடர்பைக், கிறிஸ்து தமது திருச்சபையோடு கொண்டுள்ள தொடர்புக்கு ஒப்பிடலாம். அத்தொடர்பைக் கட்டியெழுப்புவது, இருவரும் ஒருவர் ஒருவர்மீது காட்டும் அன்பினாலாகும். அவ்வன்பை நாளுக்கு நாள் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

**குழந்தைப்பேறும் அவர்களை வளர்த்தலும்**

தமக்குப் பிறக்கும் பிள்ளைகளை மகிழ்வுடன் ஏற்று, அவர்களுக்கு அன்பு, பாதுகாப்பு, ஊட்டம், கிறிஸ்தவ நடத்தை, கல்வி என்பனவற்றைப் பெற்றுக்கொடுத்தல் ஆகும்.

> பிள்ளைகள், ஆண்டவர் அருளும் செல்வம்; மக்கட்பேறு, அவர் அளிக்கும் பரிசில்.
>
> திருப்பாடல் 127:3

## கத்தோலிக்க திருமணத்திற்குள்ள சட்டரீதியான தடைகள்

✦ **வயது** : 18 வயதிற்குக் குறையாதிருத்தல்
23-29க்கும் இடைப்பட்டவயதில் திருமணம் செய்வது சுகதேகியான குழந்தைகளைப் பெற்றெடுக்க உதவும்.

✦ **சுதந்திர விருப்பம்:** தான் விரும்பாத ஒருவரைத் திருமணம் செய்யும்படி எவராலும் கட்டாயப்படுத்த முடியாது.

✦ **குற்றம்** : ஒருவர் பிறர் தாரத்தை தனதாக்கிக்கொள்ள விரும்பி, தாம் விரும்புபவரின் துணையைக் கொலை செய்வதும், பிறர் தாரத்தைவிரும்பித் தனது தாரத்தை கொலை செய்வதும் குற்றமாகும். இவ்வாறு குற்றம் புரிந்தவருடன் சட்ட ரீதியாகத் திருமண உறவை மேற்கொள்ள முடியாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✦ இரத்த உறவு

✦ கலப்புத் திருமணம்

## திருமண ஒப்பந்தம்

திருமணத்தின் வெளி அடையாளமாக விளங்குவது திருமண ஒப்பந்தமாகும்.




திருமணம் என்னும் அருளடையாளத்தை நிறைவேற்றுவோர் திருமணம் செய்துகொள்ளப் போகும் இருவருமாவர். குருவானவர் திருச்சபையின் சட்ட பூர்வமான சாட்சியாவார். அவர் கிறிஸ்துவின் கண்காணும் பிரதிநிதியாக இறைவனின் ஆசீரை அளிக்கிறார். ஆகையால் திருமணம் இறைவன் முன்னிலையில் உயர்ந்த ஓர் இணைப்பாகும். (1 கொரி 7:10)

திருமுழுக்குப் பெற்ற இருவர் மத்தியில் இடம் பெறும் திருமண ஒப்பந்தம் ஓர் அருளடையாளமாகும். அத்தகைய ஒப்பந்தத்தை முறிவு செய்யமுடியாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இதனால் கணவர் தம்தாய் தந்தையை விட்டு விட்டுத் தம் மனைவியுடன் ஒன்றித்திருப்பார். இருவரும் ஒரே உடலாயிருப்பர்'' என மறைநூல் கூறுகிறது. இதில் அடங்கியுள்ள மறைபொருள் பெரிது. இது திருச்சபைக்கும், கிறிஸ்த்துவுக்கும் பொருந்துவதாகக் கொள்கிறேன். எப்படியும், உங்களுள் ஒவ்வொருவரும் தம்மீது அன்புகொள்வதுபோல தம் மனைவியின் மீதும் அன்பு செலுத்த வேண்டும். மனைவியும் தன் கணவருக்கு அஞ்சி வாழ வேண்டும்.

(எபேசி 5:31-33)

## திருமணமும் சிவில் சட்டமும்

இலங்கை ஜனநாயக அரசின் சட்ட ஒழுங்குகளின்படி எல்லாத் திருமணங்களும் அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட வேண்டும். இதன்படி ஆலயங்களில் நடைபெறும் கத்தோலிக்க திருமணங்களும் அரச பதிவேடுகளில் பதிவு செய்யப்படுகிறன. அதைச் செய்பவர் பங்குக் குருவானவராவார். அவர் பதிவாளராகச் செயற்பட அவருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு பதிவு செய்வது அருளடையாளத்துடன் தொடர்புடையதல்ல. அது முக்கியத்துவம் பெறுவது சிவில் உரிமைகளுக்காக மட்டுமே. அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்டிருப்பினும், இல்லையெனினும், ஆலயத்தில் நடைபெறும் திருமண அருளடையாளம் என்ற வகையில் வாழ்நாள் முழுவதற்கும் செல்லுபடியானதாகும். ஆயினும், அரசாங்கத்தின் சட்ட ஒழுங்குகளுக்கு மாறாக அமையாது, தமது நில, புலன் உரிமைகள் பாதுகாக்கப்படவும் அரசாங்கத்தில் திருமணம் பதிவு செய்யப்பட வேண்டும். கத்தோலிக்கர் அல்லாத ஒரு குரு முன்னிலையில் அல்லது பதிவாளர் முன்னிலையில் திருமணம் செய்யக் கத்தோலிக்கருக்கு அனுமதியில்லை அத்தகைய திருமணங்கள் அருளடையாளமாக முடியாது.

## விவாகரத்தும் செல்லுபடியாகா திருமணமும்

கத்தோலிக்க திருச்சபை விவாகரத்தை ஒருபோதும் அனுமதிப்பதில்லை. ஏனெனில் திருமணத்தைச் செல்லுபடியற்றதாக்க திருச்சபையாலும் முடியாது. அது இறைவன் முன்னிலையில் செய்த ஓர் உடன்படிக்கையாகும். ஆயினும் சில சந்தர்ப்பங்களில் திருச்சபை நீதிமன்றம் ஒன்றில் செய்யப்படும் பரிசீலனையின் முடிவில் குறிப்பிட்ட சில திருமணங்கள் செல்லுபடியாகத் திருமணங்கள் என வெளிப்படுத்த முடியும். அவ்வாறு வெளிப்படுத்துவது சுய விருப்பமின்றி நிறைவேற்றப்பட்ட திருமணங்கள் தொடர்பாகவும், திருமணத்திற்குச் சட்டபூர்வமான தடை இருந்தும் அதைப்பற்றி முறையான அனுமதியின்றி நிறைவேற்றப்பட்ட திருமணங்கள் தொடர்பாகவும் ஆகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கத்தோலிக்க திருமணத்தை வெற்றிகரமானதாக்கிக்கொள்ள

- இருவரும் கத்தோலிக்கராயிருத்தல்.
- மனம் ஒருமித்த அன்பும், பிரமாணிக்கமும்.
- தூய்மையான வாழ்க்கை.
- புரிந்துணரும் தன்மை.
- தியாகம்.
- குடும்பத்தின் ஒற்றுமைக்காகச் செயற்படுதல்.
- திருமணத் தம்பதிகள் ஆன்மீக வாஞ்சையோடு திருமணக் கடமைகளை நிறைவேற்றுதல்.

"இனி அவர்கள் இருவர் அல்ல; ஒரே உடல். எனவே கடவுள் இணைத்ததை மனிதர் பிரிக்காதிருக்கட்டும்"

மத்தேயு (19:6)

**செயற்பாடு**

1. அரச திருமணப் பதிவாளர் ஒருவர் முன்னிலையில் திருமணமாகப்போகும் கத்தோலிக்கர் ஒருவருக்கு நீர் என்ன கூறுவீர் என விளக்குக.
2. கத்தோலிக்க திருமண வாழ்வை வெற்றிகரமுள்ளதாக்கிக்கொள்ள தேவையானவை பற்றி ஓர் பட்டியல் தயாரிக்குக.

**வாழ்க்கைக்கு**



பாடசாலைக்குச் செல்லும் பருவத்தில் காதல் செய்வதைக் தவிர்க்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16 துறவற வாழ்வு

ஆரம்பகாலத்தில் அநேக கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவை நெருக்கமாகப் பின்பற்றிப் பரிசுத்த தனத்துடன் வாழ்வதற்காகத் தத்தம் வீடுகளிலே மணத்துறவைப் பின்பற்றி ஒறுத்தல் முயற்சிகளில் ஈடுபட்டனர். இவர்கள் தபோதனர் எனப்பட்டனர். மூன்றாம் நூற்றாண்டளவில் அவர்கள் குழுக்களாக வாழ்ந்ததற்கான சான்றுகள் உள்ளன. ஏகாந்திகள் அல்லது வனத்துப் பிதாக்கள் என்று அழைக்கப்பட்டவர்களில் முதன்மையானவர் தேப்ஸ் சின்னப்பராவார் (கி.பி 227-342). அவருடைய சீடரான எகிப்து அந்தோனியாரின் காலத்தில் வனாந்தரங்களை அணுகி ஐயாயிரக் கணக்கான துறவிகள் வாழ்ந்தார்கள் என ஆதாரங்கள் கூறுகின்றன. தங்களுடைய ஆன்மீக வாழ்வை வளமாக்கத் துறவிகள் துன்பங்களை அனுபவித்துக் குழும வாழ்வில் பங்கேற்றனர்.

துறவற வாழ்வை முறைப்படுத்த உழைத்தவர்களாகத் தூய பசில், தூயஜெறோம், தூய அகுஸ்தினார், தூய அம்புறோஸ் ஆகியவர்களைக் குறிப்பிடலாம். துறவற குழுமவாழ்வின் ஆரம்பக் கர்த்தாக்களாகத் தூய பக்கோமியோ, தூய ஆசீர்வாதப்பர் என்பவர்களைக் குறிப்பிடலாம். விசேடமாகத் துறவற வாழ்வுக்கான ஒழுங்கு விதிமுறைகளை எழுதியவர்கள் இவர்களாவர்.

> மலை மீது தியானம் செய்துகொண்டிருந்தவரும், மக்களுக்கு இறை அரசைப் போதித்தவரும், நோயாளிகள், அங்கவீனர்களைக் குணமாக்கியவரும், பாவிகளை நீதிமான்களாக மாற்றியவரும் சிறுவர்களை ஆசீர்வதித்தவரும், அனைவருக்கும் நன்மை செய்தவரும், தன்மை அனுப்பிய தந்தைக்கு எப்போதும் கீழ்ப்படிந்திருந்தவருமான கிறிஸ்து துறவிகள் மூலம் வெளிப்படுத்தப் படவேண்டும்.
>
> திருச்சபை இல.46

துறவற வாழ்வில் ஒரு கிறிஸ்தவன் தனது திருமுழுக்கு வாக்குறுதியை அதிக பொறுப்புடன் ஆழமான முறையில் நிறைவேற்றுகிறார். துறவற வாழ்வு என்பது ஓர் இறை அழைத்தலும், விசேட கொடையுமாகும். ஒரு துறவி வார்த்தையால் மட்டுமன்றி செயலாலும் நற்செய்தியை வெளிப்படுத்தும் ஒருவராக வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**துறவற வார்த்தைப்பாடுகள் 3 ஆகும்**

- **கற்பு** : மணத்துறவு நிலையில் இறையரசுக்காகத் தமது முழு வாழ்வையும் அர்ப்பணித்தல்.
- **ஏழ்மை** : இவ்வுலகப் பொருட் செல்வங்கள் மட்டில் பற்றற்று உரிமை கோராது இருத்தல்.
- **கீழ்ப்படிதல்** : இறை சித்தத்தை ஏற்று தமது சபைத் தலைவர்களுக்குப் பணிந்து வாழ்தல்.

**துறவற சபைகள்**

- குருத்துவம் சார்ந்த துறவிகள்
- குருத்துவம் சாராத துறவிகள்
  - அருட் சகோதரர்கள்
  - அருட் சகோதரிகள்

**துறவற வாழ்வின் பண்புகள்**

- **குழும வாழ்வு**: துறவிகள் குழுமமாக வாழ்வர். உதாரணம்: ஒன்றாகச் செபித்தல் ஒன்றாக உண்ணுதல்.
- **செபவாழ்வு**: துறவற வாழ்வின் இன்றியமையாத ஒரு பண்பாகும்.
- **பணிவாழ்வு**: இறைஆட்சி தூதுரைப் பணிக்காகத் தம்மை அர்ப்பணிப்பர். உதாரணம்: ஆசிரியபணி, சமூக சேவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருத்துவம் சார்ந்த துறவிகள்

- **அமல மரித்தியாகிகள் சபை**
    - ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவித்தல்.
    - கல்விப் பணி.
    - மறைக் கல்விப் பணி.
    - மறையுரை ஆற்றுதல்.

- **சில்வெஸ்ரர் பெனடிக் சபை**
    - செப வாழ்வு.
    - கல்விப் பணி.
    - பங்குப் பணி.
    - இறை மகிமைக்காகக் குழுமமாக வாழுதல்.

## குருத்துவம் சாராத துறவிகள்

- **மாறிஸ் சகோதரர்கள் சபை**
    - கல்விப் பணி.
    - இளைஞர்களுக்கான சுய தொழிற்பயிற்சி.

- **அன்புச் சகோதரர் சபை**
    - கல்விப் பணி.
    - சமூகப் பணி.

- **தூய ஜோண் பப்ரிஸ் டி லாசால் சகோதரர் சபை**
    - கல்விப் பணி.
    - இளைஞர் உருவாக்கப் பணி.

- **பிரான்சிஸ்கன் மறைத்தூதுச் சகோதரர் சபை**
    - மறையை அறிவித்தல்.
    - சிறுவர் இல்லங்களை நடாத்துதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருட்சகோதரிகள் சபை

**1. திருக்குடும்பக் கன்னியர் சபை**

- ★ கல்விப் பணி.
- ★ சமூகப் பணி.
- ★ சிறுவர்.
- ★ இளையோர்.
- ★ குடும்பப் பணி.
- ★ மறைத்தூதுரைப் பணி.
- ★ பங்குப் பணி.

**2. நல்லான் கன்னியர் சபை**

- ★ கல்விப்பணி.
- ★ இளம் பெண்கள் வளர்ச்சியும், பராமரிப்பும்.
- ★ அனாதைகள் முதியோர் இல்லங்கள் நடாத்துதல்.

**3. தூய தூதர்கள் கன்னியர் சபை**

- ★ கல்விப் பணி.
- ★ சிறுவர் பராமரிப்பு.
- ★ இளைஞர், யுவதிகள் பணி.

**4. அன்புச் சகோதரிகள் சபை**

- ★ கல்விப் பணி.
- ★ வயோதிபர் இல்லம் நடாத்துதல்.
- ★ மறைக்கல்விப் பணி.
- ★ பங்குப் பணி.

**5. திருச்சிலுவை கன்னியர் சபை**

- ★ மருத்துவப் பணி.
- ★ கல்விப் பணி.
- ★ சமூகப் பணி.
- ★ பங்குப் பணி.
- ★ மறைக்கல்விப் பணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**6. ஏழைகளின் சிறிய சகோதரிகள் சபை**

- ★ முதியோர் ஏழைகள் பராமரிப்பு.

**செயற்பாடு**

1. துறவற வாழ்க்கை தொடர்பாகக் கத்தோலிக்க சஞ்சிகைக்குக் கட்டுரை ஒன்று வரைக.
2. துறவற வாழ்வின் மூலம் உமது வாழ்க்கைக்குப் பெற்றுக்கொள்ளக் கூடிய முன்மாதிரிகைகள் ஐந்து எழுதுக.
3. துறவற வாழ்க்கைக்கு வரும் சோதனைகளை மேற்கொள்ள அவர்களுக்குத் தேவையான சக்தியையும் தைரியத்தையும், கேட்டு எமது மீட்பராம் இயேசுவுக்கு ஒரு செபம் எழுதுக.


**வாழ்க்கைக்கு**



துறவிகளின் சேவையைப் பாராட்டுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17 பொதுநிலையினர் மறைத்தூதுப் பணி




மேலேயுள்ள படத்தை அவதானியுங்கள். அங்கு ஓர் தேவாலயம் காணப்படுகின்றது. தேவாலயம் கிறிஸ்தவ வாழ்வின் மையமாகும். மைய இடமாகிய தேவாலயத்துடன் எமக்கு நெருங்கிய உறவு ஏற்பட்டது, நாம் திருமுழுக்குப் பெற்ற தினத்திலாகும். திருமுழுக்குப் பெற்றோர் கிறிஸ்துவின் மறையுடலாகிய திருச்சபையில் அங்கத்துவம் பெற்று இறைமக்களாகின்றனர். கிறிஸ்துவின் பொதுக்குருத்துவத்தில் பங்காளராகின்றனர். இப்பொதுக்குருத்துவம் பணிக்குருத்துவத்திலிருந்து வேறுபடுகின்றது.

பொதுக்குருத்துவம் ⟶ திருமுழுக்கின் ஊடாக அனைத்துக் கிறிஸ்தவர்களுக்கும் கிடைக்கின்றது.

பணிக்குருத்துவம் ⟶ குருத்துவத்தின் வழியாக மறைபணியை ஏற்றுக்கொண்ட கிறிஸ்தவர்களுக்குக் கிடைக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுக்குருத்துவத்தைப் பெற்ற அனைத்து கிறிஸ்தவர்களுக்கும் மூவிதமான பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அவையாவன.

1. மேய்ப்புப்பணி
2. குருத்துவப்பணி
3. இறைவாக்குப்பணி

பொதுநிலையினர், இறைதிட்டத்திற்கு ஏற்ப உலகியல் சார்ந்த காரியங்களை ஒளிர்வித்து, ஒழுங்குபடுத்துவதன் வழியாக இறை ஆட்சியைத் தேடுவதைத் தமக்கே உரிய அழைப்பாகக் கொண்டுள்ளனர் (க.தி.ம 897).

தூதுப்பணியை வெற்றிகரமாக நிறைவேற்ற நாம் அனைவரும் இல்லற அப்போஸ்தலிக்கப் பணிகளில் இணைந்து சேவை செய்யவேண்டும். அது தொடர்பாக இரண்டாம் வத்திக்கான சங்கம் பின்வருமாறு கற்பிக்கின்றது.

"தம் அறிவு, தகுதி, மேன்மைக்கேற்பத் திருச்சபையின் நலனைச் சார்ந்தவற்றில் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்க அவர்களுக்கு உரிமை உண்டு; சில வேளைகளில் அது அவர்களது கடமையும் ஆகின்றது. இந்த அலுவல் இதற்கென்றே திருச்சபையால் அமைக்கப் பெற்ற அமைப்புக்களின் மூலம் தேவைகளுக்கேற்ப நிறைவேற்றப்படலாம்". (திருச்சபை இல 37)

## கத்தோலிக்க மறைப் பாடசாலை

இறைவாக்குப் பணியின் பிரதான பணியாக விளங்குவது மறையை அறிவித்தலாகும். (க.தி.ம 905). மறையை அறிவித்தல் என்பது குருக்கள், துறவிகளின் பணிமட்டும் அல்ல. பொதுநிலையினரினதும் இறைவாக்குப் பணியாகும் (க.தி.ம 904). பொதுநிலையினர் கிறிஸ்துவின் வார்த்தையை நம்பிக்கையோடு ஏற்றுத் தங்கள் சாட்சிய வாழ்வினால், அதாவது தங்கள் சொல், நற்செய்திப்பணி, மறைக்கல்வி கற்பித்தல் ஆகியவற்றால் இறைவார்த்தைப் பணியில் பங்கேற்கிறார்கள். இப்பணி உலகின் அன்றாடச் சூழ்நிலைகளில் நிறைவேறப்படுவதால் சிறப்புப் பயனை விளைவிக்கின்றது (க.தி.ம 906). அதன்படி மறைப்பாடசாலை கிறிஸ்தவனுக்கு பொதுக்குருத்துவத்தின் மூலம் இறைவாக்குப் பணியில் ஈடுபட உதவியாகின்றது.

## குறிக்கோள்

* இயேசுக் கிறிஸ்துவினால் இவ்வுலகில் ஆரம்பிக்கப்பட்ட பணியைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதன் மூலம் இவ்வுலகில் இறையரசைப் பரப்புதல்.

* கிறிஸ்து இயேசுவோடு ஓர் ஆழ்ந்த உறவை ஏற்படுத்திக் கொள்வது.

* அதன் மூலம் விழுமியங்கள் நிறைந்த கத்தோலிக்கச் சிறார்களைப் பயிற்றுவித்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணி

- வாரம் தோறும் மறைப் பாடசாலைகளை நடாத்தி மாணவர்களைக் கிறிஸ்துவைப் பின்பற்றச் செய்தல்.
- தினம் ஒன்றை நடாத்தல்.
- திருவிவிலிய அறிவுப் போட்டியை நடாத்தல்.
- ஒவ்வொரு வருட இறுதியிலும் மறைப் பாடசாலைப் பரீட்சையை நடாத்தல்.
- சுய விருப்புடன் முன்வந்து சிறார்களுக்கு மறைக் கல்வி வழங்குதல்.
- மறையாசிரியர்களின் அறிவைக் காலத்திற்கு ஏற்றவாறு வளர்த்தல்.
- தேசிய மறையாசிரியர் பரீட்சைக்காக மறையாசிரியர்களை ஆயத்தம் செய்தல்.

## மரியாவின் சேனை

இச்சபை திரு பிராங்டப் என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது. பொதுநிலையினரால் பொதுநிலையினருக்காக மரியா அன்னையின் பரிந்துரையோடு திருச்சபைத் தலைவர்களின் வழிக்காட்டுதலின் கீழ் செயற்படும் புனிதத்தன்மை வாய்ந்த ஓர் திருத்தூதுப் பணியாகும். இது இன்றைய கிறிஸ்தவ உலகில் பரந்ததும், நன்கு திட்டமிடப்பட்டதுமான ஓர் பொதுநிலையினரின் மறைத்தூது இயக்கமாகும்.

## குறிக்கோள்

- கிறிஸ்துநாதரை சந்தித்து அவரை அறிந்துகொண்டு தூய வாழ்க்கை வாழுதல்.
- மரியன்னையை முழுமனதுடன் அன்புசெய்து அவரை உலகிற்கு அறிமுகம் செய்து, அர்ப்பணிப்புடனும் தெளிவான குறிக்கோளுடனும் வாழுதுல்.
- செபத்தினாலும், செயலினாலும், தனது ஆன்மீக வாழ்வை உறுதி உள்ளதாக்கிக் கொள்வதுடன், அதன் வழியாகச் சமுதாயத்தைப் புனிதப்படுத்தல்.
- மரியாவின் சேனையின் உயர்ந்த குறிக்கோளாகிய மறைத்தூதுப்பணிக்காகவும், அதன் பிரதான நோக்கமாகிய ஆன்மீக ஈடேற்றத்திற்காகவும் செயற்படுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பணிகள்

- சிறார்களுக்கு கற்றுக் கொடுத்தல்.
- நற்செய்தியை எடுத்துச்செல்லும் தூதுப்பணியில் ஈடுபடல்.
- செபமாலையின் ஊடாக மரியன்னை பக்தியை வளர்த்தலும், பரப்புதலும்.
- வீடு சந்திப்பும், தேவைகளை ஆராய்ந்து பார்த்தலும்.
- வைத்தியசாலைகளை தரிசித்தலும், நோயாளரைச் சந்தித்தல்.

## இயேசுவின் திரு இருதய சபை

இயேசுக் கிறிஸ்து நமக்குக்காட்டும் அன்புக்குப் பிரதியன்பு காட்ட அவரால் நிறுவப்பட்டு, தூய ஆவியின் பிரசன்னத்தில் தொடர்ந்து நிலவும் மாபெரும் அப்போஸ்தலிக்க சபை

### குறிக்கோள்

- திரு இதயப் பக்தியை மக்கள் மத்தியில் பரப்புவதற்காக அர்ப்பணத்துடன் செயற்படல்
- பங்குப் பணிகளில் தம்மை அர்ப்பணித்தல், உதவுதல்
- சமுதாயத்தில் முன் மாதிரிகையான, தூய்மையான வாழ்வு வாழுதல்
- இறைவார்த்தையைப் பகிர்ந்துகொள்ளுதல்

### பணிகள்

- மாதத்திற்கு ஒருமுறையேனும் திருமணித்தியாலம் நடாத்தல்
- முதல்வெள்ளிக்கிழமைகளில் திருப்பலியில் பங்குபற்றித் திவ்விய நற்கருணை உட் கொள்ளல்
- நற்கருணைத் திருவிழா, திரு இருதயத்தின் பெருவிழா, கிறிஸ்து அரசர் பெருவிழா என்பனவற்றை நடாத்தல்
- மாதத்தில் ஒருமுறையேனும் ஒப்பரவு அருளடையாளத்தைப் பெறல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ மாதத்தின் முதல் வியாழக்கிழமைகளில் குடும்பமாகவோ அல்லது தனித்தோ வீடுகளில் திருமணித்தியாலம் செய்தல்

## இளம் கத்தோலிக்க மாணவர் இயக்கம்

13 இற்கும் 19 இற்கும் இடைப்பட்ட வயதையுடைய கத்தோலிக்க மாணவ, மாணவியர் இதன் உறுப்பினர்களாக இருக்கலாம். இது மாணவர்களால் மாணவர்களுக்காக நடாத்தப்படும் ஓர் அமைப்பாகும். மாணவர்களுக்கான பிரச்சி னைகள், எதிர்பார்ப்புகள் பற்றிக் கலந்துரையாடி நேரில் வழிகாட்டி, மனிதத்துவத்தை வளர்க்கக்கூடிய வகையில் அவர்களின் நம்பிக்கைக்கு ஏற்ப செயற்பட இவ் வமைப்பு உறுதுணையாக இருக்கும்.

அதிமேன்மை தங்கிய லியோ ஜோசப் கருத்தினால் காடயின் ஆண்டகையால் ஆரம்பிக்கப்பட்ட இவ்வமைப்பு (YCS) இன்று உலகம் முழுவதும் பரவி வளர்ந்துள்ளது. தற்போது 110 நாடுகளில் இவ் அமைப்பு செயற்படுகின்றது. இதன் சர்வதேசத் தலை மைப்பீடம் பிரான்சிலும், ஆசியாவுக்கான தலைமைப்பீடம் பிலிப்பைனிலும் உள்ளது. உள்ளார்ந்த மாற்றத்திற்காக மாணவர்களை அழைக்கும் இளம் கத்தோலிக்க மாணவர் இயக்கத்தின் விருது வாக்கு "நாம் புரட்சிசெய்ய மாட்டோம், புரட்சி நாம் ஆவோம்" என்பதாகும்.

## குறிக்கோள்

★ கிறிஸ்துவின் வாழ்வில் மிளிர்ந்த மதிப்பீடுகளையும், மன நிலையையும் தமக்குள் வளர்த்துக் கொள்ளுதல்.

★ மாணவர்களின் பிரச்சினைகள், கல்வியினால் கிடைக்கும் சாதகமான விளைவுகள் பற்றி உண்மை நிலையை ஆராய்ந்து அவர்களை நிறைவான வளர்ச்சிக்கு இட்டுச் செல்லுதல்.

★ பணிவு, நல்லுறவு, உண்மை, சமாதனம், சகோதரத்துவம், சமத்துவம், நீதி என்பனவற்றினூடாக இறையாட்சிக்காக செயற்படல்.

## YCS அமைப்பின் துணைக் குறிக்கோள்கள்

★ உண்மையான தலைமைத்துவத்தை ஏற்படுத்துதல்.

★ சாதுரியத்தையும், ஆற்றல்களையும் வளர்த்தல்.

★ மனிதாபிமானத்தைக் கட்டியெழுப்புதல்.

★ மனப்பாங்கு, கொள்கை மாற்றத்தை உருவாக்குதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ தன் குடும்பம் மற்றும் சமூகம் பற்றிய அறிவை வளர்த்தல்.

★ ஆன்மீகப்பண்புகளைக் கொண்ட நிறைவான ஒரு மனிதனை உருவாக்குதல்.

★ மூவொரு கடவுள், திருவிவிலியம், திருச்சபை பற்றிய அறிவை வளர்த்தல்.

★ இறையரசின் மதிப்பீடுகளால் நிறைந்த ஓர் கிறிஸ்தவனை உருவாக்கல்.

## கத்தோலிக்க மாணவர் இயக்கத்தின் செயற் படிமுறைகள்

கத்தோலிக்க மாணவ இயக்கத்தின் செயல்முறை அதன் ஆன்மீகமாகக் கருதப்படுகின்றது. அதன் படிமுறைகள் மூன்றாகும்.

1. பார்த்தல் - See(Awareness) கிறிஸ்துவின் கண்களால் உலகைப் பார்த்தல்.
2. தீர்மானித்தல் - Judge (Reflection) கிறிஸ்துவின் மனநிலையில் உலகை விபரித்தல்.
3. செயல் - Act (Action) கிறிஸ்து செயற்பட்டவாறு செயற்படல்.

கட்டிளமைப் பருவத்தில் இருப்போரின் வாழ்வைக் கட்டியெழுப்பி உறுதிபெறச் செய்வதற்கு 3 H அவசியம்.

1. **(Holy Eucharist) -** திருப்பலி
2. **(Holy Bible) -** திருவிவிலியம்
3. **(Holy Rosary) -** திருச் செபமாலை


17.1 திருப்பலி


17.2 திருவிவிலியம்


17.3 திருச்செபமாலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூய வின்சன் டி போல் சபை

மிகவும் வறுமைப்பட்ட, ஏழை எளியவர்கள், அனாதைகள், அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டோர், நோயாளிகள், மாற்றுத் திறனாளிகள், வயோதிபர், கைவிடப்பட்டோர் போன்றவர்களுக்கு உதவும், அன்புகாட்டும் சர்வதேச தொடர்புடைய ஓர் திட்டமிடப்பட்ட பொதுநிலையினரின் அப்போஸ்தலிக்க பக்திச்சபையாகும். அருளாளர் பிறடிக் ஓசானம் அவர்களால் கி.பி. 1833 இல் இச் சபை ஆரம்பிக்கப்பட்டது.

## குறிக்கோள்

- இனம், மதம், சாதி, நிறம் ஆகிய பேதங்களைத் தவிர்த்து, அயலானுக்கு உதவும் இரக்கப்பணி மூலம் தனது கிறிஸ்தவ வாழ்வை வெளிப்படுத்துவதற்கு வழி வகுத்தல்.
- இதனைச் சமூக சேவையாக மட்டும் கருதாது இரக்கத்தின் செயலாக நினைத்துச் செயற்படல்.

## பணிகள்

துன்பப்படும் அல்லற்படும் மக்களுடைய வேதனைகளைக் கண்டு அதனை தமதாக்கிக்கொண்டு அவர்கள் மத்தியில் மேற்கொள்ளும் பணிகளாவன:

- அடுத்தவருக்கு உதவுதல், தனது கரிசனையையும், நட்பையும் வெளிப்படுத்தல்.
- தனது ஆற்றல்களையும், திறமைகளையும் மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளல்.
- வயோதிப இல்லங்களை நடாத்தல்.
- பாலர் பாடசாலைகளை நடாத்தல்.
- சிகிச்சை முகாம்களை நடாத்தல்.

**கட்டிளமைப் பருவத்தில் அங்கத்துவம் பெற்றுக் கொள்ளக்கூடிய சபைகளும் இயக்கங்களும்:**

- ஆலய பாடகர் குழு.
- கத்தோலிக்க மறைப்பாடசாலை.
- இளம் கத்தோலிக்க மாணவர் இயக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* இளையோர் மரியாயின் சேனை.

* மரியாயின் சிறுவர் சபை.

* இயேசுவின் திரு இருதயக் கூட்டம்.

* புனித வின்சன் டி போல் சபை.

மேற்கூறப்பட்ட செயலுள்ள சபைகளில் சேர்ந்து இல்லற மறைத்தூதுவராக செயற்பட இயேசு உம்மை அழைக்கிறார்.

**செயற்பாடு**

1. பொதுக்குருத்துவத்தினால் உமக்குத் தரப்படும் தூதுப்பணியை விருத்தி செய்ய பங்கிலுள்ள பக்திச்சபைகளில் கட்டாயமாகச் சேர வேண்டும் என்பதை ஐந்து விடயங்களை முன்னைத்து தர்க்க ரீதியாக விளக்குக.

2. "இன்று திருச்சபைக்குள் பொதுநிலைத் தலைமைத்துவம் முன்பிலும் விட மேலாக தேவைப்படுகின்றது." திருச்சபை இல 37 க.தி.ம 904 - 906 இன்படி இக்கருத்தைப் பற்றி பிரதான விடயங்கள் ஐந்தை உட்படுத்தி சமயப் பத்திரிகை ஒன்றிற்குக் கட்டுரை ஒன்று தயாரிக்குக.


**வாழ்க்கைக்கு**



உமது பங்கில் செயற்படும், கட்டிளமைப் பருவ மாணவர்கள் பங்குபற்றக் கூடிய சபை ஒன்றில் சேர்ந்து பணிபுரிக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18 சூழலைப் பாதுகாத்தல்



18.1 சூழல்

வானளாவும் மலைகளில் பாய்ந்து வரும் நீர்வீழ்ச்சிகள்
ஆழமான பள்ளத்தாக்குகள் அனைத்து வரும் கங்கைகள்
தாகம் தீர்த்து கரைசேரச் செய்யும் விந்தையிது பாரீர்!

ஆனந்தமாய் ஆடிப்பாடும் பறவையினம் விலங்கினங்கள்
ஆழ்கடலில் அற்புதமாய் நீந்தி வரும் மீனினங்கள்
பசிபோக்கி நலன்காக்கும் எம் சோதரர்கள் கேளீர்!

விதவிதமாய் சுவைதரு நல் காய்கனிகள் தானியங்கள்
அழகழகாய் அணிசெய்யும் நறுமலர்கள் மரஞ்செடிகள்
அத்தனையும் நம் நலன் பேணும் சோதரர்கள் பாரீர்!

இத்தனையும் இறைதந்தை எமக்கீய்ந்த கொடைகள் அன்றோ!
சித்தமதை உய்த்துணர்ந்து சேர்ந்திருந்து நாமொன்றாய்
பக்குவமாய் பேணியதைப் பயனடைவோம் வாரீர்!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

செவ்விந்திய இனத்தைச் சேர்ந்த சியடைல் என்பவர் இவ்வாறு கூறுகிறார். 'நதிகள் நமது சகோதரர்களாகும்'. அவை நமது தாகத்தைத் தீர்க்கின்றன. நமது படகுகளை இடத்திற்கிடம் எடுத்துச் செல்கின்றன. எங்களுடைய மற்றும், பிள்ளைகளினதும் பசியைப் போக்குகின்றன. நிலம் நம்மிலேயே ஓர் பகுதியாகும். நாம் நிலத்திலே ஓர் பகுதியினராவோம். நறுமணம் வீசும் மலர்கள் நமது சகோதரிகளாகும். காட்டிலே ஓடி, ஆடி விளையாடும் மான்கள், குதிரைகள், கழுகுகள் நமது சகோதரர்கள் ஆகும். மலை உச்சிகளில் புற்தரைகளில் காணப்படும் வளங்கள் ஒன்றுக்கொன்று தொடர்புடைய ஒரு குடும்பத்திற்குரியவையாகும்.

அந்த செவ்விந்திய இனத்தவர் புகழும் சூழல் இறைவன் நமக்குத் தந்துள்ள உயர்ந்த கொடையாகும். ஏனெனில் இறைவனே படைப்பாளி நிலம், நீர், மலை, ஆகாயம், மிருகங்கள், பறவைகள், மரம், செடிகொடிகள், காய்கறி, பழவகைகள் புற்தரை ஆகிய அனைத்துப் படைப்புக்களும் மனிதனுக்காகவே. படைப்புக்கள் அனைத்தும் நிறைவானவை, நல்லவை. மனிதன் படைப்பைப் பாதுகாக்க வேண்டும். அதைப் பற்றி திருவிவிலியம் எடுத்துக் கூறுகின்றது.

## படைப்பின் முதற்கதையின்படி சூழலைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம்

வெறுமையாக இருந்த உலகம், நிறைவானதும் அழகுடையதுமாக மாறியது இறைவனுடைய படைப்புச் செயலின் பிரதிபலனாகும். அடுத்து, கடவுள் அவர்களுக்கு ஆசி வழங்கி, 'பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள்: அதை உங்கள் ஆற்றலுக்கு உட்படுத்துங்கள், கடல் மீன்கள் வானத்துப் பறவைகள் நிலத்தில் ஊர்ந்து உயிர்வாழ்வன அனைத்தையும் ஆளுங்கள்' என்றார் (தொநூ 1:28). மனிதனிடம் ஒப்படைக்கப்பட்ட படைப்பை அவன் பாதுகாத்துப் பயன் பெறுவதால் மட்டுமே அது அவனின் இல்லிடமாக இருக்கும். இவ்வுலகில் அபிவிருத்தி நிலவும் இடத்தில் இறைவனின் படைப்பின் மகிமையும் வெளிப்படும்.

மேலும் மனிதன் இறைவனுடைய 'உருவிலும் சாயலிலும்' பாவனையாகவும் படைக்கப்பட்டுள்ளான் (தொ.நூ 1:26)

ஆரம்பத்தில் இறைவன் உலகைப் படைத்தார். இறைவனுடைய உருவிலும் சாயலிலும், படைக்கப்பட்ட மனிதன் இறைவனால் படைக்கப்பட்ட இந்த உலகத்தை மீண்டும் மீண்டும் படைத்து பாதுகாத்து அதனை அபிவிருத்தி செய்தல் வேண்டும். இதனால் மட்டுமே இறைவனின் படைப்புச் செயலில் மனிதன் பங்கு கொள்ள முடியும்.

தாம் படைத்த படைப்பை மனிதன் ஆளவேண்டும் (தொ.நூ 1:26) என்பதே இறைவனின் விருப்பமாகும். இங்கு 'ஆளுதல்' என்பதற்குப் பயன்படுத்தப்படும் எபிரேயச் சொல் 'றதா' என்பதாகும். அதன் பொருள் 'பராமரிப்பு' என்பதாகும். (விலங்குகளைப் பராமரித்தல்) எனவே விலங்குகளைப் பராமரித்து, அவற்றின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். அப்போது நமது வாழ்வு உறுதிப்படுத்தப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**படைப்பைப் பற்றிய இரண்டாவது கதையின்படி சூழலைப்பாதுகாப்பதன் முக்கியத்துவம்**

உலகைப் படைத்த இறைதந்தை, மனிதனைப் படைத்து படைப்புகள் அனைத்தின் மீதும் அவனுக்கு அதிகாரம் கொடுத்ததைத் தொடக்க நூலில் காணலாம்.

ஏதேன் தோட்டத்தைப் பண்படுத்தவும், பாதுகாக்கவும் ஆண்டவராகிய கடவுள் மனிதனை அங்கு கொண்டுவந்து குடியிருக்கச் செய்தார்.

(தொ.நூல் 2:15)

படைப்பைப் பற்றி இரண்டாவது கதையில் இறைவன் மனிதனுக்குப் பொறுப்புக்களைக் கொடுக்கின்றார்.

1. பயிரிடுதல் - பயிரிடுதல் என்பதற்குப் பயன்படுத்தப்படும் எபிரேயச் சொல் 'அபாத்' என்பதாகும். அதன் கருத்து உழைத்து உருவாக்குதல்.

உழைத்து உருவாக்குபவர் (மனிதன்) இறைபடைப்பைப் பராமரிக்கிறார்.

2. பாதுகாத்தல் - பாதுகாத்தல் என்பதற்குப் பயன்படுத்தும் எபிரேயச் சொல் ஷாமார் என்பதாகும். அதன் பொருள் பராமரித்தல். இதன் மூலம் மனிதன் படைப்பைப் பராமரிக்க வேண்டும் என்பது வெளிப்படுத்தப்படுகிறது.

இச்செயல்கள் இரண்டையும் மனிதன் வெற்றிகரமாக நிறைவேற்றினால் அவனால் வாழக்கூடிய ஒரு சூழல் இவ்வுலகில் உருவாகும். இது அவனுடைய நன்மைக்கும் வழிவகுக்கும்.

ஆனால் படைப்பைப் பாதுகாக்காதுவிடின் பல தீயவிளைவுகளும் உருவாக முடியும். இன்றைய உலகிலே பல அழிவுகளுக்குக் காரணமாயிருப்பது, இறை திட்டத்திற்கு எதிரான அதீத செயற்பாடே ஆகும். வெள்ளம், வரட்சி, மண்சரிவு என்பன அவற்றுள் சிலவாகும். ஆகையால் படைப்பைத் தவறான முறையில் பயன்படுத்தக் கூடாது.

சூழலைப் பாதுகாத்து விருத்தி செய்யும் பொறுப்பு உம்மிடமே ஒப்படைக்கப்பட்டிருப்பதால் பின்வரும் செயல்களில் ஈடுபட முயற்சியுங்கள்.

★ இயற்கையை அன்பு செய்து மதித்தல்.

★ நிலத்தின் வளத்தைப் பாதுகாத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ வாழும் சூழலை அழகுபடுத்தல்.

★ சூழல் சமநிலையைப் பேணுதல்.

★ சூழல் மாசடைவதைத் தவிர்க்க உதவுதல்.

★ எளிமையான வாழ்க்கை முறைக்குப் பழகுதல்.

★ எதிர்காலப் பரம்பரைக்காக வளங்களைப் பாதுகாத்தல்.

★ சூழலை அழிப்பவர்களுக்கு அதனால் ஏற்படும் விளைவுகளை எடுத்துக் கூறல்.

★ பௌதிக வளங்களை விருத்திசெய்து, சுயநலமின்றிப் பகிர்ந்து கொள்ளுதல்.

★ தம்மிடமுள்ள வளங்களைப் பகிர்ந்து கொள்ள அவர்களை ஊக்கமூட்டுதல்.

**செயற்பாடு**

1. பின்வரும் எபிரேயச் சொற்களின் கருத்தை எழுதுக.
   (அ) றதா (ஆ) அபாத் (இ) ஷாமார்

2. மேற்கூறப்பட்ட ஒவ்வொரு சொற்களுக்கும், சூழலைப் பராமரித்தலுக்கும் இடையிலுள்ள தொடர்பைத் தனித்தனியே சுருக்கமாக விளக்குக.

3. சூழலைப் பாதுகாத்தல், விருத்தி செய்தல் தொடர்பான கிறிஸ்தவ பொறுப்பை உயிரூட்டம் பெறச் செய்ய நீர் மேற்கொள்ளும் செயற்பாடுகள் ஐந்து தருக.

4. நாங்கள் சூழலின் ஒரு பிரிவினர் சூழல் நமது வாழ்வின் ஒரு பிரிவு என்ற தலைப்பின் கீழ் மனிதன் இறைவனின் துணைப்படைப்பாளியாகச் சமூகச் சூழலையும், பௌதீக சூழலையும் விருத்தி செய்யக்கூடிய வழிமுறைகளை 100 சொற்கள் அளவில் விளக்குக.

**வாழ்க்கைக்கு**



படைப்பிற்கும், சூழலிற்கும் மதிப்பளித்து இறைதந்தையை அன்பு செய்யுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19 சமாதானம்

*சமாதானம் சமாதானம் சமாதானம்*

*மனிதர் மனதில் அன்பு முதலில்*
*மலர வேண்டுமே*

*மலர்ந்த அன்பு தேவனோடு*
*உறவு வேண்டுமே.*

*உறவு கொண்ட நெஞ்சிலே*
*உவகை பொங்குமே*

*பொங்கும் உவமை மனதில் என்றும்*
*அமைதி தங்குமே*
*(சமாதானம்)*

*மேலேயுள்ள பாடலைப் பாருங்கள்.*
*அப்பாடலில் உமது வாழ்க்கையில் பின்பற்றக்கூடிய பண்புகளை பட்டியல்படுத்துக.*

## சமாதானம் பற்றிய கிறிஸ்தவப் படிப்பினை

பழைய உடன்படிக்கையில் 'சமாதானம்' என்பதற்குப் பயன்படுத்தும் எபிரேயச் சொல் 'ஷாலொம்' (Shalam) என்பதாகும். ஷாலொம் என்பது உள்ளார்ந்த சமாதானத்தைக் குறிக்கின்றது. உள்ளார்ந்த சமாதானத்துக்கு அடிப்படையாக இருப்பது, உண்மை, நீதி, அன்பு, சுதந்திரம் என்னும் பண்புகளாகும். நாம் பிறருக்கும், அவர்களது உரிமைகளுக்கும் மதிப்பளிப்பதன் வழியாக, உள்ளார்ந்த சமாதானத்தை உருவாக்க முடியும், எவ்வாறெனில் யுத்தம் வன்செயல் அற்றுக் காணப்படும் அமைதி நிலையை விட, பிறருக்கு மதிப்பளிப்பதாலேயே நிலையான அமைதியை ஏற்படுத்த முடியும்.

மனித வாழ்வைப் பாதுகாக்கவும், கட்டியெழுப்பவும் சமாதானம் அவசியமாகின்றது. நீதியைக் கட்டி எழுப்புதல், மற்றவர்களுடைய தேவை மட்டில் விழிப்பாயிருத்தல், மற்றவர்களை மதித்தல், சகோதர அன்போடு செயற்படுதல் ஆகியவை மனித வாழ்வைப் பாதுகாத்துக் கட்டியெழுப்பும் செயற்பாடுகளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதானத்தின் அரசனாகிய இயேசு, உள்ளார்ந்த சமாதானத்தை நிலைநாட்டவே இவ்வுலகிற்கு வந்தார். பாவத்தினால் இழந்த இறை - மனித உறவை இயேசு தம் சிலுவை மரணத்தினால் மீண்டும் நிறுவி சமாதானத்தை ஏற்படுத்தினார். அதுமட்டுமின்றி 'அமைதியை ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர்' என்று கூறி சமாதானத்தை உருவாக்க எமக்கு அழைப்பு விடுகிறார். (மத் 5:9) மேலும், ஒப்புரவு அருளடையாளத்தை ஏற்படுத்தி பாவங்களுக்கு மன்னிப்பளித்து, மனித உள்ளங்களில் சமாதானத்தை உருவாக்கும் பணியினை திருச்சபைக்கு அளித்தார்.

மனித வாழ்வைப் பாதுகாக்கவும், கட்டி எழுப்பவும் சமாதானம் அவசியம். அதனை கொடையாக கிறிஸ்து தருகின்றார். பொறாமை, வைராக்கியம், பழிவாங்குதல் என்னும் எதிர்நிலைப்பண்புகள் கிறிஸ்தவ அன்பிற்கு மாறுபட்டதாகும். இத்தகைய உணர்வுகள் தொடர்ந்து உள்ளத்தில் வளர இடமளித்தால், இன்னுமொருவருக்கு தீங்கை விளைவிக்கவும், ஒருவரை பிழையான வழி நடத்தலுக்கு தூண்டுவதாகவும் அமையும், காயினும் இந்நிலைக்கே ஆளாகினார். எனவே தீய உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொள்வது அவசியமானதாகும் என இயேசு கற்றுத் தந்தார்.

தம் சகோதரர், சகோதர்களிடம் சினங்கொள்கிறவர் தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாவார். தம் சகோதரனையோ, சகோதரியையோ முட்டாளே என்பவர் தலைமைச் சங்கத் தீர்ப்புக்கு ஆளாவார். அறிவிலியே என்பவர் எரிநரகத்துக்கு ஆளாவார்.

(மத் 5:22)

பகைவரை அன்பு செய்து, துன்புறுத்துவோருக்காகச் செபிக்க வேண்டும் என்பது இயேசுவின் போதனைகளின் மையக் கருத்தாகும்.

உங்கள் பகைவரிடமும், அன்பு கூருங்கள். உங்களைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள். இப்படிச் செய்வதால் நீங்கள் உங்கள் விண்ணகத் தந்தையின் மக்கள் ஆவீர்கள். ஏனெனில் அவர் நல்லோர் மேலும், தீயோர் மேலும் தம் கதிரவனை உதித்தெழச் செய்கிறார். நேர்மையுள்ளோர் மேலும் நேர்மையற்றோர் மேலும் மழை பெய்யச் செய்கிறார்.

(மத் 5:44,45)

- **சமாதானத்தைக் கட்டியெழுப்ப,**
  - நீதி தேவை (Justice).
  - அன்புத் தேவை.
  - பலவீனமானவர்களைப் பாதுகாக்க வேண்டும்.
  - வன்செயல்களைக் களைதல் வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ மனித உயிர்களைக் கொலை செய்யக் கூடாது.

★ மனித உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும்.

## போரை வெறுத்தல்

★ போரும், போர்கருவிகளைச் சேகரித்தலும் பயங்கரமானது.

★ போருக்காகச் செலவிடும் பணத்தைக்கொண்டு, உலகத்தில் வறுமையை நீக்கலாம்.

★ போரை வெறுத்தலும், உள்ளார்ந்த அமைதியைக் கட்டியெழுப்புவதும் கிறிஸ்துவக் கடமையாகும்.

★ போர்க்கருவிகளை உற்பத்தி செய்வதற்கு எதிராகவும், போரை ஒழிக்கவும் பல்வேறு நிறுவனங்கள் ஒன்று சேர்ந்து செயற்பட வேண்டும்.

## அசிசி நகர் தூய பிரான்சிஸியாரின் செபம்

ஆண்டவரே!

என்னை உமது சமாதானத்தின் கருவியாக்கும். வெறுப்புள்ள இடத்தில் அன்பையும், மனவருத்தம் உள்ள இடத்தில் மன்னிப்பையும், ஐயமுள்ள இடத்தில் நம்பிக்கையையும், இருள் உள்ள இடத்தில் ஒளியையும், துன்பம் உள்ள இடத்தில் மகிழ்ச்சியையும் நான் விதைத்திட அருள்புரியும்.

ஓ தெய்வீகக் குருவே!

ஆறுதல் தேடுவதைவிட ஆறுதல் அளிக்கவும், பிறரால் புரிந்துகொள்ளப்படுவதைவிட பிறரைப் புரிந்துகொள்ளவும், அன்புசெய்யப்படுவதைவிட அன்புசெய்யவும், எனக்கு அருள்புரியும்.

ஏனெனில், தருவதில்தான் நாங்கள் பெறுகிறோம். மன்னிப்பதில்தான் மன்னிக்கப்படுகிறோம், மரிப்பதில்தான் முடிவில்லா வாழ்வுக்குப் பிறக்கிறோம், ஆமேன்.



19.1 அசிசி நகர் தூய பிரான்சிஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாமும் அமைதியின் கருவிகளாக மாறவேண்டும்

சமாதானத்தின் அரசனாகிய கிறிஸ்துவுக்குள் வாழ்வதன் மூலம் அனுபவிக்கும் அமைதி ஒருவர், ஒருவரோடு பகிர்ந்துகொள்ள வழிசெய்ய வேண்டும். துன்பங்கள், தடைகள் நிறைந்த சூழலில் இயேசுவின் பிரசன்னத்தில் விசுவாசம் வைத்து உள்ளார்ந்த அமைதியை அனுபவிக்க எப்போதும் பழகிக்கொள்ளவேண்டும்.



- எப்போதும் அமைதியாக இருங்கள்.
- ஒருபோதும் நன்மைக்கு எதிராகச் செயற்பட வேண்டாம்.
- நல்மனதை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.
- நீதிக்கும், உண்மைக்கும், நியாயத்திற்கும் மதிப்பளியுங்கள்.
- பெற்றுக்கொண்டதற்கு நன்றி கூறுங்கள்.
- கொடுத்ததை மறந்து விடுங்கள், பெற்றதை நினைவில் வைத்திருங்கள்.
- மற்றவர்களுக்கு நற்செய்தியை வெளிப்படுத்துங்கள்.

**செயற்பாடு**

1. பாடசாலைச் சமூகத்தினுள் சமாதானத்தைப் பேணக் கூடிய வழிகள் ஐந்தினை உதாரணங்களுடன் முன் வைக்குக.
2. இலங்கை மக்களுக்கிடையே சமாதானத்தைக் கட்டியெழுப்பத் திருச் சபைக் குள்ள கடமைகள் ஐந்தினை எழுதுக.
3. 'அமைதியை ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர்' எனும் தலைப்பின் கீழ் 100 சொற்களில் கட்டுரை வரைக.
4. அசீசியின் புனித பிரான்சிஸ் முன்வைத்த செபத்தின் மூலம் உமது வாழ்க்கைக்கு கற்றுக் கொள்ளக்கூடிய முன்மாதிரிகைகள் ஐந்தினை நிரல்படுத்துக.

**வாழ்க்கைக்கு**



பொறுமையாகச் செயலாற்றி சமாதானத்தை உருவாக்குவோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20 ஆன்மீக உடல் சார்ந்த இரக்கச் செயல்கள்

பெனடிக்ற் : குருவே மரணத்தின் பின் எமக்கு வாழ்வு இருக்கிறதா?

குரு : ஆம், மகனே, கத்தோலிக்கராகிய எமக்கு மரணத்தின் பின் நித்திய வாழ்வு ஒன்று இருக்கிறது.

பெனடிக்ற் : குருவே! நித்திய வாழ்வைப் பெற்றுக்கொள்ள நாம் என்ன செய்ய வேண்டும்?

குரு : மகனே, அயலாரை அன்பு செய்ய வேண்டும். அதற்காக இரக்கச் செயல்களில் ஈடுபடவேண்டும்.

பெனடிக்ற் : குருவே! இரக்கச் செயல்கள் எவை?

குரு : மகனே, இந்த நற்செய்திப் பகுதியை நன்கு அவதானியும். அப்போது உமக்கு விளங்கும்.

''வானதூதர் அனைவரும் புடைசூழ மானிட மகன் மாட்சியுடன் வரும்போது தம் மாட்சிமிகு அரியணையில் வீற்றிருப்பார். எல்லா மக்களினத்தாரும் அவர் முன்னிலையில் ஒன்று கூட்டப்படுவர். ஓர் ஆயர் செம்மறியாடுகளையும், வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரித்துச் செம்மறியாடுகளை வலப்பக்கத்திலும், வெள்ளாடுகளை இடப்பக்கத்திலும் நிறுத்துவதுபோல் அம்மக்களை அவர் வெவ்வேறாகப் பிரித்து நிறுத்துவார். பின்பு அரியணையில் வீற்றிருக்கும் அரசர் தம் வலப்பக்கத்தில் உள்ளோரைப் பார்த்து, 'என் தந்தையிடமிருந்து ஆசி பெற்றவர்களே, வாருங்கள், உலகம் தோன்றியது முதல் உங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் ஆட்சியை உரிமைப்பேறாகப் பெற்றுக் கொள்ளுங்கள். ஏனெனில் நான் பசியாய் இருந்தேன், நீங்கள் உணவு கொடுத்தீர்கள்; தாகமாய் இருந்தேன், என் தாகத்தைத் தணித்தீர்கள்; அன்னியனாக இருந்தேன், என்னை ஏற்றுக் கொண்டீர்கள்; நான் ஆடையின்றி இருந்தேன், நீங்கள் எனக்கு ஆடை அணிவித்தீர்கள்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயுற்றிருந்தேன், என்னை கவனித்துக் கொண்டீர்கள்; சிறையில் இருந்தேன், என்னைத் தேடி வந்தீர்கள்' என்பார். அதற்கு நேர்மையாளர்கள் 'ஆண்டவரே, எப்போழுது உம்மைப் பசியுள்ளவராகக் கண்டு உணவளித்தோம், அல்லது தாகமுள்ளவராகக் கண்டு உமது தாகத்தைத் தணித்தோம்? எப்பொழுது உம்மை அன்னியராகக் கண்டு ஏற்றுக் கொண்டோம்? அல்லது ஆடை இல்லாதவராகக் கண்டு ஆடை அணிவித்தோம்? எப்பொழுதும் நோயுற்றவராக அல்லது சிறையில் இருக்கக் கண்டு உம்மைத்தேடி வந்தோம்'? என்று கேட்பார்கள். அதற்கு அரசர், 'மிகச் சிறியோராகிய என் சகோதோரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்' எனப் பதிலளிப்பார். பின்பு இடப்பக்கத்தில் உள்ளோரைப் பார்த்து, 'சபிக்கப்பட்டவர்களே, என்னிடமிருந்து அகன்று போங்கள். அலகைக்கும் அதன் தூதருக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிற என்றும் அணையாத நெருப்புக்குள் செல்லுங்கள். ஏனெனில் நான் பசியாய் இருந்தேன், நீங்கள் எனக்கு உணவு கொடுக்கவில்லை; தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தணிக்கவில்லை. நான் அன்னியனாய் இருந்தேன், நீங்கள் என்னை ஏற்றுக் கொள்ளவில்லை. நோயுற்றிருந்தேன், சிறையிலிருந்தேன், என்னைக் கவனித்துக் கொள்ளவில்லை' என்பார். அதற்கு அவர்கள், "ஆண்டவரே, எப்பொழுது நீர் பசியாகவோ, தாகமாகவோ, அன்னியராகவோ, ஆடையின்றியோ, நோயுற்யோ, சிறையிலோ இருக்கக் கண்டு உமக்குத் தொண்டு செய்யாதிருந்தோம்'? எனக் கேட்பார்கள். அப்போழுது அவர், 'மிகச் சிறியோராகிய இவர்களுள் ஒருவருக்கு நீங்கள் எதையெல்லாம் செய்யவில்லையோ அதை எனக்கும் செய்யவில்லை என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்' எனப் பதிலளிப்பார்''.

(மத். 25:31-45)

பசியுற்றோருக்கு உணவும் ஆடையற்றோருக்கு ஆடையும் அளித்து வந்தேன். என் இனத்தாருள் இறந்த யாருடைய சடலமாவது நினிவே நகர மதில்களுக்கு வெளியே எறியப்பட்டிருக்கக் கண்டால், அதை அடக்கம் செய்துவந்தேன்.

(தோபி. 1:17)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது அனைவரும் இறுதித்தீர்ப்புக்கு உள்ளாக்கப்படுவது பற்றி மேலே தரப்பட்ட திருவிவிலியப் பகுதி எமக்கு எடுத்துக் காட்டுகிறது. நாம் மேற்கொள்ளும் இரக்கச் செயல்களே எமது இறுதித் தீர்ப்பின் போது எம்மை அளக்கும் அளவுகோல்களாக இருக்கின்றன. கத்தோலிக்கர் என்ற வகையில் இறை கட்டளைகளைக் கடைப்பிடித்தால் மட்டும் அனைத்தும் நிறைவடையமாட்டாது. இறையாட்சியை உரிமையாக்கிக் கொள்ள வேண்டுமெனில் ஆன்ம, உடல் சார்ந்த இரக்கச் செயல்களை நாம் மேற்கொள்ள வேண்டும்.

ஒருவருடைய உடல்சார்ந்த நன்மை கருதியே உடல்சார்ந்த இரக்கச் செயல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

## உடல் சார்ந்த இரக்கச் செயல்கள் - 7

1. பசித்தோருக்கு உணவு கொடுப்பது.
2. தாகமாயிருப்போருக்கு குடிக்கச் கொடுப்பது.
3. உடையற்றோருக்கு உடை கொடுப்பது.
4. அனாதைகளுக்கு இல்லிடம் அளிப்பது.
5. நோயாளரைத் தரிசிப்பது.
6. சிறையிலிருப்போரை தரிசிப்பது.
7. இறந்தோரை அடக்கம் செய்வது.

ஒருவருடைய ஆன்ம நலன் கருதியே ஆன்மா சார்ந்த இரக்கச் செயல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

## ஆன்மீக இரக்கச் செயல்கள் - 7

1. அறிவற்றோருக்குக் கற்பிப்பது.
2. ஐயமுற்றோருக்கு நம்பிக்கை ஊட்டுவது.
3. துன்பப்படுவோருக்கு ஆறுதல் கூறுவது.
4. பாவிகளை மனம் திருப்புவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. நிந்தைகளைப் பொறுமையோடு சகிப்பது.

6. குற்றங்களை மன்னிப்பது.

7. வாழ்வோருக்காகவும், இறந்தோருக்காகவும் செபிப்பது.

மனிதனுடைய ஆன்மீக இரக்கச் செயல்களால் ஆன்மீக தேவைகள் நிறைவேறுகின்றன. எமது அறிவு, ஆற்றல்கள், திறமைகள், விருப்புக்கள், ஆசைகள், எண்ணங்கள், கருத்துக்கள் என்பவற்றை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்வதன் மூலம் அவர்களையும், நிறைவுள்ளவர்களாக்க முடியும்.

ஆன்மீக இரக்கச்செயல்கள் உடல் சார்ந்த இரக்கச் செயல்களைவிட உயர்ந்தவையாகும். எனவே எல்லா இரக்கச்செயல்களையும் நாம் மேற்கொள்ள வேண்டும். கிறிஸ்தவ அன்பு ஓர் உணர்வுக்கோ அல்லது அனுதாபத்துகோ வரையறுக்கப்பட்டதல்ல, மாறாக, அந்த அன்பு செயலில் வெளிப்படுத்தப்பட வேண்டும். அதுபற்றி தூய யாக்கோபு இவ்வாறு கூறுகிறார்.

> ஒரு சகோதரன் அல்லது ஒரு சகோதரி போதிய உடையும் அன்றாட உணவும் இல்லாதிருக்கும்போது, அவர்கள் உடலுக்குத் தேவையானவை எவற்றையும் கொடாமல் உங்களுள் ஒருவர் அவர்களைப் பார்த்து, "நலமே சென்று வாருங்கள்; குளிர் காய்ந்து கொள்ளுங்கள்; பசியாற்றிக் கொள்ளுங்கள்;" என்பாரென்றால் அதனால் பயன் என்ன?
>
> *(யாக். 2:15-16)*

உடல் சார்ந்த இரக்கச்செயல்கள் மூலம் மனிதனுடைய அடிப்படைத் தேவைகள் நிறைவுசெய்யப்படுகின்றன. உணவு, நீர், உடை, இல்லிடம், நோய், துன்பத்தில் ஆறுதல் என்பன மனிதனை மனிதனாக வாழ வைக்க இன்றியமையாதவையாகும். நம்மில் பசியால் வாடுவோருக்கு, அநாதைகளுக்கு, நோயாளருக்கு, சிறைப்பட்டோருக்கு உதவியிருக்கிறோமா என்பதை அடிப்படையாகக் கொண்டே எம் ஒவ்வொருவருடைய நித்திய வாழ்வின் விதி தீர்மானிக்கப்படும் என கிறிஸ்து கற்பிக்கின்றார். அத்தகையோருக்கு உதவுவோர், அவர்களுடைய அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வோர் முழுமனுக்குலத்திற்கும் அரசராகிய கிறிஸ்து இயேசுவுக்கே பணி செய்கின்றார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செயற்பாடு**

1. "இறையாட்சியை உரிமையாக்கிக் கொள்ள இரக்கச்செயல்களில் ஈடுபடவேண்டும்" என்ற தலைப்பில் கத்தோலிக்கப் பத்திரிகைக்குக் கட்டுரை ஒன்று வரைக.

2. உமது நலனுக்கு இடையூறு செய்பவர் அல்லது உம்மைத் துன்புறுத்துபவர் மட்டில் நீர் செய்யக்கூடிய ஆன்மீக இரக்கச்செயல்கள் இரண்டினை விளக்குக.

3. அண்மையில் ஏதெனும் ஓர் இயற்கை அனர்த்தத்தினால் துன்புற்றவர்களுக்கு நீர் செய்த அல்லது செய்யக்கூடியதாக இருந்த உதவி பற்றி 100 சொற்கள் அளவில் விபரிக்குக.

**வாழ்க்கைக்கு**



தினமும் ஆன்மீக, உடல் சார்ந்த இரக்கச்செயல்களில் ஈடுபட முயற்சி செய்க. நீர் செய்த இரக்கச் செயலுக்காக மாலைச்செபத்தில் இறைவனுக்கு நன்றி கூறுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21 திருச்சபையின் சட்டங்கள்

அனைத்துக் கத்தோலிக்க மக்களையும் இறைவார்த்தைக்குள் நேரிய வழியில் பயணிக்கத் தேவையான பின்னணியை அமைத்துக் கொடுத்தல் திருச்சபைத் தலைவர்களின் தலையாய பொறுப்பும், கடமையும் ஆகும். அதனைச் செயற்படுத்த திருச்சபைத் தலைவர்களால் பல்வேறு சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. அவற்றில் திருச்சபைச் சட்டங்கள் முக்கிய இடம் பெறுகின்றது. மேலும், திருச்சபை ஒழுக்கம் மற்றும் வேறு விடயங்கள் தொடர்பாகவும் முன்வைக்கப்பட்டுள்ள சட்டங்கள் திருச்சபைச் சட்டக் கோவையில் அடங்குகின்றன. இறைமக்களாக வாழ்வதற்கு இறைகட்டளைகள், திருச்சபைச் சட்டங்கள் என்பன வழிகாட்டுகின்றன.

## திருச்சபையின் சட்டங்கள்

1. ஞாயிறு தினங்களிலும் கடன் திரு நாட்களிலும் திருப்பலியில் பங்குகொள்வது
2. வருடத்தில் ஒருமுறையாவது ஒப்புரவு அருளடையாளத்தைப் பெறுவது
3. பாஸ்கா காலத்தில் திவ்விய நற்கருணையை உட்கொள்வது
4. ஒரு சந்தி நாட்களில் ஒரு சந்தியும் சுத்த போசனமும் அனுசரிப்பது
5. திருச்சபையின் செயற்பாட்டிற்கு உதவுவது

### 1. ஞாயிறு தினங்களிலும், கடன் திரு நாட்களிலும் முழுத் திருப்பலியில் பங்கு கொள்வது

இறைமக்களாகிய நாம் இறைவனுக்கு ஒப்புக் கொடுக்கும் பலியே திருப்பலியாகும். இப்பலி குருவானவரின் தலைமையில் நிறைவேற்றப்படினும் அனைத்து இறைமக்களும் அப்பலியில் பங்கேற்கின்றனர். திருப்பலி உன்னதமானது. இதனால், திருப்பலி வேளையில் கதைத்துக் கொண்டும், கவனமின்றியும், வேறு சிந்தனைகளிலும் ஈடுபட்டுத் திருப்பலியில் பங்கேற்பது திருப்பலியின் குறிக்கோளுக்கு முரணானது. அவ்வாறு நடந்து கொள்பவர்கள் ஏனையோரின் நம்பிக்கைக்கும், பக்திக்கும் இடையூறாக இருப்பதால் அவ்வாறான செயல்களைத் தவிர்த்து பயபக்தியுடன் நடந்து கொள்ள வேண்டும்.

ஞாயிறு தினத்தில் அல்லது வேறொரு கடன் திருநாள் திருப்பலியில் பங்குபற்றும் கடமையை அன்றைய தினத்திற்கு முதல் நாள் ஞாயிறு திருப்பலிக்காக ஒப்புக் கொடுக்கப்படும் மாலைத்திருப்பலியில் பங்கு பற்றி நிறைவேற்ற முடியும். ஆயினும், உமது ஆலயத்தில் ஞாயிறு திருப்பலி நடைபெறுமிடத்து உமது வசதிக்காக சனிக்கிழமை மாலைத் திருப்பலியில் பங்குபற்றுவதை ஓர் பழக்கமாக ஏற்படுத்திக் கொள்ளாது, ஞாயிறு தினத் திருப்பலியில் பங்கு பற்றுவது மிகவும் அர்த்தமுடையதாக அமையும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோய்வாய்ப்பட்டு படுக்கையிலிருத்தல், அண்மித்த ஆலயங்களின் திருப்பலி நடைபெறாமை, மிக முக்கிய பணிகளில் ஈடுபட்டிருத்தல் போன்ற சிறப்புக் காரணங்கள் இருக்குமிடத்து அக்கடமை நம்மைப் பாதிப்பதில்லை. ஆயினும், அவ்வாறான சந்தர்ப்பங்களில் பொருத்தமான முறையில் செப வழிபாடுகளில் பங்குபற்ற அல்லது தனியாக செபிக்க முயற்சி எடுக்க வேண்டும். ஞாயிறு தினக் கடமையை தன்மேல் சுமத்தப்படும் ஓர் சுமையாகக் கருதாது, அன்புள்ள இறைவன் மட்டில் கொள்ளும் அன்பையும் நன்றியையும் வெளிப்படுத்தும் செயலாகக் கருத வேண்டும். மேலும், திருச்சபையின் கட்டளைகளில் கூறப்படாவிடினும் வார நாட்களில் தினமும் பங்குபற்றுவது ஓர் சிறந்த செயலாகும். அதன் மூலம் எமது ஆன்மாவுக்குப் பலன் கிடைப்பதோடு ஊட்டமும் அளிக்கப்படுகிறது.

மேலும், இந்தச் சட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் மற்றுமோர் விடயம் முழுத்திருப்பலியில் அதாவது வருகைப் பாடல் முதல் இறுதிப்பாடல் வரை திருப்பலியில் பங்குபற்றுவதாகும். தவிர்க்க முடியாத காரணத்தினிமித்தம் ஒருமுறை திருப்பலிக்குத் தாமதமாகி வரநேரிடுமாயின் அது ஓர் பழக்கப்பட்ட செயலாகத் தொடர்ந்தும் ஆற்றி வருவது முறையல்ல. அத்துடன் திருப்பலி முடிவடையும் முன்னர் ஆலயத்தை விட்டு வெளியேறுவது ஏற்புடைய செயல் அல்ல. அதே வேளை திருப்பலிக்கு முன்னரும், பின்னரும் சிறிது நேரம் ஆலயத்திற்குள் அமைதியாக இருந்து செபிப்பது சிறந்த பண்பாகும். திருப்பலிக்கு முன்னர் தனிச் செபத்தின் மூலம் கிடைக்கும் மன அமைதியும், அழுத்தமும் திருப்பலியில் பக்தியுடன் பங்கு கொள்வதற்கு மிகவும் உதவியாக இருக்கும்.

**2.வருடத்தில் ஒருமுறையாவது ஒப்புரவு அருளடையாளத்தை பெறுவது,**

நல்லது கெட்டது பற்றி விளங்கிக்கொள்ளக் கூடிய அனைவருக்கும் இச்சட்டம் உரியதாகும். பொதுவாக ஏழு வயதைத் தாண்டும் போது பாவமன்னிப்பு எனப்படும் ஒப்புரவு அருளடையாளத்தைப் பெற்றுக்கொள்ள பிள்ளைகள் ஆயத்தம் செய்யப்படுகின்றனர். சாவான பாவ நிலைக்கு அடிமையாகிய ஒருவர் உடனடியாக ஒப்புரவு அருளடையாளத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். சாவான பாவ நிலைக்கு அடிமையாகாத நிலையிலும் கூட வருடத்தில் ஒரு முறையாவது பெறவேண்டுமென்பது இதனால் அறிவுறுத்தப்படுகிறது.

அப்பாவத்திற்கு அடிமையாகும் போது ஒப்புரவு அருளடையாளத்தைப் பெறுவதன் மூலம் பாவங்களுக்கு மன்னிப்பும், பாவநாட்டங்களிலிருந்து விலகி வாழ அருளும் கிடைக்கின்றது. எனவே பாஸ்கா பெருவிழா, கிறிஸ்து பிறப்பு ஆகிய பெருவிழாக்களுக்கு முன் ஆயத்தமாக ஒப்புரவு அருளடையாளத்தைப் பெறுவது சிறந்ததாகும். அதனால் அருள் நிலையோடு அவ்விழாக்களில் பங்கு பற்றக்கூடிய வாய்ப்பு ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3. பாஸ்கு காலத்தில் நற்கருணை உட்கொள்ளல்

மத்திய காலத்தில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள் நற்கருணையைப் பெற்றுக் கொள்ள அஞ்சினார்கள். அதனால் திருச்சபைச் சட்டம் இவ்வாறு இருந்த போதும் எல்லாத் திருப்பலிகளிலும் நற்கருணையைப் பெற்றுக்கொள்ளும் படி தாய்த் திருச்சபை எமக்கு கற்பிக்கின்றது. எனவே நாம் பங்குபற்றும் திருப்பலி முழுமை பெற வேண்டுமெனில் நற்கருணைப் பந்தியிலும், பங்கு கொள்ளவேண்டும்.

### 4. ஒரு சந்தி நாட்களில் ஒரு சந்தியும் சுத்த போசனமும் அனுசரிப்பது

கிறிஸ்தவ பக்தியிலும் நம்பிக்கையிலும் வாழும் கிறிஸ்தவனுக்குள்ள கடமைகளுள் ஒன்றாக ஒரு சந்தி, சுத்த போசனம் அனுசரித்தல் குறிப்பிடத்தக்கது.

### சுத்த போசனம்

சுத்த போசனம் என்பதனால் கருதப்படுவது குறிப்பிட்ட நாட்களில் தரைவாழ் மிருகங்களின் மாமிசத்தை உண்ணாதிருப்பதாகும். அத்தகைய நாட்களாவன

1. திருநீற்றுப்புதன் (வீபூதிப் புதன்)
2. பெரிய வெள்ளி
3. வருடத்தில் வரும் அனைத்து வெள்ளிக்கிழமைகள்

ஆயினும் வெள்ளிக்கிழமை தினத்தில் ஒரு திருநாள் கொண்டாடப்படும் பட்சத்தில் இக்கடமை விதிவிலக்காகும்.
உதாரணம் கிறிஸ்து பிறப்பு விழா வெள்ளிக்கிழமையில் வருதல்.

### ஒரு சந்தி

ஒரு சந்தி என்பது ஒரு நாளில் ஒரு வேளை மட்டும் நிறை உணவை உண்பதாகும். ஏனைய இரு வேளைகளில் உண்ணாது விடுதல் அல்லது குறைவான உணவை உட்கொள்ளுதல் என்பதாகும். ஒரு சந்தியின் நோக்கங்கள் பல உள்ளன. அவையாவன

1. தனது பாவங்களுக்குப் பரிகாரம் செய்தல்
2. தனது மனதைக் கட்டுப்படுத்தப் பயிற்றுதல்
3. நாற்பது நாட்கள் உண்ணா நோன்பிருந்த இயேசுவைப் பின்பற்றுதல்

ஒரு சந்தியின் போது தான் உணவு அருந்தாத வேளைக்குரிய உணவினை ஏழ்மையில் பட்டினியாய் இருப்பவர்களுக்குத் தருமம் செய்யும் படி திருச்சபைத் தாய் நமக்குக் கற்பிக்கிறாள். எனவே தருமம் செய்தல் ஒருசந்தி பிடிப்பதன் பிரதான குறிக்கோளாகும். 18 தொடக்கம் 60 வயதிற்குட்பட்டோர் கட்டாயமாக இச்சட்டத்தை நிறைவேற்ற வேண்டும். ஆயினும் நோயுற்றோரும், வயோதிபர்களும் இதிலிருந்து விடுவிக்கப்படுகின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனாலும் சுயவிருப்பின் பேரில் ஒருசந்தியைக் கடைப்பிடிக்கலாம். விபூதிப் புதன் பெரிய வெள்ளி தினங்களில் ஒருசந்தி அனுசரிக்க வேண்டிய நியதி உள்ளது. ஆயினும் வேறு தினங்களிலும் சுயவிருப்பின் பேரில் நல்லொழுக்கம் கருதி ஒருசந்தியை அனுசரிக்கலாம்.

### 5. திருச்சபையின் செயற்பாட்டிற்காக உதவுவது

எந்தவொரு நிறுவனத்தினதும் அமைப்பினதும் நிலைத்திருக்கும் தன்மை, அதன் அங்கத்தவர்கள் தம்மால் முடிந்தளவு செய்யும் தியாகத்தின் மீதே தங்கியுள்ளது. திருச்சபையின் நிலைத்திருத்தலுக்காக தம்மால் முடிந்த அளவு தியாகம் செய்யும் படி அதன் உறுப்பினர்களுக்கு இச்சட்டம் அறிவுறுத்துகின்றது. ஆலயத்தினதும் அங்கு பணிபுரிவோரின் செயற்பாட்டிற்கும் பங்கிலுள்ள வெவ்வேறு இரக்கச் சபைகளின் தேவைகளுக்காகவும் இப்பண, பொருள் உதவி பயன்படுத்தப்படுகிறது.

**செயற்பாடு**

1. திருச்சபையின் சட்டங்கள் ஐந்தையும் தருக.
2. திருப்பலியில் பங்குபற்றி நற்கருணை உட்கொள்ளாத உமது நண்பர் ஒருவருக்கு நற்கருணையின் மேன்மையை எடுத்துக்காட்ட முன்வைக்கும் விடயங்கள் ஐந்து எழுதுக.
3. திருச்சபையின் சட்டங்களைக் கடைப்பிடிப்பதன் மூலம் கிறிஸ்தவ வாழ்வை அர்த்தமுடையதாக்கிக் கொள்ள முடியும் என்ற தலைப்பின் கீழ் உமது மறைமாவட்ட சஞ்சிகைக்கு 100 சொற்களில் கட்டுரை ஒன்று வரைக.


**வாழ்க்கைக்கு**



- ✝ ஆலயத்தின் செயற்பாட்டிற்கு உதவுவோம்.
- ✝ குறிப்பிட்ட தினங்களில் சுத்த போசனம் அனுசரிப்போம்.
- ✝ பங்கு ஆலய திருவிழாவிற்கு முன் ஒப்புரவு அருளடையாளத்தை பெறுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 22 இயேசு கற்பித்த செபம்



11.1 திருத்தூதர்களுடன் இயேசு

அப்பா பிதாவே! அப்பா பிதாவே!
அப்பா பிதாவே! பிதாவே!

உம் தூய நாமம் வாழ்கவே
உம் தூய அரசு வருகவே
உம் அன்பு எம்மில் பெருகவே
உம் பண்பு எம்மில் வளரவே
(அப்பா பிதாவே)
விண்ணக வாசிகள் வாழ்வது போல்
மண்ணக மாந்தரும் வாழ்ந்திடுக.
உம் சித்தம் எம்மில் நிறைவேறுக
உம் திட்டம் எம்மில் பலன் தரும்.
(அப்பா பிதாவே)
அன்றாட உணவைத் தந்தருளும்
ஆவியை எம்மில் பொழிந்தருளும்
உம் திருவாக்கை நல்லுணவாக
உண்டு மகிழவே செய்தருளும்
(அப்பா பிதாவே)
பிறர் குற்றம் நாங்கள் பொறுப்பது போல்
எம் குற்றம் நீரே பொறுத்தருளும்
சோதனை நின்றெம்மைக் காத்தருளும்
சோதிக்கும் சாத்தானை விரட்டிவிடும்.
(அப்பா பிதாவே)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாடலை இயற்றியவர் அருட்பணி அடிகள் ஆவார். இப்பாடலில் கூறப்படுவது இயேசு கற்பித்த செபமாகும். இறை மனித உரையாடலிற்காக இயேசு எமக்கு அளித்த முழுமையான எடுத்துக்காட்டு இயேசு கற்பித்த செபமாகும். இயேசு கற்பித்த செபத்தை அல்லது பரலோக மந்திரத்தை நாம் பெற்றுக்கொண்ட விதம் தொடர்பான விடயங்களை நற்செய்தி எமக்கு கற்பிக்கிறது.

இயேசு ஓரிடத்தில் இறைவனிடம் வேண்டிக் கொண்டிருந்தார். அது முடிந்ததும் அவருடைய சீடர்களுள் ஒருவர் அவரை நோக்கி, ''ஆண்டவரே, யோவான் தம் சீடருக்கு இறைவனிடம் வேண்டக் கற்றுக் கொடுத்ததுபோல் எங்களுக்கும் கற்றுக்கொடும்'' என்றார்.

லூக்கா 11:1

இதன்படி இயேசு இச்செபத்தைச் சீடர்களின் வேண்டுகோளுக்கிணங்க கற்றுக்கொடுத்தார். இச்செபத்தைத் தூய லூக்காவும், தூய மத்தேயுவும் தமது நற்செய்திகளில் குறிப்பிட்டுள்ளனர். (லூக்கா 11:2-4, மத்தேயு 6:8-13)

தூய மத்தேயு இவ்வாறு கூறுகிறார்.

நீங்கள் அவர்களைப் போல் இருக்க வேண்டாம். ஏனெனில் நீங்கள் கேட்கும் முன்னரே உங்கள் தேவையை உங்கள் தந்தை அறிந்திருக்கிறார். ஆகவே நீங்கள் இவ்வாறு இறைவனிடம் வேண்டுங்கள்; ''விண்ணுலகிலிருக்கின்ற எங்கள் தந்தையே, உமது பெயர் தூயதெனப் போற்றப் பெறுக! உமது ஆட்சி வருக! உமது திருவுளம் விண்ணுலகில், நிறைவேறுவதுபோல மண்ணுலகிலும் நிறைவேறுக! இன்று தேவையான உணவை எங்களுக்குத் தாரும். எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்தோரை நாங்கள் மன்னித்துள்ளது போல எங்கள் குற்றங்களை மன்னியும். எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும், தீயோனிடமிருந்து எங்களை விடுவியும். (''ஆட்சியும், வல்லமையும், மாட்சியும் என்றென்றும் உமக்கே ஆமேன்'')

மத்தேயு 6:8-13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இச்செபம் விண்ணுலகிலிருக்கிற எங்கள் தந்தையே'' என்பதாகும். இதன் கருத்தை கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி நூலின் படிப்பினைகளின்படி ஆராய்வோம்.

திருமுழுக்கின் மூலம் கடவுளின் சுவீகாரப் பிள்ளைகளான எமக்கு கடவுளை அப்பா, தந்தையே என அழைக்கும் உரிமையை இயேசு வெளிப்படுத்தியிருக்கின்றார். விண்ணுலகில் இருக்கின்ற எங்கள் தந்தையே என்னும் விவிலியச் சொல் ஓர் இடத்தைக் குறிப்பதன்று. மாறாகக் கடவுளின் இறைமாட்சி, தூய்மை, நேர்மையாளர் உள்ளங்களில் அவரது உடனிருப்பு ஆகியவற்றைக் குறிக்கிறது.

கத்தோலிக்க திருச்சபை மறைநூல் 2798,2802

இச் செபத்தில் புகழ்ச்சிக்குரிய வாழ்த்துக்கள் மூன்றும், ஆன்மீக உடல் தேவைகள் தொடர்பான வேண்டுதல்கள் நான்கும் உள்ளன. இப்புகழ்ச்சியினதும் வேண்டுதல்களினதும் கருத்துக்கள் பின்வருமாறு கூறப்பட்டுள்ளன.

**1. விண்ணுலகிலிருக்கிற எங்கள் தந்தையே உமது பெயர் தூயதெனப் போற்றப் பெறுக.**

இறைவனின் நாமத்தைப் போற்றிப் புகழ நாம் நல்ல முறையில் வாழ வேண்டும். அதாவது நாம் அவரின் நாமம் போற்றப்படும் விதத்தில் வாழ வேண்டும்.

**2. உமது ஆட்சி வருக**

இது கிறிஸ்துவின் இரண்டாம் வருகையுடன் தொடர்பானது. இறையாட்சி இவ்வுலகில் முழுமையடைய நாம் செபிப்போம்.

**3. உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவதுபோல மண்ணுலகிலும் நிறைவேறுக.**

மீட்பின் திட்டம் இவ்வுலகில் முழுமை பெற இறை விருப்பத்துடன் ஒன்றிணைவது எமது கடமையாகும்.

**4. எங்கள் அன்றாட உணவை எங்களுக்கு இன்று தாரும்.**

உணவு என்பது இவ்வுலக வாழ்விற்குத் தேவையான உணவு போல, ஆன்மீக வாழ்வுக்கு

1. இறைவார்த்தையும்
2. கிறிஸ்துவின் திரு உடலாகிய நற்கருணையும் உணவாகின்றது.
   i. இறைபாதுகாப்பினால் தமது அன்றாட உணவையும்
   ii. இறைவார்த்தையினால் ஊட்டத்தையும்
   iii. நற்கருணையினால் ஊட்டம் பெற இவ்வேண்டுதலினால் கேட்போம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்தோரை நாங்கள் மன்னித்துள்ளது போல எங்கள் குற்றங்களையும் மன்னியும்.

கிறிஸ்துவின் முன்மாதிரிகையினாலும் உதவியினாலும் எமக்கு தீங்கு செய்தோரை மன்னித்தால் மாத்திரம் எம்மையும் மன்னிக்குமாறு இறைவனிடம் செபிப்போம்.

6. எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும்

1. பாவம் செய்ய இடமளிக்காமலும்
2. பாவம் செய்ய தூண்டும் சந்தர்ப்பங்களை அறிந்துக் கொள்ள தூய ஆவியின் வரத்தைப் பெறவும்
3. பாவத்திற்கு எதிராகச் செயற்பட தைரியத்தையும் பாதுகாப்பையும் கேட்டு இறைவனை வேண்டுவோம்.

7. தீயோனிடமிருந்து எங்களை விடுவியும்

அலகையை தோற்கடித்து கிறிஸ்துவைப் பற்றிக்கொள்ள வரம்வேண்டி இறைவனை மன்றாடுவோம்.

''ஆமென்'' என்பதால் செபத்தின் மூலம் நாம் கேட்பது தவறாமல் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் செய்யும் நம்பிக்கை அறிக்கையாகும். இச்செபம் முழு நற்செய்தியினதும் சுருக்கமாகும். பரலோக மந்திரத்தில் அடங்காத எதுவுமே திருவிவிலியத்தில் காண முடியாது. எமக்குத் தேவையானதைக் கேட்பது மட்டுமல்ல கேட்பவை மட்டிலும் ஆர்வத்தைக் கற்பிப்பதால் இச்செபம் முழுமையான செபமாகும்.



22.2 இயேசு கற்பித்த செபத்தைச் செபித்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசு கற்பித்த செபத்தை செபிக்கும் முறையை பரிசுத்த திருச்பை எமக்குக் கற்பிக்கிறது.

> நம் விண்ணப்பங்கள் கேட்கப்படுகின்றன என்னும் உறுதியுடன் இயேசு கற்றுத்தந்த இறை வேண்டலை எளிய பிள்ளைக்குரிய நம்பிக்கையுடனும், மகிழ்ச்சியான உறுதிப்பாட்டுடனும், தாழ்ச்சியான துணிவுடனும் செபிக்க வேண்டும்.
>
> கத்தோலிக்க திருச்சபை மறைநூல் 2797

இச்செபத்தைச் செபிக்கும்போது கரங்களை உயர்த்தி நாம் செபிப்போம். இம்மாதிரிகையைப் பின்பற்றி இச்செபத்தைச் செபிக்க திருச்சபை எம்மை அழைக்கிறது. ஏனெனில் இச்செபத்தில் முக்கியமானது. கைகளை உயர்த்தி இறைவனை வேண்டுவதாகும்.

## இயேசு கற்பித்த செபத்தின் பண்புகள்

**1. இறைபுகழ்ச்சி**

விண்ணகத்திலிருக்கிற எங்கள் தந்தையே உமது பெயர் தூயதெனப் போற்றப் பெறுக.

**2. இறை வணக்கம்**

உமது ஆட்சி வருக. உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல மண்ணுலகிலும் நிறைவேறுக.

**3. வேண்டுதல்**

இன்று தேவையான உணவை எங்களுக்குத் தாரும்.

**4.மன்னிப்பு**

எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்தோரை நாங்கள் மன்னித்துள்ளதுபோல எங்கள் குற்றங்களையும் மன்னியும்.

**5. இறை பாதுகாப்பை வேண்டுதல்**

எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும்.
தீயோனிடமிருந்து எங்களை விடுவியும்.

இயேசு கற்பித்த செபத்தைச் செபிக்கும் முன் எமக்கு குற்றம் செய்தவர், எம்மை தண்டித்தவர், தீங்கு ஏற்படுத்தியவர், ஏளனம் செய்தவர் அனைவரையும் மன்னித்தல் வேண்டும். கேட்டவை கிடைக்குமென்ற நம்பிக்கையுடன் இச் செபத்தைச் செபித்து இச் செபத்தின் மகிமையை உணர்ந்துக் கொள்வோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செயற்பாடு**

1. இறைச்சித்தத்தை நிறைவேற்ற நீர் செயற்பட்ட சந்தர்ப்பங்கள் மூன்று எழுதுக.

2. ''எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்தோரை நாங்கள் மன்னித்துள்ளதுபோல எங்கள் குற்றங்களையும் மன்னியும்'' என்பதை நீர் பின்பற்றிய சந்தர்ப்பங்கள் மூன்று எழுதுக.

**வாழ்க்கைக்கு**



ஒரு நாளைக்கு ஒரு முறையாவது இயேசு கற்பித்த செபத்தை செபித்து அதன் மகிமையை அனுபவியுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 23 மரியன்னை பக்தி

கத்தோலிக்கர் வணக்கம் செலுத்தும் அன்னை மரியாவை போன்ற ஒரு பெண் இதுவரை இவ்வுலகில் பிறந்ததுமில்லை பிறக்கப்போவதுமில்லை. மரியன்னைக்குரிய செபங்கள், நூல்கள், பக்திபாடல்கள், திருச்சொரூபங்கள் படங்கள், அழைக்கப்படும் பெயர்கள், முக்கியமான யாத்திரைத் தலங்கள், ஆலயங்கள் என்பன இதற்குச் சான்றுபகர்கின்றன. கத்தோலிக்கரின் திருவழிப்பாட்டிலும் பக்தி முயற்சிகளிலும், அன்னை மரியாவுக்கு மிக முக்கிய இடம் வழங்கப்பட்டிருப்பதை இவை குறித்துக் காட்டுகின்றது.

முதல் நூற்றாண்டில் உரோமைப் பேரரசனால் கிறிஸ்தவர்கள் கொலை செய்யப்பட்டனர். இதனால் தூய திருச்சபை இக்காலத்தில் மறைசாட்சிகள் மட்டில் தனது கவனத்தைச் செலுத்தியது. இப்பின்னணியிலும் கூட அன்னை மரியா மட்டில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது, என்பதற்கு மூன்றாம் நூற்றாண்டில் இருந்து மனனம் செய்து பயன்படுத்தப்பட்டு வந்த ''சருவேசுரனுடைய பரிசுத்தமாதாவே என்னும் செபம் சிறந்த சான்றாகும்.''

**மரியாவின் செபம்**

இறைவனின் பரிசுத்த மாதாவே! இதோ உம்முடைய அடைக்கலமாக ஓடி வந்தோம். நாங்கள் எங்கள் அவசரங்களில் வேண்டிக் கொள்வதற்கு தாயே நீர் பாராமுகமாய் இராதேயும் ஆசீர்வதிக்கப்பட்டவருமாய், மோட்ச மகிமையுடையவருமான நித்திய கன்னிகையே, சகல விதமான ஆபத்துக்களிலிருந்தும் எம்மைக் காத்துக்கொள்ளும்.

**மரியன்னை பக்தி முயற்சிக்கான பின்னணி**

மரியா எலிசபெத்திடம் எல்லாத் தலைமுறைகளும் என்னைப் ''பேறுபெற்றவர் என்பர்'' என கூறினார். இது மரியன்னை பக்திக்கு மிகப் பொருத்தமாக உள்ளது மரியன்னை பக்தியானது அவருக்கு ஆராதனை செலுத்துவதைவிட அவருக்கு வணக்கம் செலுத்துவதையே குறிக்கின்றது. ஆராதனை தந்தை, மகன், தூய ஆவி ஆகிய மூவொரு கிறிஸ்துவ இறைவனுக்கு மட்டுமே உரித்தானது. (1 திமொ 2:5-6)

(கத்தோலிக் திருச்சபையின் மறைநூல் 971)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரியன்னைக்கு நாம் வணக்கம் சொல்லுவதற்கான காரணங்கள்

1. அன்னை மரியாள் இறைவனின் தாய்.
2. சென்ம பாவமில்லாமல் உற்பவித்தமை.
3. தாய்மை நிலையை அடைந்தாலும் பிரசவத்தின் முன்னும் பின்னும் கன்னிமையை பாதுகாத்தமை.
4. இறையருள் மிகப் பெற்றமை.
5. அனைத்து பாவங்களிலிருந்தும் விடுவிக்கப்பட்டமை.
6. ஆன்ம, உடலோடு விண்ணகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டமை.

## மரியாவின் அமலோற்பவம்


மரியன்னை தாயின் கருவில் உருவாகியது முதல் விசேட இறையருளினால் சென்மபாவத்திலிருந்து விடுவிக்கப்பட்டாள். திருத்தந்தை 9வது பியூஸ்(பயஸ்) இது பற்றி பின்வருமாறு கூறிகின்றார்.

> எல்லாம் வல்ல இறைவனது தனித்துவமான அருளாலும் சலுகையாலும், மனுக்குல மீட்பர் இயேசுகிறிஸ்துவின் பேறுபலன்களை முன்னிட்டும் தூய கன்னி மரியா கருவாக உருவான போதே சென்ம பாவ தோஷத்திலிருந்து பாதுகாக்கப்பட்டார்.
>
> (கத்தோலிக்கத் திருச்சபையின் மறைநூல் 491)

இக்கூற்றுப்படி அன்னை மரியா இறை மகனின் தாயாக விசேட விதமாக தேர்ந்தெடுக்கப்பட்டதால், இறையருளால் கருவாக உருவான போதே சென்ம பாவத்தில் இருந்து பாதுகாக்கப்பட்டார். மரியன்னை சென்ம பாவத்திலிருந்து பாதுகாக்கப் பட்டது போல நாமும் திருமுழுக்கினால் சென்ம பாவத்திலிருந்து விடுதலை பெறுகிறோம். சென்ம பாவத்திலிருந்து பாதுகாக்கப்பெற்ற மரியா எல்லா கன்ம பாவங்களிலிருந்தும், விலகியிருந்தாள். அதேபோல் திருமுழுக்குப் பெற்ற நாமும் எல்லாப் பாவங்களிலிருந்தும் விலகி நல்வாழ்வு வாழ வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரியன்னையின் விண்ணேற்பு



23.1 மரியன்னையின் விண்ணேற்பு

## மரியன்னையின் விண்ணேற்பு

விண்ணேற்றம் என்பது தனது சொந்த வல்லமையினால் விண்ணகம் செல்வதாகும். இயேசு கிறிஸ்து ஒருவரால் மட்டுமே இவ்வாறு விண்ணகம் செல்ல முடிந்தது. ''விண்ணகத்திலிருந்து இறங்கி வந்துள்ள மானிட மகனைத் தவிர வேறு எவரும் விண்ணகத்திற்கு ஏறிச் சென்றதில்லை'' (யோவான் 3:13). விண்ணேற்பு என்பது ஒருவர் இன்னொருவரால் விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவதாகும். மரியன்னை விண்ணேற்றம் அடையவில்லை மாறாக விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். இதைப்பற்றி கத்தோலிக்கத் திருச்சபை மறைக் கல்வி நூல் பின்வருமாறு கற்பிக்கின்றது.

> அனைத்து சென்ம பாவ தோஷத்திலிருந்து பாதுகாக்கப்பட்ட அமல உற்பவியான கன்னிமரியா தமது இவ்வுலக வாழ்வின் முடிவில் தம் ஆன்ம, உடலோடும் விண்ணக மகிமைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு அனைத்திற்கும் அரசியாக ஆண்டவரால் ஏற்படுத்தப்பட்டார். இதனால் பாவத்தையும், மரணத்தையும் வென்றவருமான தமது மகனின் சாயலுக்கு ஒத்தவரானார். தூய கன்னிமரியாவின் விண்ணேற்பானது தமது மகனின் உயிர்ப்பில் பங்கு பெறுதலும், ஏனைய கிறிஸ்தவர்களது உயிர்ப்புக்கு முன்னடையாளமுமாகும்.
>
> கத்தோலிக்கத் திருச்சபையின் மறைக்கல்வி நூல் 966

மரியன்னையின் இவ்வுலக வாழ்வின் இறுதியில் இறைவன் அவரை ஆன்ம, உடலோடு விண்ணகத்திற்கு எடுத்துக்கொண்டார். கிறிஸ்துவை மரணத்திலிருந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்ப்பித்ததன் மூலம் இறைவன் அனைவருக்கும் வாக்களித்த உயிர்ப்பில் அன்னை மரியாவையும் பங்குபெறச் செய்தார். இதன்படி கன்னிமரியாவின் விண்ணேற்பை நாம் விசுவசிக்கும், அறிக்கையிடும் போது எமது உயிர்ப்பையும், நித்திய வாழ்வையும் நாமும் விசுவாசித்து அறிக்கையிடுகின்றோம். கிறிஸ்து திருத்தூதருக்கு வழங்கிய வாக்குறுதியின் மூலம் இது தெளிவுபடுத்தப்படுகின்றது. இதனைக் கீழே காணலாம்.

> நான் போய் உங்களுக்கு இடம் ஏற்பாடு செய்தபின் திரும்பி வந்து உங்களை என்னிடம் அழைத்துக் கொள்வேன்.
>
> யோவான் 14:3

தாம் அன்பு செய்யும் அனைவரும் தம்முடன் இருக்க வேண்டும் என்று இயேசுவின் தீராத விருப்பானது இயேசுவின் வேண்டல் செபத்தில் தெளிவாகிறது.

> ''தந்தையே... அவர்களும் நான் இருக்கும் இடத்திலேயே என்னோடு இருக்க வேண்டுமே என விரும்புகிறேன்''
>
> யோவான் 17:24

மரியன்னை பாவத்தை விலக்கி நல்வாழ்வு வாழ்ந்ததினால் விண்ணகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார். நாமும் இவ்வருளைப் பெறுவதற்குப் பாவத்தை விலக்கி நல்வாழ்வு வாழ வேண்டும். அவ்வாறு வாழ்ந்தால் இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது மரியன்னை பெற்றுக்கொண்ட அதே அருளை நாமும் பெற்றுக் கொள்ள முடியும்.

## மரியன்னை காட்சியளித்தல்

மரியன்னை செபமாலை ஏந்தியவாறு பல தடவைகள் காட்சியளித்துள்ளார். இக் காட்சிகள் அனைத்தும் எமக்கு சில செய்திகளைத் தருகின்றன.

1. நாம் மிகவும் துன்பமான காலத்தில் வாழ்கிறோம் என்பதை இறைவன் அறிந்துள்ளார் என்பதும்,

2. இத் துன்பமான காலத்தில் மரியன்னை தனது அன்னைக்குரிய அன்பை விசேட விதமாக எமக்குக் காட்டுகின்றார், என்பதுமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாத்திமா நகரில் இறை அன்னை காட்சியளித்தல்



23.1 இறைஅன்னை பாத்திமா நகரில் காட்சியளித்தல்

கி.பி 1917 வைகாசி மாதம் 13ஆம் திகதியிலிருந்து ஐப்பசி மாதம் 13ஆம் திகதி வரையான காலப்பகுதியில் பலமுறை போர்த்துக்கல் நாட்டிலுள்ள பாத்திமா நகரில் லூசியா, ஜசிந்தா, பிரான்சிஸ்கோ என்ற மூன்று சிறுவருக்கு தேவ அன்னை காட்சியளித்தார். கேதுறு மரத்தில் தோன்றிய ஒளிக்கதிர்கள் மத்தியில் செபமாலையைச் செபிக்குமாறு பணித்தார்.

## லூர்து நகரில் இறை அன்னை காட்சியளித்தல்



23.1 இறை அன்னை லூர்து நகரில் காட்சியளித்தல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.பி 1858 மாசி மாதம் 11ஆம் திகதி பிரான்சின் லூர்து நகரில் பெர்ணதேத் என்ற சிறுமிக்கு 18முறை காட்சியளித்து செபமாலைப் பக்தியின் மாண்பை வெளிப் படுத்தினார்.

## இறை அன்னை வேளாங்கண்ணி நகரில் காட்சியளித்தல்



23.4 இறை அன்னை வேளாங்கண்ணி நகரில் காட்சியளித்தல்

16 ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் வேளாங்கன்னி எனும் நகரில் மரியன்னை பால் விற்பனை செய்யும் முடவனான ஒரு சிறுவனுக்கு ஒரு குளத்தினருகில் காட்சியளித்தார். அவள் தான் கையிலேந்தியுள்ள குழந்தைக்குக் குடிக்க கொடுப்பதற்காக சிறுவனிடம் பால் கேட்டாள். சிறுவன் அவளின் வேண்டு கோளை நிறை வேற்றினான். பால் விற்பனை செய்யும் இடத்துக்குச் சென்று பால் குறைந்ததிற்கும், நேரம் தாமதமானதிற்கும் மன்னிப்புக்கேட்டான். ஆனால் பாத்திரத்தில் பால் குறைந்திருக்கவில்லை. இதனால் பாலை விலைக்கு வாங்குபவர் சிறுவனுடன் குளத்தினருகே வந்தபோது அவள் அந்த இருவருக்கும் காட்சியளித்தாள். பின்பு வேளாங்கன்னி கிராமத்தில் அச்சிறுவனுக்கு மீண்டும் காட்சியளித்ததோடு முடவனான அச்சிறுவனுக்குக் குணமளித்தாள்.

## சதா சகாய அன்னையின் நவநாள்

எங்களதும், பிறரதும் வாழ்க்கையின் இவ்வுலக மறுவுலக அன்றாட தேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் அதன் மூலம் இறையன்பை அனுபவிக்கவும் சதாசகாய அன்னையின் நவநாட்களுக்குப் பக்தியுடன் பங்குகொள்ள வேண்டும்.

## செபமாலை

செபமாலை என்பதன் ஆங்கிலச் சொல் ''றோசரி'' என்பதாகும். இதன் லத்தீன் சொல் ''றொசாரியும்'' என்பதாகும். ''றொசாரியும்'' என்ற சொல்லின் அர்த்தம் றோசா மலர்ப் பூங்கா அல்லது றோசாப் பூமாலை என்பதாகும். செபமாலை தியானம் இயேசு வினதும் மரியன்னையினதும் வாழ்க்கை மறையுண்மைகளையும், முக்கிய நிகழ்ச்சி களையும் நினைவு கூரும் செபமாகும். இது எமக்கு முக்கிய கருவியாக இருப்பதால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதை எம்முடன் வைத்துக் கொள்வதாலும் வாகனங்களில் தொங்க விடுவதாலும் இறக்கும் போது இறந்தவரின் கையில் அணிவிப்பதாலும் சிறந்த பாதுகாப்பைப் பெற்றுக்கொள்ள முடியும்.

மரியன்னை காட்சி கொடுத்த எல்லாச் சந்தர்ப்பங்களிலும், பாவிகள் மனந்திரும்ப வேண்டும் என்று செபமாலையைச் செபிக்குமாறு கேட்டுக் கொண்டார். முதலில் நாம் மனந்திரும்பவும், பிறர் மனந்திரும்பவும் அனுதினமும் செபமாலை செபிக்க வேண்டும்.

ஒவ்வொரு வருடமும், திருவழிப்பாட்டு ஆண்டில் மரியன்னையை மகிமைப்படுத்தப் பரிசுத்த திருச்சபை பலதிருவிழாக்களைக் கொண்டாடுகின்றது.

## மரியன்னையின் விழாக்கள்

- தை 01 தூய மரியாள் இறைவனின் அன்னை.
- மாசி 02 காணிக்கை அன்னையின் திருவிழா.
- வைகாசி 31 எலிசபெத்தை மரியா சந்தித்த திருவிழா.
- ஆவணி 15 மரியன்னையின் விண்ணேற்புத் திருவிழா
- புரட்டாதி 08 மரியாளின் பிறப்புத் திருவிழா.
- மார்கழி 08 மரியாவின் அமல உற்பவத் திருவிழா.

## மரியா தூய திருச்சபையின் அன்னை

இயேசு சிலுவையடியில் தம் தாயைத் தான் அன்பு செய்த திருத்தூதரிடம் ஒப்படைத்தார். (யோவாள் 19:25-27) இயேசுவின் விண்ணேற்றம் வரை திருத்தூதர் களுடனும் ஏனைய மக்களுடனும் கூட இருந்த மரியன்னை அதன் பின்பும் அவர்களை விட்டுப் பிரியாமல் அவர்களுடன் ஒரு மனதாய் இடைவிடாமல் செபத்தில் ஒன்றித்திருந்தார். (தி.ப 1:14) க.தி.ம 963 இல் மரியன்னை இயேசுவின் அன்னையும், பரிசுத்த திருச்சபையின் அன்னையும், என்பதைத் தெளிவுபடுத்துகின்றது. திருத்தந்தை 6வது பவுலின் ''மிஸ் டேறியும் பிடெயி'' அல்லது ''விசுவாசத்தின் மறைபொருள்'' என்ற சுற்றுமடலும் மரியன்னை உலகில் வெவ்வேறு பகுதிகளில் காட்சி கொடுத்துக் கூறிய செய்திகளும், மற்றும் அன்றாட வாழ்க்கையில் நாம் அனுபவித்த அவரின் பரிந்துரைகளும், மரியன்னை பரிசுத்தத் திருச்சபையின் அன்னை என்பதை உறுதிப்படுத்துகின்றன. பற்பல இடங்களில் காட்சிகொடுக்கும் மரியன்னை தம் பரிந்துரைகள் மூலம் பரிசுத்தத் திருச்சபையின் அன்னையாக இன்றும் உள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செயற்பாடு**

1. விண்ணேற்றம், விண்ணேற்பு என்பதன் வேறுபாடுகளைத் தெளிவுபடுத்துக.
2. மரியன்னையின் காட்சிகள் மூலம் உமக்கு கிடைக்கும் செய்திகள் இரண்டு எழுதுக.
3. மரியன்னை பக்தியின் இறையியல் பின்னணியைச் சுருக்கமாக விளக்குக.


**வாழ்க்கைக்கு**



மரியன்னையின் பரிந்துரையை வேண்டி ஒவ்வொரு நாளும் செபமாலையைச் செபிப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 24 திருப்புகழ்மாலை



24.1 திருப்புகழ்மாலையை செபித்தல்

தினமும் குறிப்பிட்ட வேளைகளில் இறைவனைப் புகழ்வதற்காத் திருச்ச பையால் அதிகாரபூர்வமாக ஏற்படுத்தப்பட்ட செபமே திருப்புகழ்மாலை எனப்படுகின்றது.

திருப்புகழ்மாலை நான்கு வேளைகளில் செபிக்கப்படுகின்றது.

1. காலை வேளை
2. மதிய வேளை
3. மாலை வேளை
4. இரவு வேளை

எக்காலத்திற்கும் உரியவராகிய இறைவனை ஒவ்வொரு வேளையும் இடையறாது புகழ்வது ஏற்புடையதாகும். திருப்பலியும் திருப்புகழ்மாலையும் தினமும் நடைபெறுவதால் அன்றைய நாள் முழுவதும் புனிதப்படுத்தப்படுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு இடையறாது ஒவ்வொரு வேளையும் இறைவனைப் புகழ்வதால் எக்காலமும், எல்லா நாட்களும், எல்லா வேளையும் இறைவனுக்கு உரியதாகும். எனவே இராகு (கெட்ட) காலம் என ஒன்று இருக்கமுடியாது. எக்காலமும், நன்மையானதும் சிறப்பானதும் ஆகும்.

திருபுகழ்மாலையைமச் செபிக்கும் வேளைகளின் அடிப்படையில் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. காலைத் திருப்புகழ்மாலை
2. மதியத் திருப்புகழ்மாலை
3. மாலைத் திருப்புகழ்மாலை
4. இரவுத் திருப்புகழ்மாலை

மாலைத் திருப்புகழ்மாலை வெஸ்பர் எனவும் அழைக்கப்படுகின்றது. ஆலயத் திருவிழாவை முன்னிட்டு நடைபெறும் இறுதிநாள் மாலை வழிபாடு மாலைத் திருப்புகழ்மாலையின் அடிப்படையில் நடைபெறுவதால் மாலை ஆராதனை அல்லது வெஸ்பர் என அழைக்கப்படுகிறது.

இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தின் பின் இது நாளிகை திருவழிபாடு (Listurgy of the hours) என அழைக்கப்படுகின்றது. மேற்கூறப்பட்ட கருத்து இதனால் தெளிவுபடுத்தப்படுகிறது. இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்கு முன் இது ''கட்டளைச் செபம்'' (The Divine office) என அழைக்கப்பட்டது. விசேடமாகக் குருக்களும், துறவிகளும் கட்டாயமாக இச்செப வழிப்பாட்டை நிறைவேற்ற வேண்டும் என்பதே கட்டளைச்செபம் என்பதால் எடுத்துக்காட்டப்படுகின்றது. இது திருச்சபையின் அதிகாரபூர்வ செபம் எனவும் அறிமுகம் செய்யப்படுகின்றது.

'இடைவிடாது செபித்தல்' பற்றிய திருத்தூதர்களின் படிப்பினைக்கேற்ப (1தெச 5:17, எபே 6:18) திருப்புகழ்மாலையைப் பகலும், இரவும் செபிக்கும் போது அன்றைய நாள் முழுவதும் புனிதப்படுத்தப்படுகின்றது. காலை, மாலைத் திருப்புகழ்மாலையைச் செபிப்பது குருக்கள் துறவிகளின் முதற்பணியாகும். திருச்ச பையின் பொதுச்செபமாகிய இத்திருப்புகழ் மாலையைச் செபிக்கும் போது இறைமக்கள் அனைவரும் திருமுழுக்கினால் பெறும் குருத்துவத்தில் பங்கு பெறுகிறோம். இறைதந்தையை நோக்கி தம் உடலோடு (திருச்சபையோடு) ஒன்றித்துக் கிறிஸ்துவே எழுப்புகின்ற செபமாகவும் திகழ்கின்றது (திவ, எண். 84) முறையாகச் செபிக்கும் போது மணமகனுடன் உரையாடும் மணமகளின் குரலாக அமைகின்றது. திருப்புகழ்மாலையினூடாக திருப்பாடல்களையும் புகழ்பாக்களையும் ஆவிக்குரிய பாடல்களையயும் நன்றியோடு பாடுவதன் மூலம் திருச்சபை ஆன்மீகத்தில் வளர்கின்றது. (கொலோ .3:16)

திருப்புகழ்மாலை திருவிலிலியத்தின் திருப்பாடல்களிலிருந்து எடுக்கப்பட்டு ஒன்று சேர்க்கப்பட்ட புகழ்ச்சிச் செபமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்புகழ்மாலையின் புகழ்ச்சிப்பாடல்களில் மூன்று மாத்திரம் நற்செய்தி நூலிலிருந்து எடுக்கப்படுகின்றன. அவைகள் லூக்கா நற்செய்தியில் உள்ளன.

காலை வேளை - செக்கரியாவின் புகழ்ச்சிப்பாடல் (லூக்கா 1:68-79)

மாலை வேளை - மரியாவின் புகழ்ச்சிப் பாடல் (லூக்கா 1:46-55)

இரவு வேளை - சிமியோனின் புகழ்ச்சிப் பாடல் (லூக்கா 2:29-32)

## திருப்புகழ்மாலையின் ஆரம்பமும் வளர்ச்சியும்

திருப்புகழ்மாலை ஒரு புதிய செபமல்ல. ஆரம்பத்தில் யூதமக்கள் செபக்கூடங்களில் திருப்பாடலிலுள்ள பாடல்களை தமது செபங்களில் பயன்படுத்திப் பாடினர். இயேசுவும், அவருடைய சீடர்களும் செபக்கூடங்களில் ஒன்றுசேர்ந்து இச்செபங்களில் பங்குபற்றினர். இத்தகைய தொன்மையான மரபைப் பின்பற்றியே திருப்புகழ்மாலை தொகுக்கப்பட்டது.

திருத்தூதர் காலத்தில் குறிப்பிட்ட நேரங்களில் திருப்புகழ்மாலை செபிக்கப்பட்டது. பிற்காலத்தில் ஆயரின் தலைமையில் குருக்கள், துறவிகள், பொதுநிலையினர் ஆகியோரின் பங்குபற்றுதலோடு செபிக்கப்பட்டது. திருப்புகழ் மாலை பாரம்பரியம் எருசலேமில் இருந்ததாக ஸ்பானிய இனத்தைச் சேர்ந்த பெண் துறவியான 'எஜேரியா' என்பவர் கி.பி 381 -384ல் எருசலேம் திருயாத்திரை மேற்கொண்டபோது தமது நாட்குறிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

நான்காம் நூற்றாண்டில் மதச் சுதந்திரம் கிடைத்ததையடுத்து துறவறச் சபைகளில் முன்னேற்றம் காணப்பட்டதால் திருப்புகழ் மாலையில் பாரிய மாற்றம் ஏற்பட்டது. மேற்றிராசன ஆலயந்தோறும் ஆயர் தலைமையில் கத்தோலிக்கக் குழுமியங்களினால் செபிக்கப்பட்ட இச்செபம் ஆசனக்கோவில் திருப்புகழ்மாலை எனவும், துறவற இல்லங்கள் தோறும் துறவறக் குழுமியங்களினால் செபிக்கப்பட்ட இச்செபம் துறவறத் திருப்புகழ்மாலை எனவும் அறிமுகம் செய்யப்பட்டு வந்தது.

காலப்போக்கில் துறவறச் சபைகளில் திருப்புகழ்மாலையின் இலகு தன்மை மாற்றப்பட்டு நீண்ட வேளைச் செபமாக்கப்பட்டது. செபிக்க வேண்டிய வேளைகளில் எண்ணிக்கையும் ஈடுகொடுக்க முடியாதவாறு அதிகரித்தது. அதனால் பொது நிலையினர் திருப்புகழ்மாலை செபிப்பதிலிருந்து விலகிக் கொண்டனர். திருப்புகழ்மாலைக்குப் பதிலாக பொதுநிலையினருக்கான வேறுசெபங்கள் அறிமுகஞ் செய்து வைக்கப்பட்டன. காலை, மதியம், மாலை செபங்களுககுப் பதிலாக மூவேளைச் செபம் அறிமுகப்படுத்தப்பட்டது. செபமாலையும் திருப்புகழ்மாலைக்குப் பதிலாகச் செபிக்கப்படும் செபமாகக் கருதப்படுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரதிஷ்டவசமாகத் திருப்புகழ்மாலை குருக்கள் துறவியருக்கு மட்டும் வரையறுக்கப்பட்ட செபமாக நடைமுறையில் இருப்பதோடு, பொது நிலையினருள் அநேகமானோர் இச்செபம் தொடர்பாக ஒன்றும் அறியாதவர்களாக இருக்கின்றனர். ஆயினும் ஒவ்வொரு நாளும் தொடர்ந்து குடும்பமாகவும், தனியாகவும் அல்லது ஓர் அமைப்பு ரீதியாகவும் திருப்புகழ்மாலையைச் செபிக்க முடியுமேயானால் அது மிகவும் ஏற்புடையதாகும்.

## காலை மாலை திருப்புகழ்மாலையின் அமைப்பு

★ அழைப்பு

★ ஆரம்ப பாடல்

★ முதல்வர் : முன்மொழி 1

★ எல்லோரும் : முதலாவது திருப்பாடல்
திரித்துவப் புகழ்

★ முதல்வர் : முன்மொழி 2

★ எல்லோரும் : இரண்டாவது திருப்பாடல்
திரித்துவ புகழ்

★ முதல்வர் : முன்மொழி 3

★ எல்லோரும் : மூன்றாவது திருப்பாடல்
திரித்துவபுகழ்

★ அருள் வாக்கு

★ சிறு மறுமொழி

★ முதல்வர் : முன்மொழி (நற்செய்தி புகழ்ச்சிப் பாடலுக்கானது)

★ எல்லோரும் : செக்கரியாவின் பாடல் (காலை)

: மரியாவின் புகழ்ச்சிப் பாடல் (மாலை)

: திரித்துவ புகழ்

★ மன்றாட்டுக்கள்.

★ இயேசு கற்பித்த செபம்.

★ இறுதி மன்றாட்டு.

★ திருப்புகழ் மாலை நிறைவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செயற்பாடு**

1. 'திருப்புகழ்மாலை' என்ற பெயரால் இச் செபம் அழைக்கப்டுவதற்கான காரணம் யாது?

2. திருப்புகழ்மாலை செபிக்கப்படும் வேளைகள் நான்கையும் தருக.

3. திருப்புகழ்மாலையில் கட்டாயமாகப் பயன்படுத்தப்பட வேண்டிய திருவிவிலிய நூலின் பெயரை எழுதுக.

4. மாலை வேளை திருப்புகழ் மாலையின் முக்கியத்துவத்தை விளக்குக.

5. மாலை வேளை திருப்புகழ் மாலையைக் குறிக்கும் வேறு ஒரு பெயரைத் தருக.

**வாழ்க்கைக்கு**



மாலை ஆராதனையில் பங்கு பற்றி இறைவனைப் புகழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25 தியானம்

செபிக்கும்போது, உடலை எந்நிலையில் வைத்திருக்க வேண்டும் என்பது பற்றி மூவர் வாதாடிக்கொண்டிருந்தனர். செபிக்கும் போது முழந்தாட்படியிட்டு இருப்பது தான் சிறந்த நிலை என முதலாம் நபர் கூறினார். அதற்குப் பதிலாக இரண்டாம் நபர், நீர் கூறுவது சரியென உமக்குத் தோன்றலாம். ஆனால் ''முனிவர்கள் தியானத்தின் போது கால்களை மடித்துப் பாதங்களைக் குறுக்காக வைத்து நிலத்தில் அமர்ந்திருப்பர். இந்நிலைதான் சிறந்தது'' என்றார். மூன்றாம் நபர், ''நான் செபிக்கும்போது கண்களை மூடி வானத்தை நோக்கித் தலையை உயர்த்தி இறைவனை வேண்டுவேன்.'' என்றார் அவர்களுக்கருகாமையில் மின் கம்பத்தில் மின் இணைப்பைத் திருத்திக்கொண்டிருந்த ஒருவர் இவர்களின் உரையாடலுக்குச் செவிமடுத்துக்கொண்டிருந்தார். அவர் இவர்களிடம் ''நீங்கள் எதைக் கூறினாலும், எனது வாழ்க்கையில் அதிக நேரத்தை நான் செலவிடுவது மின் கம்பத்திலாகும். எனது வாழ்க்கை இறைவனின் கைகளில் தங்கியுள்ளது என நான் நம்புகிறேன். ஒரு காலில் தொங்கிக்கொண்டு நான் செபித்த சந்தர்ப்பங்களும் உண்டு.'' என்று கூறினார். நீங்கள் அந்த உடல் நிலையை எவ்வாறு அறிமுகம் செய்வீர்கள்? செபிக்கும்போது நாம் செபிக்க வேண்டிய இடம், உடல் நிலை என்பன முக்கியமானது அல்ல, மாறாக, மனதை ஒருநிலைப்படுத்திச் செபிப்பதே முக்கியமாகும். அதற்குச் சிறந்த வழி தியான முறையாகும். கிறிஸ்தவர்களாகிய நாம் தியானத்தில் எதிர்பார்ப்பது, மனதை ஒரு நிலைப்படுத்தல் மட்டுமல்ல. இறைவனோடு உறவுகொண்டு இறைவார்த்தையினால் ஊட்டம் பெற்று இறைவனில் ஒன்றிணைந்து அவரின் பிரசன்னத்தை உய்த்துணர்வதாகும். செபம், தியானம் ஆகியவற்றுக்கு இயேசு முன் உதாரணமாக இருக்கின்றார். (மாற் 1:35)

கத்தோலிக்கத் திருச்சபையின் மறைக்கல்வி நூலில் 2705 - 2706 இன் படி தியானம் என்பது தேடலாகும். இத்தேடலில் இரு முக்கிய விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

1. கிறிஸ்தவ வாழ்வின் குறிக்கோள்
2. கிறிஸ்தவ வாழ்வு வாழவேண்டிய முறை

தேடல் என்பதுஇறைவன் எம் ஒவ்வொருவரிடமும் எதிர்பார்ப்பதை அறிந்து அதற்குரிய பதிலை வெளிப்படுத்துவதாகும்.

தியானத்திற்காகப் பல்வேறு நூல்களைப் பயன்படுத்த முடியும். ஆனாலும் கத்தோலிக்கராகிய எமது தியானத்திற்கு மிகவும் அடித்தளமாக இருப்பது இறைவார்த்தைகள் அடங்கியுள்ள திருவிவிலியமாகும். தியானத்திற்காக இறைவார்த்தையை வாசித்து தியானிக்கும்போது அது எமக்குச் சவாலாக அமையும். அப்போது இறைவனிடம் ''ஆண்டவரே நான் செய்ய வேண்டியது என்ன?'' என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டு, அவர் செய்யவேண்டுமென கட்டளையிடுவதைச் செய்வதற்கு உறுதிகொள்ள வேண்டும். (தி.பா 1:2-3)

## தியானத்தின் வரலாறு

லெக்சியோ டிவீனா (LECTIO DIVINA) என்னும் தியான நிலை 16ம் நூற்றாண்டு வரை நடைமுறையிலிருந்த தியான முறையாகும். இது நான்கு படிமுறைகளைக் கொண்டது.

### 1ம் படிமுறை

லெக்சியோ (LECTIO என்பது வாசித்தல்) இப் படிமுறையில் திருவிவிலியத்தை வாசித்தல்.

### 2ம் படிமுறை

மெடிடாசியோ (MEDITATIO எனும் MEDITATE) இப் படிமுறையில் வாசிக்கப்பட்ட இறைவார்த்தையைத் தியானித்தல்.

### 3ம் படிமுறை

ஒராசியோ (ORATIO எனும் PRAY) இப் படிமுறையில் வாசிக்கப்பட்ட இறைவார்த்தையின் ஒளியில் செபித்தல்.

### 4ம் படிமுறை

கொண்டெம்பிலாசியோ (CONTEMPLATIO எனும் CONTEMPLATE) இப்படிமுறையில் தியானித்த இறைவார்த்தையின் மூலம் இறைவனில் ஒன்றித்து நிலைத்திருத்தல்.

தியானத்தில் உயர்நிலைக்கு வந்தவர்களால் மட்டுமே ஆழ்நிலைத் தியானத்தில் ஈடுபட முடியும். ஆகையால் ஒழுங்கமைக்கப்படட தியானம் (DISCURSIVE MEDITATION) அறிமுகம் செய்யப்பட்டது.

அதன் படிமுறைகள் இரண்டாகும்.

1. செவிமடுத்தல் :- இறைவார்த்தைக்குச் செவிமடுத்தல்.

2. தியானித்தல் :- இறைவார்த்தையைத் தியானித்து தமது வாழ்வில் அது எவ்வளவு தூரம் செயற்படுத்தப்படுகிறது எனத்தேடிப் பார்த்தல், அதன்படி குறைகளை அறிந்து தூய்மையான வாழ்வு வாழத் தீர்மானித்தல்.

17ஆம் நூற்றாண்டில் குவைட்ரிசம் (QUITISM) என்ற வேதபேதகம் உருவாகியது. ஆழ்நிலைத்தியான முறையின் நான்காம் படிமுறையான ஆண்டவரில் நிலைத்திருத்தல் என்பதே இவ் வேதபேதகத்தின் முக்கிய விடயமாயிருந்தது. அதன்படி திருவிவிலியத்திற்கு முக்கியத்துவம் வழங்காது ஆழ்நிலைத் தியானத்தில் ஈடுபடுதல் ஓர் குறைபாடாக இருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19ஆம் நூற்றாண்டில் ஜன்செனிசம் (JANSENISM) என்னும் பேதகம் தலை தூக்கியது. அப்பேதகம், இறை ஆசீரைப் பெற்றுக் கொள்ளுவதற்கு முற்றும் முழுமையாகத் தூய்மை நிலையிலிருக்க வேண்டும் என்றும், முழுமையின் உயர் நிலையை அடையாதவர்களுக்கு ஆழ்நிலைத்தியானத்தில் ஈடுபடமுடியாதென்றும் கற்பித்தது. ஆழ்நிலைத்தியானத்திற்குத் தாம் தகுதியுடையவர் எனச் சிந்திப்பதும் தவறானது என அவர்கள் கூறினார்கள்.

இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் தியானம் பற்றித் திருச்சபையில் மறுசீரமைப்பு ஏற்பட்டது. தூய அவிலா தெரேசாள், மற்றும் தூய சிலுவை அருளப்பர் ஆகியோரின் எழுத்தாக்கங்கள் இதற்குக் கூடுதலான பங்களிப்புச் செய்துள்ளன. அதேபோல் ரெப்பிஸ் (TRAPPISTS) ஆசீர்வாதப்பர் மற்றும் கார்மேல் துறவற சபையினரின் விழிப்புணர்வும் பெரும் பங்களிப்புச் செய்துள்ளன.

இலங்கையிலும் தியானத்தில் ஈடுபடுவோரை இன்று நாம் காணமுடிகின்றது நாமும் தியானத்தில் ஈடுபடுவது மிகவும் முக்கியமானது. அதற்காகப் பின்வரும் படிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

1. தினமும் அதிகாலையில் துயிலெழல்.
2. முகம் கழுவித் தூய்மையான பின்னர் ஒருடம்ளர் தண்ணீர் அல்லது தேநீர் அருந்துதல்.
3. இலகுவான முறையில் அமருதல்.
4. சுவாசப் பயிற்சியில் ஈடுபடுதல்.
5. புதிய நாளுக்காக நன்றிச் கூறிச் செபித்தல்.
6. அந்நாளுக்குரிய நற்செய்தி வாசகத்தை அல்லது திருவிவிலியப் பகுதியை வாசித்தல்.
7. அந்நற்செய்திப் பகுதியுடன் தனது வாழ்வை ஒப்பிட்டுப் பார்த்தல்.
8. நற்செய்தியின் படி வாழத்தவறிய சந்தர்ப்பங்களுக்காக ஆண்டவர் இயேசுவிடம் மன்னிப்புக் கேட்டல்.
9. எதிர்காலத்தில் நற்செய்தி தரும்படிப்பினையின் படி வாழத் தீர்மானம் எடுத்தல்.
10. அந்நற்செய்தியின் படி இன்னும் அதிகமாகச் செய்யக் கூடியவை தொடர்பாகச் சிந்தித்தல்.
11. குடும்பத்தினர், நண்பர்கள், பற்பல துன்பங்களின் மத்தியில் வாழ்வோரின் தேவைகளுக்காகச் செபித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. மீண்டும் சுவாசப் பயிற்சியில் ஈடுபடல்.

13. படிப்பதற்கு ஆரம்பித்தல்.

**தியானம் :**



கண்களை மூடிச் சிறிது நேரம் அசையாமல் இருங்கள் தூய ஆவியின் பாடலொன்றைப் பாடிக்கொண்டு தூய ஆவியின் செயற்பாட்டிற்கு இடமளியுங்கள். இறைவன் நம்மில் இருக்கிறார், நம்மில் செயலாற்றுகிறார் எனத் தியானியுங்கள்.

அந்நாளுக்குரிய வாசகத்தை வாசியுங்கள், அப்பகுதி உமக்குள் எதிரொலிக்க இடமளித்து சிறிது நேரம் மௌனமாக இருங்கள்.

அத்திருவிவிலியப் பகுதியை மீண்டும் வாசியுங்கள். அப்பகுதி உமக்குள் எதிரொலிக்க இடமளித்துச் சிறிது நேரம் மௌனமாக இருங்கள்.

அத்திருவிவிலியப் பகுதியை மூன்றாம் முறை மீண்டும் வாசியுங்கள், அப்பகுதியை வாசித்ததனால், அதிலிருந்து உமது உள்ளத்தைத் தொட்டதைப் பற்றித் தியானியுங்கள்.

மீண்டும் நான்காம் முறையாகவும் வாசியுங்கள். உம்மைத் தொடும் அளவிற்கு உம்மை அன்பு செய்த இறைவன் முன்னிலையில் தங்கியிருங்கள்.

சிறிது நேரம் சென்றபின் முழந்தாட்படியிட்டுக் கைகூப்பி செபியுங்கள்.

பாடல் ஒன்றைப் பாடுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செயற்பாடு**

1. தியானம் என்ற பதத்திற்கு வரைவிலக்கணம் கூறுக.

2. ஆழ் நிலைத் தியானத்தின் இரண்டு படிமுறைகளையும் எழுதுக.

**வாழ்க்கைக்கு**



தினமும் இறைவார்த்தையின் அடிப்படையில் தியானிக்கவும் ''தூய ஆவி உம்மீது வரும் உன்னதக் கடவுளின் வல்லமை உம்மேல் நிழலிடும்''

(லூக்கா 1:35)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# සිංහල වර්ණ මාලාව

| | | | | | |
|---|---|---|---|---|---|
| අ | ආ | ඇ | ඈ | ඉ | ඊ |
| උ | ඌ | ඍ | ඎ | ඏ | ඐ |
| එ | ඒ | ඓ | ඔ | ඕ | ඖ |
| (අ)ං | (අ)ඃ | | | | |
| ක | ඛ | ග | ඝ | ඞ | ඟ |
| ච | ඡ | ජ | ඣ | ඤ | ඦ |
| ට | ඨ | ඩ | ඪ | ණ | ඬ |
| ත | ථ | ද | ධ | න | ඳ |
| ප | ඵ | බ | භ | ම | ඹ |
| ය | ර | ල | ව | | |
| ශ | ෂ | ස | හ | ළ | ෆ |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



කතෝලික ධර්මය II (දෙ)

2016/T/11/236/12,000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

E.P.D. (SALES DIVISION)
P01
1020134
CATHOLICISM -GR 11 (T)
Rs. 168.00